REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK
E Paper

2024 ஏப்ரல் 20 சனிக்கிழமை

# தினகரன்

THINAKARAN 92 தினகரன்

வரு. 92 இல. 94 | Saturday 20, April, 2024 | 10பக்கங்கள் | 50/-

## Specified Skilled Worker திட்டத்தில் ஜப்பானில் வேலைவாய்ப்புகள்

**இன்று, நாளை மன்னாருக்கு வருமாறு அழைப்பு**



ஜப்பானில் தொழில்வாய்ப்பை பெற்று ஜப்பானிய கனவை நனவாக்க இன்று (20) மற்றும் நாளை (21) மன்னார் நகர சபை விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ள 'ஜயகமு ஸ்ரீலங்கா' மக்கள் நடமாடும் சேவையில் இணைந்து

06

## அமரர்களான தெவரப்பெரும, ஆரியரத்னவுக்கு ஜனாதிபதி ரணில் இறுதி அஞ்சலி





மறைந்த முன்னாள் ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினரும் முன்னாள் பிரதி அமைச்சருமான பாலித தெவரப்பெருமவின் பூதவுடலுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று (19) இறுதி அஞ்சலி செலுத்தினார்.

அவரது பூதவுடல் வைக்கப்பட்டுள்ள மத்துகம யடதொலவத்தையில் அவரது வீட்டுக்கு சென்ற ஜனாதிபதி, பூதவுடலுக்கு இறுதி அஞ்சலி செலுத்தியதுடன், குடும்ப உறுப்பினர்கள் மற்றும் பிரதேச வாசிகளுக்கு தனது அனுதாபத்தை தெரிவித்தார்.

இராஜாங்க அமைச்சர் பியல் நிஷாந்த, ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் பாராளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்தன உட்பட பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் ஐ.தே.க. செயற்பாட்டாளர்கள் ஆகியோர் உடன் சென்றிருந்தனர்.

06

**மாணவர்களுக்கான போசாக்கு திட்டம்**

## பாடசாலைகளுக்கு உணவு பொருட்கள் WFP இனால் வழங்கும் பணி நேற்று ஆரம்பம்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பணிப்புரைக்கமைய, பாடசாலை மாணவர்களுக்கு போசாக்குள்ள உணவு வழங்கும் நிகழ்ச்சித் திட்டத்துக்காக உலக உணவுத் திட்டத்தின் மூலம் பாடசாலைகளுக்கு வழங்கப்படும் செறிவூட்டப்பட்ட அரிசி (Fortified Rice) விநியோகம் நேற்று (19) வேயாங்கொடை உணவு களஞ்சிய வளாகத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

பாடசாலை மாணவர்களிடையே இரும்புச்சத்து குறைபாட்டை போக்கும் நோக்கில் பாடசாலை உணவுக்கு செறிவூட்டப்பட்ட

06




**சர்வதேச கடனீட்டு பத்திரதாரர்களுடன்**

## கலந்துரையாடல்களை நடத்த IMF இலங்கைக்கு ஆதரவளிக்க தயார்



சர்வதேச கடனீட்டு பத்திரதாரர்களுடனான (International Bondholders) இலங்கையின் கலந்துரையாடல்களுக்கு ஆதரவளிக்க சர்வதேச நாணய நிதியம் தயாராகவுள்ளதாகவும் கொள்கை ரீதியில் தற்காலிக உடன்பாட்டை எட்டிய பின்னர் முறையான மதிப்பீட்டை வழங்குமென்றும், சர்வதேச நாணய நிதியத்தின் ஊடகப் பேச்சாளர் நேற்று தெரிவித்தார்.

நாணய நிதியத்தின ஒத்துழைப்புத் திட்டத்தின் அளவுகோல்களுடன் இணக்கமான ஒப்பந்தம் இருக்குமென தாம் நம்புவதாக தெரிவித்த அவர், உத்தியோகபூர்வ கடனாளிகளினது செயற்பாடுகளின்

06

**நாட்டின் கடன் நிலைத்தன்மையை உறுதிப்படுத்துவதற்கு**

# சகல கடன் வழங்குநர்களுடனும் கொள்கை ரீதியான உடன்படிக்கை

**எட்ட முடியுமென அரசு நம்பிக்கையுடன் என்கிறார் ஷெஹான் சேமசிங்க**



இலங்கையின் கடன் நிலைத் தன்மையை உறுதிப்படுத்துவதற்கு அனைத்து கடன் வழங்குநர்களுடனும் கொள்கை ரீதியான உடன்படிக்கையை எட்ட முடியுமென அரசாங்கம் நம்புவதாக நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்தார்.

சர்வதேச ஊடகமொன்றுக்கு வழங்கிய விசேட நேர்காணலியே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அமெரிக்காவின் வொஷிங்டன் நகரில் நடைபெற்ற சர்வதேச நாணய நிதியத்தின் அமர்வின் சமகாலத்தில் நடைபெற்ற நேர்காணலில் கலந்து கொண்ட போதே இராஜாங்க அமைச்சர் இதனைக் குறிப்பிட்டார். மேலும் கருத்து தெரிவித்த நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க,

"உலகில் மிகக் குறைந்த வரி விதிக்கும் நாடுகளில் ஒன்றாக நாங்கள் பெயரிடப்பட்டுள்ளோம். ஆனால் இந்தத் திட்டத்தை அறிமுகப்படுத்திய தன் மூலம் நாங்கள் படிப்படியாக வரி வருவாயை அதிகரித்துள்ளோம். வரி செலுத்துவதிலிருந்து விலக்குகளை அகற்றியுள்ளோம்.

வரி இணக்கத்தை வலுப்படுத்தியுள்ளோம். 2023ஆம் ஆண்டு மொத்த உள்நாட்டு உற்பத்தி அரசாங்கத்தின் வருமானம் 11 சதவீதமாக அதிகரித்துள்ளது. இது அரசாங்கத்தின் வருமானத்தில் 8.1 சதவீதமாகும்.

2024 இல் அந்த எண்ணிக்கை 12 சதவீதமாக அதிகரிக்குமென எதிர்பார்க்கிறோம். அந்த இலக்கை அடைய முடியும் என்ற நம்பிக்கை எங்களுக்குள்ளது. தற்போது வரி விதிப்பின்மை 130 சதவீதத்தை எட்டியுள்ளது. வரி பதிவும் அதிகரித்துள்ளது. நல்ல மதிப்பாக இருந்தாலும் அதில் திருப்தி அடைய முடியாது.

வரி செலுத்த வேண்டிய அனைவரையும் வரி செலுத்துமாறு நாங்கள் அறிவுறுத்துகிறோம்" எனத் தெரிவித்தார்.

## மெய்வல்லுநர் ஜாம்பவான் எதிர்வீரசிங்கம் காலமானார்



இலங்கையின் முன்னாள் மெய்வல்லுநர் ஜாம்பவான் நாகலிங்கம் எதிர்வீரசிங்கம் தனது 89ஆவது வயதில் அமெரிக்காவில் காலமானார்.

யாழ். பெரியவிளானில் 1933ஆம் ஆண்டு ஓகஸ்ட் 24ஆம் திகதி பிறந்த இவர், யாழ். மத்திய கல்லூரியின் பழைய மாணவராவார். உயரம் பாய்தல் வீரரான நாகலிங்கம் எதிர்வீரசிங்கம், 1952ஆம், 1956ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டிகளில் இலங்கை சார்பாக பங்கேற்ற பெருமையை பெற்றிருந்தார். 1958ஆம் ஆண்டு ஜப்பானில்

06

## தோட்ட தொழிலாளரின் சம்பள உயர்வு கோரி இ.தொ.கா. ஏற்பாட்டில் கொழும்பில் ஆர்ப்பாட்டம்

**தோட்டத் தொழிலாளர்களின் அடிப்படை சம்பளத்தை 1,700 ரூபாவாக அதிகரிக்க வேண்டுமென்ற கோரிக்கையை முன்வைத்து கொழும்பு, கோட்டை ரயில் நிலையத்துக்கு முன்பாக ஆர்ப்பாட்ட பேரணி நேற்று நடைபெற்றது. இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் ஏற்பாடு செய்த இந்த ஆர்ப்பாட்டப் பேரணியில் பெருந்திரளான தோட்டத்**

06



**ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின்**

## வேலைத்திட்டத்தை ஏற்பதுடன் முழு ஆதரவையும் வழங்குவேன்

**ஐக்கிய மக்கள் சக்தி அசோக ஹேரத் தெரிவிப்பு**

வேறொரு கட்சியை தான் பிரதிநிதித்துவப்படுத்தினாலும், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வேலைத்திட்டத்தை ஏற்றுக்கொள்வதுடன், தான் அவ்வேலைத்திட்டத்துக்கு ஆதரவளிப்பதாகவும், ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற வேட்பாளர் அசோக ஹேரத் தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் நேற்று முன்தினம் (18) நுவரெலியா ஜனாதிபதி மாளிகையில் நுவரெலியா மாவட்ட இளைஞர் பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் இளம் அரசியல் பிரதிநிதிகள்

06

**கிளிநொச்சி நகரில் பாரிய அபிவிருத்திகள்**

## 'அனைவருக்கும் புகலிடம்' திட்டத்தின் கீழ் ரூ. 2,000 மில். செலவில் வீடமைப்பு



**ரூ. 3,200 மில். செலவில் 2,000 வீடுகள் - அமைச்சர் டக்ளஸ் தலைமையில் ஆராய்வு**

கிளிநொச்சி மாவட்டத்தில் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு 3,200 மில்லியன் ரூபா

06



## நாட்டின் சில பகுதிகளில் 12 மணிநேர நீர்வெட்டு

03

## இந்திய தேர்தலின் முதற்கட்டம் தமிழ்நாட்டில் நேற்று ஆரம்பம்

**அண்ணாமலை, ஸ்டாலின் உள்ளிட்டோர் வாக்களிப்பு**



இந்தியாவின் 18ஆவது பாராளுமன்றத்தை தெரிவு செய்வதற்கான தேர்தல் நேற்று (19) ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது. 07 கட்டங்களாக நடைபெறும் இத்தேர்தல் எதிர்வரும் ஜூன் மாதம் முதலாம் திகதியுடன் நிறைவடையவுள்ளன. முதற்கட்டமாக

06



## யாழ். பல்கலைக்கழக பொன்விழா; இன்றும் நாளையும் ஆய்வு மாநாடு



யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் பொன்விழாவை முன்னிட்டு முதலாவது சர்வதேச கல்வியியல் ஆய்வு மாநாடு இன்று சனிக்கிழமை (20), நாளை ஞாயிற்றுக்கிழமை (21) ஆகிய இரு தினங்களில் பல்கலைக்கழகத்தில் நடைபெறவுள்ளது. யாழ். பல்கலைக்கழகம் 'யாழ்ப்பாண வளாகம்' எனும் பெயரில் இலங்கை பல்கலைக்கழகத்தின் ஒரு

06

**ஆசிய அபிவிருத்தி வங்கியினால்**

## கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு அதிநவீன CT Scan இயந்திரம்



கொழும்பு தேசிய வைத்தியசாலையின் நரம்பியல் சத்திர சிகிச்சை பிரிவில் நிறுவப்பட்டுள்ள அதிநவீன

06

## இறைச்சிக்காக 17 ஆமைகளை பிடித்து வைத்திருந்த இருவர் கைது

**07 ஆமைகள் உயிருடன் மீட்பு**

*மட்டக்களப்பு குறூப் நிருபர்*

மட்டக்களப்பு, காத்தான்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கல்லடி தரிசனம் பாடசாலை வீதியில் அமைந்துள்ள

06



## நீரிழிவு நோயால் பாடசாலை மாணவர்கள் பாதிப்பு?

**விரைவில் கணக்கெடுப்பு**

**நீரிழிவு நோயால் பாடசாலை மாணவர்கள் பாதிக்கப்பட்டுள்ளதை கண்டறிவதற்கான விசேட கணக்கெடுப்பு எதிர்வரும் நாட்களில் நடத்தப்படுமென, சமூக மருத்துவ நிபுணர் ஷெரின்**

06



## அருட்தந்தை சிறில் காமினி CIDயில் நேற்று வாக்குமூலம்

குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் கொழும்பு பேராயர் இல்லத்தின் ஊடகப் பேச்சாளர் அருட்தந்தை சிறில் காமினி நேற்று (19) வாக்குமூலம் அளித்துள்ளார்.

குற்றப் புலனாய்வு திணைக்களம் அவருக்கு விடுத்த அழைப்புக்கமைய அவர் நேற்று அங்கு சென்றிருந்தார்.

06



# கிராமிய பாடசாலைகளின் விளையாட்டுத் துறையை மேம்படுத்த நடவடிக்கை



கிராமிய பாடசாலைகளின் விளையாட்டுத் துறையை மேம்படுத்தும் நோக்கில் விளையாட்டுத்துறை அமைச்சினால் கிளிநொச்சி மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட ஐந்து பாடசாலைகளுக்கு விளையாட்டு உபகரணங்கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் வழங்கிவைக்கப்பட்டன.

கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கலந்துகொண்டு விளையாட்டு உபகரணங்களை பாடசாலைகளுக்கு வழங்கி வைத்தார்.

இந்நிகழ்வில் கிளிநொச்சி மாவட்டபதில் அரச அதிபர் நளாயினி, மேலதிக அரச அதிபர் முரளிதரன் (காணி), மாவட்டத்தின் கல்விப் பணிப்பாளர், பிரதேச செயலாளர்கள், கல்விசார் உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

# இலக்கிய சுடர் இராமலிங்கம் பங்கேற்கும் சிந்தனை அரங்கம்



அறிவாலயம் ஆளுமை விருத்தியகத்தின் ஏற்பாட்டில் தமிழகத்தின் பிரபல பேச்சாளர் இலக்கிய சுடர் இராமலிங்கம் பங்கேற்கும் சிந்தனை அரங்கம் அண்மையில் செந்தமிழ்ச் சொல்லருவி சந்திரமௌலீசன் லலீசன் தலைமையில் யாழில் நடைபெற்றது.

விவசாய அமைச்சின் உத்தியோகத்தர் நடராஜா ஐங்கரனின் முன்னிலைப்படுத்தலில் நடைபெற்ற இந்நிகழ்வில் நல்லை ஆதீன முதல்வர் ஆசியுரை வழங்கினார்.

தமிழி அமைப்பின் பெருந்தலைவர் நிகேதன் வரவேற்புரை ஆற்றினார்.

இந்நிகழ்வில் இளைஞர்களின் எதிர்காலத்தை சிறப்பாக செப்பனிடுவது வீட்டுச் சூழலே என தென்னாடு பத்திரிகை ஆசிரியர் ஜீவா சஜீவனும் கல்வி சூழலே என கிழக்கு பல்கலைக்கழக மருத்துவ பீட மாணவி கிளிநொச்சி அபிராமியும் நட்புச் சூழலே என பேராதனை பல்கலைக்கழக உதவி விரிவுரையாளர் சாரங்கனும் சமுதாய சூழலே என தமிழ்நாடு தேவகோட்டை யோகேஸ்குமாரும் கருத்துரைத்தனர்.

இந்நிகழ்வில் இலக்கிய சுடர் இராமலிங்கம் நடுவராக செயற்பட்டார். இலக்கிய சுடரை கல்விக் காருண்யன் ஈ.எஸ்.பி. நாகரத்தினமும் கோப்பாய் ஆசிரியர் கலாசாலை சிரேஷ்ட விரிவுரையாளர் கு.பாலசண்முகனும் பொன்னாடை போர்த்தி மாலை அணிவித்து கௌரவித்தனர். இந்நிகழ்வில் நூற்றுக்கணக்கான இலக்கிய ஆர்வலர்கள் பங்குபற்றினர்.



யாழ்ப்பாணத்துக்கு கொண்டுவரப்பட்ட மடுமாதா திருச்சொரூபம் நேற்று பருத்தித்துறை புனித தோமையப்பர் ஆலயத்திலிருந்து மணற்காடு புனித அந்தோனியார் ஆலயத்திற்கு பேரணியாக கொண்டுவரப்பட்டது. இதன்போது மணற்காட்டில் பெண்கள் பூரண கும்பம் ஏந்தி மடுமாதாவை வரவேற்றதுடன் நடனங்களும் நடைபெற்றன.
மணற்காடு புனித அந்தோனியார் ஆலயத்தில் மடுமாதாவுக்கான விசேட வழிபாடுகள், நற்கருணை ஆராதனைகள் என்பன நடைபெற்றன.
(படங்கள் :நாகர்கோவில் விசேட நிருபர்)

# வடக்கின் உதயம்

## காங்கேசன்துறையில் பிராந்திய உயிர்காப்பு நீச்சல் பிரிவு

(யாழ்.விசேட நிருபர்)



யாழ்ப்பாணம் காங்கேசன்துறை பகுதியில் பொலிஸாரினால் பிராந்திய உயிர்காப்பு நீச்சல் பிரிவு ஸ்தாபிக்கப்பட்டது.

காங்கேசன்துறை கடற்கரைப் பகுதியில் உருவாக்கப்பட்ட நிலையத்தை வடக்கு மாகாண பிரதிப் பொலிஸ் மா அதிபர் திலக்.சி.ஏ. தனபால நேற்றையதினம் வெள்ளிக்கிழமை திறந்துவைத்தார்.

கடற்கரையில் குளிக்கும் போது, விளையாட்டுக்களில் ஈடுபடும் போது உயிரிழப்புகள் மற்றும் அசம்பாவிதங்கள் ஏற்படாது தடுக்கும் வகையில் இப்பிரிவு செயற்படவுள்ளது.

இதன்போது அப்பகுதியில் குற்றச்செயல்களை கட்டுப்படுத்தும் வகையில் பொலிஸ் காவலரணும் திறந்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் காங்கேசன்துறை பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர், உதவி பொலிஸ் அத்தியட்சகர்கள், காங்கேசன்துறை பிராந்திய பொலிஸ் நிலையங்களின் பொறுப்பதிகாரிகள், பொலிஸ் உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

# வவுனியா வைத்தியசாலை குருதித் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்ய நடவடிக்கை

(வவுனியா விசேட நிருபர்)

வவுனியா வைத்தியசாலையில் நிலவும் குருதித் தட்டுப்பாட்டையடுத்து குருதி கொடை வழங்கும் நிகழ்வு வவுனியாவில் நடைபெற்றது.

வவுனியா, குருமன்காடு காளி கோவில் வீதியில் அமைந்துள்ள தனியார் பல்கலைக்கழகமொன்றில் நேற்று இந்நிகழ்வு நடைபெற்றது.

வவுனியா, வைத்தியசாலை இரத்த வங்கியில் குருதித் தட்டுப்பாடு காணப்படுவதாக வைத்தியசாலை நிர்வாகத்தினர் தெரிவித்திருந்தனர். இதனையடுத்து வவுனியா, குருமன்காடு, காளி கோவில் வீதியில் அமைந்துள்ள தனியார் பல்கலைக்கழகத்தின் ஏற்பாட்டில் இரத்ததான நிகழ்வு நடைபெற்றது.

இதில் இளைஞர், யுவதிகள் பலரும் தாமாகவே முன்வந்து இரத்ததானம் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு ஒருவர் கொலை

வாடகைக்கு தங்கியிருந்த நபர் ஒருவர் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு நேற்றுமுன்தினம் (18) இரவு கொலை செய்யப்பட்டுள்ளார்.

எம்பிலிபிட்டிய மடுவன் வெல பிரதேசத்திலுள்ள வீடொன்றில் வசித்துவந்த 71 வயதுடைய நபரே இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளார்.

இவர் கேல்ல, கொலன்னா பகுதியைச் சேர்ந்தவர்.

வாடகை வீட்டில் தனியாக வசித்து வந்த இவர் தென்னை நார் உற்பத்தி தொழில் செய்து வந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இச்சம்பவம் தொடர்பில் எம்பிலிபிட்டிய பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# நீர்வெறுப்பு நோய்க்காக வருடாந்தம் ஒரு இலட்சம் பேருக்கு தடுப்பூசி விநியோகம்

(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)

இலங்கையில் நீர்வெறுப்பு (நாய்க்கடி) நோய்க்காக வருடாந்தம் ஒரு இலட்சம் பேருக்கு தடுப்பூசி வழங்கப்படுவதாக வைத்தியர் அனுர திலக் குமார நேற்று (19) தெரிவித்தார்.

இரத்தினபுரி மாவட்டத்தில் தீவிரமாக அதிகரித்து வரும் நீர்வெறுப்பு நோயை கட்டுப்படுத்த பல்வேறு வேலைத்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அந்தவகையில் இதுதொடர்பில் நடைபெற்ற விழிப்புணர்வு கூட்டத்தில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

நாய் கடித்தால் அதற்கென தனியான மருந்து வகைகள் இல்லை. நாய்க்கடிக்கு தடுப்பூசிகள் மட்டுமே வழங்கப்பட்டு வருகின்றன. நீர்வெறுப்பு நோயானது மிருகங்களிடமிருந்து மனிதனுக்குக் கடத்தப்படுகிறது. எவ்வாறெனில், ஒரு வைரஸான Rabies Virus ஆனது தங்கி வாழ்வதற்கான சிறந்த இடமாக விலங்குகளின் உடல் காணப்படுகின்றது.

இவ்வகையான வைரஸினால் பீடிக்கப்பட்ட விலங்குகளிலிருந்து மனிதனுக்கு கடத்தப்படுவதன் மூலம் ஏற்படும் இறப்புக்களில் 95 வீதத்துக்கு மேலான இறப்பானது நாய்க்கடியினால் ஏற்படுகிறது. எனவே உங்கள் செல்லப் பிராணிகளுக்கு எல்லா தடுப்பூசிகளையும் போட வேண்டும். தடுப்பூசி அட்டை முழுமையாக பதிவு செய்யப்பட வேண்டும். முறையாக உடல்நலப் பரிசோதனை செய்ய வேண்டுமென அவர் தெரிவித்தார்.



# மலைச்சாரல்

இராஜாங்க அமைச்சர் அரவிந்தகுமாரின் நிதி ஒதுக்கீட்டில்

## பரணகம தோட்டத்துக்கான மறுசீரமைக்கப்பட்ட மின்திட்டம்

கல்வி இராஜாங்க அமைச்சர் அருணாச்சலம் அரவிந்தகுமாரின் நிதி ஒதுக்கீட்டின் கீழ், மூன்றரை கோடி ரூபா செலவில், வெலிமடை, ஊவா பரணகம பெகின்டன் தோட்டத்துக்கான மறுசீரமைக்கப்பட்ட மின்திட்டத்தை, கல்வி இராஜாங்க அமைச்சர் அரவிந்தகுமார் மக்கள் பாவனைக்காக கையளித்தார்.

குறைவான மின்வலு காரணமாக, சுமார் 500 குடும்பத்துக்கு அதிகமானவர்கள், நீண்டகாலமாக பல்வேறு சிரமத்துக்கு மத்தியில் வாழ்ந்துவருகின்றனர்.



புதிய மின்மாற்றி (Transformer), புதிய மின்கம்பங்கள், புதிய மின்கம்பிகள் போன்றவற்றினால் மின்வலு அதிகரிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# ரயில் விபத்தில் குடும்பஸ்தர் பலி

(ஏறாவூர் நிருபர்)

மட்டக்களப்பு வந்தாறுமூலை பிரதேசத்தில் இடம்பெற்ற ரயில் விபத்தில் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

வந்தாறுமூலைப் பகுதியைச் சேர்ந்த ஏழு பிள்ளைகளின் தந்தையான 58 வயதுடைய நடராசா சிவசுப்ரமணியம் என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக அடையாளம் காணப்பட்டுள்ளார். இவரது தலையில் பலத்த காயம் ஏற்பட்டுள்ளது.

திடீர் மரணவிசாரணை அதிகாரி முதற்கட்ட விசாரணைகளை மேற்கொண்டார். இதனையடுத்து சடலம் உடற்கூறு பரிசோதனைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டது. ஏறாவூர் பொலிஸார் இச்சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர்.

# மஸ்கெலியா சாமிமலை பெயாலோன் கல்லூரி சித்திரை புத்தாண்டு விளையாட்டுப் போட்டிகள்

(மஸ்கெலியா தினகரன் விசேட நிருபர்)

இன நல்லிணக்கத்தை கட்டியெழுப்பும் வகையில் மஸ்கெலியா சாமிமலை பெயாலோன் கல்லூரியில் கல்வி பயிலும் தொழிலாளர் குடும்பங்களின் பிள்ளைகளுக்கான சித்திரை புத்தாண்டு விளையாட்டுப் போட்டிகள் கல்லூரி விளையாட்டரங்கில் நேற்றுமுன்தினம் (18) காலை முதல் மாலை வரை நடைபெற்றது. நோட்டன் விவசாய சேவைகள் திணைக்களத்தின் பணிப்புரையின் பேரில் சாமிமலை விவசாய ஆராய்ச்சி உற்பத்தி உதவியாளர் சரத் குமாரவின் ஏற்பாட்டியில் இந்நிகழ்வு நடைபெற்றது. தமிழ் சிங்கள தேசிய விளையாட்டு மற்றும் கலாசார அம்சங்களுக்கு முன்னுரிமையளித்து இந்நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்தை வளர்ப்பதற்கு பெரும் உதவியாக உள்ளதாக பாடசாலை அதிபர் தெரிவித்தார்.

# ஊவா மாகாண பட்டதாரி இளைஞர் யுவதிகள் கவனயீர்ப்பு போராட்டம்

(லுணுகல நிருபர்)

ஊவா மாகாண பட்டதாரி இளைஞர், யுவதிகள் நேற்றுமுன்தினம் கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர். பல்கலைக்கழக கற்கைநெறியை நிறைவு செய்து பட்டதாரிகளாக வெளியேறி நான்குவருடங்கள் கடந்துவிட்ட போதும் தமக்கான தொழில் வாய்ப்புகளை இதுவரை வழங்கவில்லையென அவர்கள் தெரிவித்தனர். எனவே தமக்கான தொழில்வாய்ப்புகளை வழங்குமாறு அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுக்கும் வகையில் இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டதாக தெரிவித்தனர். இதுதொடர்பில் உரிய அதிகாரிகள் கவனம் செலுத்தி வேலைவாய்ப்புகளை பெற்றுத்தருமாறு வேண்டுகோள் விடுத்தனர்.



# போதைப்பொருள் வியாபாரிகளுடன் தொடர்புடைய இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்கள் கைது

போதைப்பொருள் வியாபாரிகளுடன் தொடர்பிலிருந்த சந்தேகத்தின் பேரில் இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்களை குற்றப் புலனாய்வுப் பிரிவினர் நேற்று முன்தினம் (18) கைது செய்துள்ளனர்.

மாவத்தகம பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் உப பொலிஸ் பரிசோதகர் ஒருவரும் தொருட்டியாவ பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றிய சார்ஜன்ட் ஒருவருமே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர். சந்தேகநபர்கள் குற்றப் புலனாய்வு திணைக்களத்தில் வைத்து விசாரணைக்கு உட்படுத்தப்படவுள்ளதாக பொலிஸ் தலைமையகம் மேலும் தெரிவித்துள்ளது.



ஹப்புத்தளை தங்கமலை தோட்ட இளைஞர்களின் ஏற்பாட்டில் நடைபெற்ற சித்திரைப் புத்தாண்டு கலை கலாசார விளையாட்டுப் போட்டி, தோட்ட மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. முன்னாள் ஹப்புத்தளைப் பிரதேச சபை உறுப்பினர்களான கலை மற்றும் மஹேந்திரன் ஆகியோர் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பெருந்தொகையானோர் கலந்து சிறப்பித்தனர். (படம்: ஊவா சுழற்சி நிருபர்)

தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2024 ஏப்ரல் 20 சனிக்கிழமை
தினகரன்
THINAKARAN
තිනකරන්

தொழுகை நேரம்
சுபஹ் - 04.44
ளுஹர் - 12.11
அஸர் - 03.21
மஃரிப் - 06.19
இஷா - 07.30

இன்றைய சுபதினம்
குரோதி வருடம் சித்திரை 07
ராகுகாலம் : காலை : 9.02 - 10.32வரை
சுபநேரம் : மாலை : 3.02 - 4.32வரை
யோகம்: சித்தயோகம்
திதி: சஷ்டி



# சிறிய, நடுத்தர தொழில் முயற்சியாளர் உற்பத்தி அபிவிருத்திக்காக ஒப்பந்தம்

## மதர் ஸ்ரீலங்காவுடன் கைத்தொழில் அபிவிருத்தி சபை கைச்சாத்து

இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபையும் மதர் ஸ்ரீலங்காவும் இணைந்து சிறிய, நடுத்தர தொழில் முயற்சியாளர்களின் அபிவிருத்திக்கான ஒப்பந்தத்தை செய்து கொண்டுள்ளன.

மதர் ஸ்ரீலங்கா திட்டத்தின் சிறிய, நடுத்தர தொழில் முயற்சியாளர்களின் உற்பத்தி கைத்தொழில் அபிவிருத்திக்காக இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபைக்கு பூரண ஆதரவு வழங்குவதற்கான இப்புரிந்துணர்வு ஒப்பந்தம் அண்மையில் பத்தரமுல்லையிலுள்ள 'அபே கம' கிராம வளாகத்தில் கைச்சாத்தானது.

இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபைத் தலைவர் கலாநிதி சாரங்க அழகப்பெரும, மதர் ஸ்ரீலங்கா திட்டத் தலைவர் ஜானகி




குருப்பு ஆகியோர் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டனர். புரிந்துணர்வு ஒப்பந்தத்துக்கமைய மதர் ஸ்ரீலங்கா திட்டத்தின் சிறிய, நடுத்தர தொழில் முனைவோருக்கு தேவையான அறிவு, பயிற்சி, அரசாங்கத்தின் ஒத்துழைப்பு வழங்கப்படுவதுடன், சிலோன் பிளாசா வணிகத்தளமூடாக பொருட்களை விற்பனை செய்ய, ஊக்குவிக்க, விளம்பரப்படுத்த, சந்தையை கண்டறிய ஒத்துழைப்பும் உதவியும் வழங்கப்படுகிறது.

# கடற்றொழிலாளருக்கான புதிய சட்டம்; வரைபு குறித்து யாழில் கலந்துரையாடல்





கடற்றொழிலாளர்களுக்கான புதிய சட்டமூல வரைபு தொடர்பாக விசேட கலந்துரையாடல், யாழ்ப்பாணத்திலுள்ள தனியார் விருந்தினர் விடுதியொன்றில் நேற்று (19) நடைபெற்றது.

வெவ்வேறு வடிவங்களில் வெவ்வேறு புத்தக வடிவிலிருக்கும் கடற்றொழில் சட்டங்களை ஒன்றிணைத்து தற்காலத்துக்கேற்ற வகையில் கடற்றொழில் நடவடிக்கைக்காக தயாரிக்கப்படும் புதிய சட்டமூல வரைபு தொடர்பாக கலந்துரையாடப்பட்டது.

யாழ். மாவட்ட கடற்றொழில் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் சுதாகரனின் ஒழுங்குபடுத்தலின் கீழ் இக்கலந்துரையாடல் நடைபெற்றதுடன், இப்புதிய சட்டமூலம் தொடர்பாக கடற்றொழில் திணைக்கள பணிப்பாளர் நாயகத்துடன் இணைந்து கடற்றொழில் அமைச்சின் சிரேஷ்ட ஆலோசகர் தவராசா வளவாளராக கலந்து கொண்டு ஆலோசனை வழங்கினார்.

மீன்பிடி நடவடிக்கை உரிமம் வழங்கலிலுள்ள பொதுவான கோட்பாடுகள், மீன்பிடி உரிமத்தின் கால எல்லை, மீன்பிடி நடவடிக்கை உரிமங்களின் கைமாற்றம், வெளிநாட்டு கலன்கள் மூலம் இலங்கை கடற்பரப்பில் மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபடுவதை தடை செய்தல் அல்லது கட்டுப்படுத்தல், இலங்கை கடற்பரப்பில் மீன்பிடி நடவடிக்கைகளை நடத்துவதற்கான மீன்பிடி உரிமத்தை புதுப்பித்தல் போன்ற பல்வேறு விடயங்கள் தொடர்பாக இதன்போது கலந்துரையாடப்பட்டது.

அமைச்சின் துறைசார் உத்தியோகத்தர்கள், அமைச்சின் சட்ட ஆலோசகர், துறைசார் வல்லுநர்கள், சமாச உறுப்பினர்கள், யாழ். மாவட்ட கடற்றொழில் சங்க உறுப்பினர்களாகிய பலர் இதில் கலந்துகொண்டனர்.



மொரட்டுவை சர்வோதய தலைமையகத்தில் வைக்கப்பட்டுள்ள சர்வோதய ஸ்தாபகரான அமரர் கலாநிதி ஏ.ரி.ஆரியரட்ணவின் பூதவுடலுக்கு பிரதமர் தினேஷ் குணவர்தன இறுதி அஞ்சலி செலுத்திய போது பிடிக்கப்பட்ட படம். **(படம்: சுதத் நிஷாந்த)**

## கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் அறிவோர் ஒன்றுகூடல் நிகழ்வு

கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் சங்கரப்பிள்ளை மண்டபத்தில் எதிர்வரும் புதன்கிழமை (24) மாலை 5.30 மணிக்கு சமூக மேம்பாட்டுக் குழுவின் அறிவோர் ஒன்றுகூடல் 05 நிகழ்வு நடைபெறவுள்ளது.

மேல் நீதிமன்ற ஓய்வுநிலை நீதிபதி ஜெ.விஸ்வநாதன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் 'சமூக மேம்பாட்டில் சட்டங்களின் வகிபாகம்' எனும் தலைப்பில் யாழ்ப்பாண பல்கலைக்கழக சட்டபீட தலைவர் கோசலை மதன் உரையாற்றவுள்ளார்.



# அனைத்து தரப்பினரும் ஆதரவு வழங்க வேண்டியது அவசியம்

ஹற்றன் சுழற்சி நிருபர்



மலையக பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு சம்பள உயர்வை பெற்றுக்கொடுக்க இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸால் முன்னெடுக்கப்பட்டு வரும் தொழிற்சங்க நடவடிக்கைக்கு அனைத்து தரப்பினரும் ஆதரவு வழங்க வேண்டுமென, இ.தொ.கா. தவிசாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான மருதபாண்டி ராமேஷ்வரன் வலியுறுத்தினார்.

கொழும்பில் இ.தொ.கா.வால் முன்னெடுக்கப்பட்ட போராட்டத்தை தொடர்ந்து நுவரெலியா, பதுளை, இரத்தினபுரி, மாத்தளை மாவட்டங்களிலும் தொழிற்சங்க நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளதாகவும், அவர் கூறினார்.

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு 1,700 ரூபா சம்பள உயர்வை பெற்றுக்கொடுக்க இ.தொ.கா. தீவிர முயற்சி எடுத்துள்ளதுடன், இது தொடர்பாக கம்பனிகளுக்கு சம்பள நிர்ணய சபை மற்றும் தொழில் அமைச்சினூடாக அழுத்தம் பிரயோகிக்கப்படுகிறது.

எதிர்வரும் புதன்கிழமை (24) சம்பள நிர்ணயசபை கூடவுள்ளதுடன், இதன்போது சாதகமான முடிவு கிட்டுமென நம்புவதாகவும், அவர் கூறினார்.

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கான சம்பள உயர்வை வென்றெடுக்க தொழிற்சங்கங்கள் ஒன்றுபட வேண்டுமென்பதுடன், தொழிலாளர்களும் இதை எதிர்பார்க்கின்றனர். தொழிலாளர்களின் நலன் கருதி இ.தொ.கா. அனைவரையும் அரவணைத்துக்கொண்டு தொழிற்சங்க சமரை முன்னெடுக்க எதிர்பார்க்கிறது. தேர்தல் காலத்தில் அரசியல் செய்யலாம். சம்பள விடயத்தில் அரசியலை திணிக்க வேண்டாமெனவும், அவர் மேலும் தெரிவித்தார்.



இந்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் மற்றும் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவல் ஆகியோரை பாத்ஃபைண்டர் நிலையத்தின் ஸ்தாபகர் மிலிந்த மொரகொட புதுடில்லியில் நேற்று சந்தித்து கலந்துரையாடினார். இந்தியாவுக்கு அவர் விஜயம் செய்துள்ள நிலையிலேயே இச்சந்திப்பு இடம்பெற்றது.


## கல்வி நிர்வாக சேவைக்கான பரீட்சை பெறுபேறு வெளியீடு

இலங்கை கல்வி நிர்வாக சேவைக்கான கடந்த வருடம் நடத்தப்பட்ட பரீட்சை பெறுபேறுகள் நேற்று (19) வெளியாகின.

இப்பரீட்சையில் 735 பேர் சித்தி பெற்றுள்ளதுடன், பரீட்சை திணைக்களத்தின் https://www.doenets.lk எனும் இணையத்தளத்தில் சித்தி பெற்றுள்ளோரின் விபரங்களை பார்வையிட முடியுமென, பரீட்சைத் திணைக்களம் தெரிவித்தது.

இவர்களில் 440 பேரை நேர்முகத் தேர்வின் அடிப்படையில் கல்வி நிர்வாக சேவையில் இணைத்துக்கொள்ளவுள்ளதாகவும், பரீட்சை திணைக்களம் மேலும் தெரிவித்தது.

## நாட்டின் சில பகுதிகளில் 12 மணி நேர நீர்வெட்டு



நாட்டின் சில பகுதிகளில் எதிர்வரும் புதன்கிழமை (24) காலை 8.30 மணி முதல் இரவு 8.30 மணிவரை 12 மணித்தியால நீர்வெட்டு அமுல்படுத்தப்படவுள்ளதாக, தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை அறிவித்துள்ளது. இதற்கமைய பேலியகொடை, வத்தளை, ஜாஎல, கட்டுநாயக்கா, சீதுவை, களனி, பியகம, மஹர, கந்தானை, மினுவாங்கொடை ஆகிய பகுதிகளிலேயே நீர்வெட்டு அமுல்படுத்தப்படவுள்ளதாகவும், அச்சபை மேலும் தெரிவித்தது.


இதனால் பொதுமக்களுக்கு ஏற்படும் சிரமத்துக்கு வருந்துவதாகவும், தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை குறிப்பிட்டது.

# நாடளாவிய ரீதியிலான விசேட சுற்றிவளைப்பில் 07 பேர் கைது

## பாதாள உலகக் குழு என சந்தேகம்

நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பின் போது பாதாள உலக குழுக்களைச் சேர்ந்த 07 பேர் (18) கைது செய்யப்பட்டதாக, பொலிஸார் தெரிவித்தனர்.

பாதாள உலக குழுக்களின் செயற்பாடுகளை ஒடுக்குவதற்காக உருவாக்கப்பட்ட குழுவினர் இச்சுற்றிவளைப்பை நடத்தியதுடன், இதன்போது பாதாள உலக குழுக்களைச் சேர்ந்தவர்களுடன் நெருங்கிய தொடர்பை பேணிய 10 சந்தேகநபர்களும் கைது செய்யப்பட்டனர்.



பேலியகொடையில் மேல் மாகாணத்தின் வடபிராந்திய பொலிஸ் குற்றத்தடுப்பு பிரிவினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் மொரட்டுவையைச் சேர்ந்த 34 வயது சந்தேகநபரொருவர் கைது செய்யப்பட்டார்.

ஹங்வெல்ல, தலங்கம, வெல்லம்பிட்டியவில் மேல் மாகாணத்தின் தெற்கு பிராந்திய பொலிஸ் குற்றத்தடுப்பு பிரிவினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் ரணால, நுகேகொடை மற்றும் ஒருகொடவத்தையைச் சேர்ந்த 22, 23, 40, 43 வயதுடைய 04 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர்.

கொழும்பு பொலிஸ் குற்றத்தடுப்பு பிரிவினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் பல்லேகெலவைச் சேர்ந்த 45 வயது சந்தேகநபரொருவர் கைது செய்யப்பட்டார்.

மிட்டியாகொடவில் காலி பொலிஸ் குற்றத்தடுப்பு பிரிவினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் அதே இடத்தைச் சேர்ந்த 33 வயது சந்தேகநபரொருவர் கைது செய்யப்பட்டார்.

கடந்த மாதம் 19ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட இச்சுற்றிவளைப்பில் பாதாள உலக குற்றக் குழுக்களைச் சேர்ந்த 483 சந்தேகநபர்கள் இதுவரை கைது செய்யப்பட்டதாகவும், பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

# பதுளை - வெலிமடை வீதியில் அரிசி லொறி கவிழ்ந்து விபத்து

## இருவர் படுகாயம்



பதுளை வெலிமடை வீதியில் அடம்பிட்டிய வெல்லவெல பிரதேசத்தில் நேற்று (19) பிற்பகல் அரிசி லொறியொன்று வீதியில் கவிழ்ந்ததில், இருவர் படுகாயமடைந்து பதுளை போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக, பொலிஸார் தெரிவித்தனர்.

அம்பாறையிலிருந்து வெலிமடை நோக்கி அரிசி ஏற்றிக்கொண்டு சென்ற இந்த லொறியில் மூன்று பேர் பயணித்ததாகவும் சாரதிக்கு வேகத்தை கட்டுப்படுத்த முடியாமல் போன போது லொறி கவிழ்ந்ததாகவும், பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து தொடர்பாக பண்டாரவளை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பிரதீப் களுபஹனவின் பணிப்புரைக்கமைய, அடம்பிட்டிய பொலிஸ் நிலைய பிரதான பொலிஸ் பரிசோதகர் தலைமையில் விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

**(பதுளை நிஷாந்த அபேகுணவர்தன)**

# இணையவழியூடான கடவுச்சீட்டு விண்ணப்பங்கள் பல நிராகரிப்பு




இணையவழி மூலம் கடவுச்சீட்டுக்கு விண்ணப்பித்தவர்களில் பலரது விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டுள்ளதாக, குடிவரவு மற்றும் குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நாயகம் ஹர்ஷ இலுக்பிட்டிய தெரிவித்தார்.

தொழில்நுட்ப அறிவு இல்லாததாலும், சில ஆவணங்கள் முறைசாரா முறையில் புதுப்பிக்கப்பட்டதாலும், அவர்களின் கடவுச்சீட்டு அச்சிடுவதில் தாமதம் ஏற்பட்டுள்ளதாகவும், அவர் கூறினார்.

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் வியானி குணதிலக்க தலைமையில் பொது பாதுகாப்பு அமைச்சில் நடைபெற்ற நேற்று முன்தினம் (18) ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்ட குடிவரவு மற்றும் குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நாயகம் இந்த விடயங்கள் குறிப்பிட்டார்.

இதன் அடிப்படையில் 75 வீதமான விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன. இணையவழி கடவுச்சீட்டு விண்ணப்ப முறை அறிமுகப்படுத்தப்பட்டதை அடுத்து 51 பிரதேச செயலக அலுவலகங்களில் கைரேகை பதிவு செய்யும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதனால் 03 நாள் மற்றும் சாதாரண சேவைகளின் கீழ் கடவுச்சீட்டு விண்ணப்பங்களை மேற்கொள்ள முடியுமென்றும், அவர் கூறினார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்த போது,

"பொதுச் சேவைகளின் கீழ் 192,041 பேர் விண்ணப்பித்துள்ளனர். அவர்களில் 90,817 பேரது கைரேகை பிரதேச செயலகங்களால் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இவர்களுள் 55,600 பேரின் கடவுச்சீட்டுகள் அச்சிடப்பட்டன. மேலும் 03 நாள் விரைவு சேவையின் கீழ் 22,471 பேர் இணையவழியில் விண்ணப்பங்களை சமர்ப்பித்துள்ளனர். அவர்களில் 18,770 பேரின் கைரேகைகள் பிரதேச செயலகங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளன. 17,904 பேரின் பேரின் கடவுச்சீட்டுகள் அச்சிடப்பட்டுள்ளன.

இணையவழியில் விண்ணப்பிக்கும் போது சிலர் பிறப்புச் சான்றிதழ், தேசிய அடையாள அட்டை புகைப்படங்களை தெளிவற்ற முறையில் பயன்படுத்தியிருப்பதாலும், சிலர் வேறு நபர்களின் கையடக்க தொலைபேசி எண்களில் விண்ணப்பித்திருப்பதாலும் செல்லுபடியாகும் கடவுச்சீட்டுகளை அச்சிட முடியவில்லை" எனத் தெரிவித்தார்.



# கைமாற்றும் நடவடிக்கைகள் தற்காலிகமாக இடைநிறுத்தம்



வடக்கு மாகாணத்தில் காணி உறுதிப்பத்திரங்களை கைமாற்றும் நடவடிக்கை தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளதாக, அம்மாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம்.சார்ள்ஸ் தெரிவித்துள்ளார்.

யாழ். மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம் இணைத் தலைவர்களான ஆளுநர் திருமதி பி.எஸ்.எம்.சார்ள்ஸ், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் மாவட்ட செயலகத்தில் நேற்று முன்தினம் (18) நடைபெற்ற போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

வடமாகாணத்தில் காணி உறுதிப்பத்திரங்களை கைமாற்றும் செயற்பாடுகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது. 'உரித்து' திட்டத்தின் கீழ் காணி உறுதிகளை வழங்கும் நடவடிக்கையை துரிதப்படுத்துவதற்காகவே இத்தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவர் கூறினார். இதற்கமையை மே மாத நிறைவுக்குள் வடமாகாணத்தில் 60,000 பேருக்கான காணி உறுதிப்பத்திரங்கள் கையளிக்கப்படவுள்ளன.

வடமாகாணத்தில் முன்னெடுக்கப்படவுள்ள வீட்டுத்திட்டம் தொடர்பான கலந்துரையாடல்கள் மற்றும் திட்டமிடல்கள் இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளது. இத்திட்டத்தில் நெடுந்தீவு மக்களுக்கான 76 வீடுகளும் உள்வாங்கப்பட்டுள்ளதாக ஆளுநர் தெரிவித்தார்.

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

குரோதி வருடம் சித்திரை மாதம் 07ஆம் நாள் சனிக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1445 ஷவ்வால் பிறை 11

### குறள் தரும் சிந்தனை

**குணமென்னும் குன்றேறி நின்றார் வெகுளி
கணமேயும் காத்தல் அரிது**

குணக்குன்றுகளான பெரியவர்கள் கோபம் கொண்டால் அந்தக் கோபம் அவர்கள் உள்ளத்தில் ஒரு கணம் கூட நிலைத்து நிற்காது.

# இலங்கை பொருளாதாரத்தில் தாக்கம் செலுத்துமா மத்திய கிழக்கு பதற்றம்?

காஸா மீதான யுத்தம், இஸ்ரேல் மீது ஈரான் மேற்கொண்ட தாக்குதல் மற்றும் ஈரான் மீது நேற்று வெள்ளிக்கிழமை இஸ்ரேல் மேற்கொண்ட தாக்குதல் என்பவற்றின் விளைவுகளால் மத்திய கிழக்கில் உச்சகட்டப் பதற்றநிலை ஏற்பட்டுள்ளது.

இதன் விளைவாக மசகு எண்ணெயின் விலை சர்வதேச சந்தையில் அதிகரிக்கக்கூடிய அச்சுறுத்தல் ஏற்பட்டிருக்கிறது. இதனை சர்வதேச தரவுகளும் உறுதிப்படுத்திக் கொண்டிருக்கின்றன.

அந்த வகையில் நேற்று வெள்ளிக்கிழமை அதிகாலையில் ஈரான் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலைத் தொடர்ந்து ஒரு பீப்பாய் மசகு எண்ணெயின் விலையில் 3 சதவீத அதிகரிப்பு ஏற்பட்டிருக்கிறது. அத்தோடு தங்கத்தின் விலையும் உயர்ந்துள்ளது.

மசகு எண்ணெய் மற்றும் தங்கத்தின் விலைகளில் அதிகரிப்பு ஏற்படுவது பிராந்திய நாடுகளை மாத்திரமல்லாமல் முழு உலக நாடுகளையும் பாதிக்கவே செய்யும். குறிப்பாக பொருளாதார ரீதியில் எல்லா நாடுகளும் தாக்கங்களுக்கும் பாதிப்புகளுக்கும் முகம்கொடுக்க நேரிட முடியும். அவற்றில் அத்தியாவசியப் பொருட்கள் உள்ளிட்ட அனைத்துப் பொருட்களதும் விலைகள் அதிகரிப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இவ்வாறு பொருட்களின் விலைகள் அதிகரிப்பதானது வளர்முக மற்றும் மூன்றாம் மண்டல நாடுகளுக்கும் அவற்றின் மக்களுக்கும் பெரும் பாதிப்பாகவே அமையும்.

அதன் காரணத்தினால் இலங்கை உள்ளிட்ட உலக மக்களின் நலன்களை முன்னிலைப்படுத்தி மத்திய கிழக்கில் ஏற்பட்டுள்ள பதற்றநிலைக்கு விரைவாகவும் வேகமாகவும் அமைதி வழியில் தீர்வு காண்பதற்கான முயற்சிகளை முன்னெடுப்பது அவசியம். அதுவே இன்றைய அவசரத் தேவையாகும். இவ்விடயத்தில் வளர்ச்சியடைந்துள்ள நாடுகள் மாத்திரமல்லாமல் வளர்முக நாடுகளும் கூட தங்கள் பங்களிப்புக்களை நல்கத் தவறலாகாது.

இல்லாவிடில் உலகசந்தையில் எரிபொருள் மற்றும் தங்கத்தின் விலைகள் அதிகரிப்புக்கு உள்ளாகி ஏனைய அனைத்துப் பொருட்களதும் விலைகள் உயர்வடைவதைத் தவிர்க்க இயலாது. அதன் விளைவாக பெரும் அசௌகரியங்களுக்கும் நெருக்கடிகளுக்கும் மக்கள் முகம்கொடுக்கும் துர்ப்பாக்கிய நிலை ஏற்படும். இந்தப் பாதிப்புகளில் இருந்து இலங்கை மக்களும் விதிவிலக்கு பெற்றிட முடியாது.

இலங்கை ஏற்கனவே கடும் பொருளாதார நெருக்கடிக்கு உள்ளாகி பாதிப்புக்களுக்கும் நெருக்கடிகளுக்கும் முகம்கொடுத்தது. அந்த நெருக்கடியில் இருந்து தற்பொது மீட்சி பெற்று நம்பிக்கை தரும் வகையில் முன்னேற்றப்பாதையில் பயணித்துக் கொண்டிருக்கின்றது. இந்த சூழலில்தான் மத்திய கிழக்கின் பதற்றநிலை உச்சகட்டத்தை அடைந்திருக்கிறது. இது இந்நாட்டின் பொருளாதாரத்தில் தாக்கத்தை ஏற்படுத்திவிடுமோ என்ற அச்சத்தை பொருளாதார நிபுணர்கள் மத்தியில் ஏற்படுத்தியுள்ளது.

அன்று அந்நிய செலாவணி பற்றாக்குறையோடுதான் நாடு பொருளாதார வீழ்ச்சிக்கு உள்ளானது. அதன் விளைவாக எரிபொருள், எரிவாயுவைப் பெற்றுக் கொள்வதில் மக்கள் பாரிய நெருக்கடிகளை எதிர்கொண்டனர். இவற்றுக்காக நாட்கணக்கில் காத்திருக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது. வாகனப் போக்குவரத்து, மின்வழங்கல் உள்ளிட்ட எல்லாத் துறைகளும் பாதிப்படைந்தன.

ஆனால் தற்போது மத்தியகிழக்கில் உருவாகியுள்ள பதற்றத்தின் விளைவாக எரிபொருள், எரிவாயுவின் விலைகளில் ஏற்படக்கூடிய அதிகரிப்பு குறித்து கவனயீனமாக நடந்து கொள்ளக்கூடாது. இப்பதற்ற சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு எரிபொருள், எரிவாயு என்பவற்றைச் சிக்கனமாகப் பயன்படுத்த வேண்டும்.

அவற்றை வீண்விரயமாகப் பாவிப்பதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும். அதன் ஊடாக நாட்டில் எரிபொருள் பற்றாக்குறை ஏற்படுவதையும் அவற்றின் விலைகள் அதிகரிப்பதையும் தவிர்த்துக் கொள்ளலாம்.

கடந்த காலங்களில் மத்தியகிழக்கு பிராந்தியத்தில் ஏற்பட்ட பதற்றங்களின் போது உலக சந்தையில் எரிபொருள், எரிவாயுவின் விலைகள் பெரிதும் அதிகரித்தன. அச்சமயங்களில் அதன் தாக்கங்களுக்கு இலங்கை உள்ளிட்ட உலகின் பெரும்பாருலான நாடுகளது மக்களும் முகம்கொடுத்தனர். குறிப்பாக ஈராக் குவைத் யுத்தம், ஈராக் மீது அமெரிக்கா முன்னெடுத்த யுத்தம் இவற்றுக்கு நல்ல எடுத்துக்காட்டுகளாகும்.

ஆகவே மத்தியகிழக்கு பிராந்தியத்தில் தற்போது ஏற்பட்டுள்ள பதற்றம் இந்நாட்டின் பொருளாதாரத்தில் தாக்கம் செலுத்த இடமளிக்காத வகையில் பொறுப்புடன் செயற்படுவது அவசியம். அதற்கான பொறுப்பு ஒவ்வொரு குடிமகனிடமும் உள்ளது. குறிப்பாக தற்போதைய சூழலில் எரிவாயு, எரிபொருளை சிக்கனமாகவும் வீண்விரயமற்ற முறையிலும் பயன்படுத்தும் போது அவை இலங்கையின் பொருளாதாரத்தில் தாக்கம் செலுத்துவதைத் தவிர்த்துக் கொள்ளலாம். இதனை உறுதிபடக் கூற முடியும்.

editor.tkn@lakehouse.lk

# வரலாற்று பிரசித்தி பெற்ற நிந்தவூர்மடத்தடி ஸ்ரீ மீனாட்சி அம்மன் ஆலய பாற்குடபவனி







வரலாற்றுப் பிரசித்தி பெற்ற நிந்தவூர் மாட்டுப்பளை மடத்தடி ஸ்ரீ மீனாட்சி அம்பாள் ஆலயத்தின் இரண்டாவது வருடாந்த அலங்கார உற்சவத்தின் பாற்குட பவனி நேற்று (19) வெள்ளிக்கிழமை சிறப்பாக நடைபெற்றது.

ஆலயத்துக்கு மேற்குப் புறமாக உள்ள சிவன் ஆலயத்தில் விசேட கிரியைகள், பூஜை இடம்பெற்று பாற்குடபவனி ஆரம்பமானது.

முன்னே ஆலய பரிபாலன சபை தலைவர் கி. ஜெயசிறில் பிரதான கும்பம் தாங்க, ஆலோசகர் வி.ரி.சகாதேவராஜா பிரதான மடை தாங்க, ஆலயகுரு சிவஸ்ரீ ச. கோவர்த்தனசர்மா வழிகாட்டலில் பாற்குடபவனி சிறப்பாக நடைபெற்றது.

இதேவேளை உற்சவகால பிரதமகுரு சிவஸ்ரீ சண்முக மகேஸ்வரக் குருக்கள் தலைமையில் ஆலயகுரு சிவஸ்ரீ ச.கோவர்த்தன சர்மா பங்கேற்புடன் வருஷாபிஷேக கிரியைகள் நடைபெற்று வருகின்றன.

இவ்வாறு தொடர்ச்சியாக ஒன்பது தினங்கள் பகல் அலங்கார உற்சவ திருவிழாக்கள் இடம் பெற்று எதிர்வரும் 23 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை சித்ரா பௌர்ணமி அன்று தீர்த்த உற்சவத்துடன் விழா நிறைவடைய இருக்கின்றது.

இந்த பத்து நாள் அலங்கார உற்சவ திருவிழாக்காலங்களில் காலை 10 மணிக்கு கும்ப பூஜையுடன் நிகழ்வுகள் ஆரம்பமாகி பகல் ஒரு மணிக்கு அலங்கார உற்சவ பிரதான பூஜை, அம்பாளின் வீதியுலா இடம்பெறும். அதனைத் தொடர்ந்து பக்தர்களுக்கு தினமும் அன்னதானம் வழங்கப்படுகிறது .

பத்து தினங்களுக்கான திருவிழாக்களையும் அன்னதானத்தையும் அம்பாறை மாவட்டத்தில் உள்ள தமிழ்ப் பிரதேசங்கள் பொறுப்பேற்று நடத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

**காரைதீவு குறூப் நிருபர்**

# புத்தளத்தில் எதிர்வரும் சனிக்கிழமை ஊடகச் செயலமர்வு, விருதுவழங்கும் விழா

**LACSDO MEDIA NETWORK SRI LANKA ஏற்பாடு**

**தினகரன் உட்பட ஊடக நிறுவனங்கள் அனுசரணை**

தினகரன் வாரமஞ்சரி

LACSDO MEDIA NETWORK SRI LANKA இன் திறமைமிக்கவர்களை அடையாளம் கண்டு விருது வழங்கும் விழாவும் ஊடகச் செயலமர்வும் எதிர்வரும் 27ஆம் திகதி சனிக்கிழமை மு.ப. 09 மணிக்கு ஆரம்பமாகின்றன. ஊடகச் செயலமர்வு காலையில் நடைபெறும்.விருது வழங்கும் நிகழ்வு பி.ப 04 மணிக்கு நடைபெறும். புத்தளத்தில் உள்ள பிஸ்ருல் ஹாபி ஞாபகார்த்த மண்டபத்தில் நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

இவ்விழாவுக்கு தினகரன், தினகரன் வாரமஞ்சரி பத்திரிகைகள் மற்றும் கெபிட்டல் வானொலி, கெபிட்டல் தொலைக்காட்சி உள்ளிட்ட ஊடக நிறுவனங்கள் ஊடக அனுசரனைகளை வழங்கவுள்ளன.

LACSDO MEDIA தலைவர் கலாநிதி ஏ.எல். அன்சார் தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழாவிற்கு பிரதம அதிதியாக முன்னாள் அமைச்சர் பேரியல் அஷ்ரப் கலந்து கொள்ளவுள்ளார்.



புத்தளம் முன்னாள் நகரசபைத் தலைவர் எம்.எஸ்.எம். ரபீக், ஐக்கிய காங்கிரஸ் கட்சித் தலைவர் முபாரக் அப்துல் மஜீத், முஸ்லிம் பெண்கள் அபிவிருத்தி நிறுவனத்தின் பணிப்பாளர் திருமதி ஜுவைரியா மொஹிடீன், டொக்டர் நியாஸ் சுலைமான் லெப்பை, தினகரன், தினகரன் வாரமஞ்சரி பிரதம ஆசிரியர் தே.செந்தில்வேலவர், எம்.ஆர். எப் நியாசா, வை.எம். சப்ராஸ், எம்.எப். பாத்திமா ஹசித்தா, புத்தளம் முன்னாள் நகரசபை உறுப்பினர் பிஸ்லியா பூட்டோ ஆகியோருடன் சமூக சேவை ஆர்வலர்களும் கலந்து கொள்ள உள்ளனர்.



27 ஏப்ரல் 2024 காலை 08. மணி முதல் 01.00 மணிவரை ஊடகச் செயலமர்வுகள் நடைபெறும். இச்செயலமர்வில் கெபிட்டல் ஊடக நிறுவனத்தின் பொதுமுகாமையாளர் எம்.எப். சியால்ஹூல் ஹசன், ஐ.ரீ. என். ஊடக நிறுவனத்தின் வசந்தம் தமிழ் தொலைக்காட்சியின் தலைமை முகாமையாளர் இர்பான் மொஹமட், ஊடக வளவாளர் எம். நிசாத் சரிப், லக்ஸ்டோ ஊடக நிறுவனத்தின் ஸ்தாபகத் தலைவர் ஏ.ஆர். அனஸார் பங்கேற்கின்றனர். வீடியோ, மற்றும் புகைப்படக் கருவிகளை இயக்குதல் சம்பந்தமான செயல்முறைப் பயிற்சியை சிரேஷ்ட ஊடகவியலாளர் அஷ்ரப் ஏ. சமத் உட்பட பலர் வளவாளர்களாகக் கலந்து கொண்டு வழங்குவர்.

பி.பகல். 04 மணிமுதல் 07 மணிவரை நடைபெறவுள்ள விருது விழாவில் வரவேற்புரையை விஸ்லியா பூட்டோ ஆற்றுவார். சிறப்புரையை சியாஹூல் ஹசன், விசேட பேச்சை நிசாட் ஷெரீப் ஆற்றுவர்.

ஏற்கனவே இந்நிறுவனத்தினால் ஊடகப் பயிற்சியும் விருது வழங்கும் நிகழ்வுகளும் சாய்ந்தமருது உட்பட கிழக்கு மாகாணத்திலும் கொழும்பிலும் நடைபெற்று வருகின்றன. கடந்த 15 வருடகாலமாக இயங்கி வரும் இந்நிறுவனம் குறிப்பாக இளைஞர்கள் பாடசாலை மாணவர்களுக்கு சிறந்த ஊடகப் பயிற்சிகளை வழங்கி வருகின்றது. வறுமைக் கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களது வாழ்வதாரத்திற்கும் உதவிகளை வழங்கி வருகின்றது. அத்துடன் ஊடகம் பற்றிய பயிற்சிநெறிகளையும் வழங்கி வருவது குறிப்பிடத்தக்கதாகும்.

ஆரோக்கியமிக்க ஊடக சமூகத்தினை கட்டியெழுப்பும் லக்ஸ்டே மீடியாவின் விசேட திட்டத்தில் வானொலி மற்றும் தொலைக்காட்சியில் தொகுப்பாளராக சேர விரும்பும் இளைஞர்கள், சமூக சேவை ஊடகத்தில் மற்றும் பத்திரிகைத் துறை பணியாற்ற விரும்பும் இளைஞர் யுவதிகள், பாடசாலை மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் தொடர்பு கொள்ள முடியம்.

**அஷ்ரப் ஏ. சமத்**

# ‘புதியதோர் உலகம் செய்வோம்’ என்று முழங்கியவர் பாவேந்தர் பாரதிதாசன்

**புரட்சிக் கவிஞனின் நினைவுதினம் நாளை**



அன்று அந்நியரின் ஆதிக்கம், இந்திய நாட்டினையும் ஆட்டிப் படைத்துக் கொண்டிருந்தது! அங்கு இன வெறியும் சாதிவெறியும் தாண்டவமாடிக் கொண்டிருந்தன. உள்நாட்டின் வளங்களை உருவிக் கொண்டிருந்த ஆக்கிரமிப்பாளர்களின் கையே அப்போது மேலோங்கிக் கொண்டிருந்தது!

இந்த வேளையில்தான் புதுவையில் பூத்த மலராய்ப் ‘புதியதோர் உலகம் செய்வோம்’ என்று புதுமணம் வீசினார் கனக சுப்புரத்தினம் அவர்கள்.

தன் இளம் பராயத்தில் இவர், புதுவையில் இயங்கிய பிரெஞ்சுக்காரரின் பள்ளியில் சேர்ந்து கல்வி கற்றார். அத்தோடு தமிழறிஞர்களிடம் தமிழ் இலக்கண இலக்கியங்களையும் சைவ சித்தாந்தங்களையும் முறையாகக் கற்றார். இளங்கலைப் பட்டம் பெற்ற இவர்,1919 இல் காரைக்கால் அரசினர் கல்லூரியில் தமிழாசிரியராகப் பதவியேற்றார்.

அன்று, புதுவையில் பாரதியார் வாழ்ந்த காலத்தில் அவருடன் நெருங்கிப் பழகும் வாய்ப்பு கனகசுப்புரத்தினம் எனும் பாவேந்தருக்குக் கிட்டியது. அவருடன் இணைந்து கொண்டு செயலாற்றினார். பாரதியாருடன் பழகிய போது, அவர் மீது கொண்ட மேலான பற்றினாலும் ஈர்ப்பினாலும் ‘பாரதிதாசன்’ எனத் தன் பெயரை மாற்றினார்.

புதுவையில் பாரதியோருடன் இவரும் சீர்திருத்தக் கவிபாடத் தொடங்கினார். சாதி மறுப்பு, தீண்டாமை மற்றும் மூட நம்பிக்கை ஒழிப்பு, பெண் விடுதலை போன்ற விடயங்களில் மக்களுக்குத் தெளிவூட்டினார்.

"புதியதோர் உலகம் செய்வோம்!
கெட்ட போரிடும் உலகத்தை வேரோடு சாய்ப்போம்!"

"பொதுவுடைமைக் கொள்கை திசை எட்டும் காப்போம்!
புனிதமோடு அதை எங்கள் உயிர் என்றே காப்போம்!"

என்று பாடினார்!

சாதி வேறுபாடற்ற சமத்துவச் சமுதாயம் காண ஆசைப் பட்டார்.

"எல்லார்க்கும் எல்லாம், என்றிருப்பதான இடம் நோக்கி,
நடக்குதிந்த வையம்" என்றெல்லாம் அன்றைய காலத்தின் சமூகத்திற்குப் பொருத்தமான பொதுவுடைமைக் கருத்துக்களை இவர் முன் வைத்தார்.

சுதந்திரப் போராட்டங்கள் நடந்து கொண்டிருந்த அவ்வேளையில், திராவிட இயக்கத்தின் தீவிரத் தொண்டனாகத் தொழிற்பட்டார், சிறைக்கும் சென்று வந்தார். இவரிடம் அஞ்சாமையும் அநீதியை எதிர்க்கும் நெஞ்சமும் இணைந்தே இருந்தன.

"மானிடம் என்ற வாளும்,
அதை வசமாய் அடக்கிய இருதோளும்,
வானும் வசப்பட வைக்கும்,
நம்பிக்கை வாழ்வைத் திருத்தும்!"

என்று பாடி, எல்லோரும் விடியலின் மீது நம்பிக்கை வைத்துப் போராடத்

ஒற்றுமையை ஊன்றினார்! சாதி வேறுபாடு காட்டாத, சாதிக்கலப்புத் திருமணத்தை வரவேற்றார்

இவரது சமூகச் சீர்திருத்தக் கருத்துக்களையும், இவரின் திறமைகளையும் கண்ட தந்தை பெரியார் ‘புரட்சிக் கவிஞர்’ எனும் பட்டத்தை சூட்டினார். அறிஞர் அண்ணா இவரை 1946 இல் ‘புரட்சிக் கவி’ என்றார். இவர் சட்டமன்ற அங்கத்தவராகவும் ஐந்து வருடங்கள் கடமையாற்றினார்.

‘குயில்’ எனும் சிற்றிதழ் மூலம் சமூகத்துக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தினார். தமிழுடன் ஆங்கிலம் பிரெஞ்சு எனும் மும்மொழிப் புலமை கொண்ட இவர், பிரெஞ்சு மொழியிலிருந்த தொழிற்சட்டங்களைத் தமிழிற் தந்தார்.

மறுமலர்ச்சிக் கருத்துக்களை விதைத்த இவர், இனம் மொழி கூறாத கவிதை வேரில்லா மரம் என்றார்! பகுத்தறிவுச் சிந்தனைகளைக் கவிதையிலே கொட்டினார். பெண்களின் உரிமைகள் பற்றிப் பல நூல்கள் படைத்தார்.

உயிரென நினைத்த தமிழிலே, காலவெள்ளத்தால் அழிந்து விடாத சிறப்பான பல படைப்புக்களை மனித குலத்துக்குத் தந்தார்.

அவற்றிலே குடும்ப விளக்கு, இருண்ட வீடு, அழகின் சிரிப்பு, முல்லைக்காடு, எதிர்பாராத முத்தம், தமிழ் இயக்கம், பாண்டியன் பரிசு, மணிமேகலை வெண்பா, சஞ்சீவ பர்வதத்தின் சாரல் போன்ற இன்னும் பல நூல்களை ஆக்கியுள்ளார்.

இவரது சிறப்பான இலக்கிய ஆற்றலைக் கண்ட திரைப்படத் தயாரிப்பாளர்கள் திரைக்கதை எழுதிடவும் வாய்ப்புக்கள் வழங்கினர்.

இவரது தமிழுக்கும் அமுதென்று பேர், புதியதோர் உலகம் செய்வோம் எனும் பாடல்களும் திரைப்படங்களில் ஒலிக்கின்றன. இவரது, பிசிராந்தையார் எனும் நாடக நூலுக்குச் சாகித்ய அக்கடமி விருது கிடைத்துள்ளது. 1990 இல் தமிழக அரசு இவரது படைப்புக்களை அரசுடைமையாக்கியது.

மேலும் இந்திய அரசு திருச்சியிலே, இவரின் ஞாபகார்த்தமாக பாரதிதாசன் பல்கலைக் கழகம் எனும் பெயரில் மாநிலப் பல்கலைக்கழகமொன்றை நிறுவியுள்ளது!

சென்னை தபாற்துறை இவர் நினைவாக, 2001 இல் தபால்தலை ஒன்றை வெளியிட்டது. தமிழக அரசு ஆண்டு தோறும் இலக்கியவாதிகள் இருவருக்குப் பாரதிதாசன் விருது வழங்குகின்றது!

புரட்சிக் கவிஞராம், பாவேந்தராம் செந்தமிழினைத் தன்னுயிர் என்றவராம் கனக சுப்புரத்தினம் எனும் பாரதிதாசன் அவர்கள்.

காலவெள்ளத்தால் அடித்துச் செல்லப் பாடாத கருத்தாழம் மிக்க எளிமையான வரிகள் கொண்ட இவரது படைப்புக்கள், நூலைப் படியெனத் தூண்டிக் கொண்டே இருக்கும் என்றால் மிகையாகாது.

**கிண்ணியா சபீனா**

# ஈரான்–இஸ்ரேல் போர் பகைமையில் ரஷ்யாவின் மத்திய கிழக்கு வகிபாகம்!

மத்திய கிழக்கைப் பொறுத்தவரையில், இந்தப் பிராந்தியம் பல முகங்களைக் கொண்டது. மதப்பிரிவினைகள், நம்பிக்கையின்மை, வெறுப்பு போன்றவை அதிகம் நிறைந்தது. தற்போது இஸ்ரேல் ஈரான் போர் தீவிரமாகும் சூழ்நிலையில் சமரசம் ஏற்படுத்தும் சக்தியாக ரஷ்யா தலையெடுக்குமா என்பது பற்றி அரபுலகும், ஆசிய நாடுகளும் எதிர்பார்க்கின்றன.

இஸ்ரேல் ஈரான் ஆகிய இருநாடுகளுடன் பரஸ்பர உறவை ரஷ்யா கொண்டிருந்தாலும், சமரச முயற்சிக்கு ரஷ்யா தலையிடுவது சாத்தியமற்றதாகவே புலப்படுகிறது.

உண்மையில் அமைதியை நிலைநாட்டுவதில் தனது செல்வாக்கைப் பயன்படுத்த வேண்டுமானால், ரஷ்யாவுக்கு சமநிலையிலான இராஜதந்திர பலம் போதுமானதாக இருக்காது என்றே கருதப்படுகிறது.

மத்திய கிழக்கில் நீண்டகாலப் பிணக்குகளால் மொஸ்கோ பயனடைகிறது என்றும் வாதிடப்படுகிறது. தற்போதைய போர் முரணில் இஸ்ரேல் ஈரான் முனைப்புப் பெற்று இருக்கையில், மேற்கத்திய கவனத்தை ரஷ்யா உக்ரேனிலிருந்து திசைதிருப்புமா எனவும் ஊகிக்கலாம்.

இஸ்ரேல் ஈரான் மோதல் ஒரு பரந்த போராக விரிவடையும் பட்சத்தில், இப்பிராந்தியம் பெரும் இழப்பை சந்திக்க நேரிடும்.

**மத்திய கிழக்கில் சமரசம் செய்யும் சக்தி:**





தற்போது மத்திய கிழக்கில் போரியல் மாற்றம் வெளிப்படையாகத் தெரிகிறது. 2015இல் சிரியாவில் இராணுவ நடவடிக்கைகளை மொஸ்கோ தொடங்கிய பின்னர், இந்தப் பிராந்தியத்தில் முக்கிய சக்தியாக அமெரிக்காவுக்குப் பதிலாக ரஷ்யா உருவாகியது. அத்துடன் இந்தப் பிராந்தியத்தில் அதிகார சமரசம் ஏற்படுத்தும் சக்தியாகவும் மாறியது.

கடந்த பல ஆண்டுகளாக மேற்கு நாடுகளும் நேட்டோவும் மத்திய கிழக்கில், மொஸ்கோ அரசை பலவீனப்படுத்த முயற்சி செய்தன. அரபு நாடுகளுக்கு இடையில் உள்ள கருத்து வேறுபாடுகளைப் பயன்படுத்தி இந்த முயற்சியில் நேட்டோ ஈடுபட்டது.

அதேவேளை சிரியா பிரச்சினையில் துருக்கிக்கும், மற்ற நேட்டோ உறுப்பு நாடுகளுக்கும் இடையில் ஏற்பட்ட உரசல் ரஷ்யாவுக்கு நல்ல வாய்ப்பாக அமைந்தது. அப்போது நேட்டோவுக்குள் பிளவை உருவாக்க மொஸ்கோ முயன்றது. ரஷ்யாவிடம் இருந்து எஸ்400 ரக வான்பரப்பு பாதுகாப்பு ஏவுகணைகளைத் துருக்கி வாங்கியது குறித்து ஏற்கெனவே அமெரிக்கா அதிருப்தியில் உள்ளதும் அறிந்ததே.

**ரஷ்யாவின் செல்வாக்கு வீழ்ச்சி:**

உக்ரேனிய போரின் பின்னர் மத்திய கிழக்கில் ரஷ்யாவின் செல்வாக்கு குறைந்த அறிகுறிகள் தெரிகின்றன. தற்போது இஸ்ரேல் ஈரான் போர் ஒரு பரந்த பிராந்திய மோதலாகவும், வல்லரசுகளுக்கு இடையே நேரடி மோதலுக்கும் கூட வழிவகுக்கும் என்ற அச்சம் அதிகமாக உள்ளது.

ஏப்ரல் மாதத் தொடக்கத்தில் சிரியாவில் உள்ள ஈரான் தூதரகம் மீது இஸ்ரேல் நடத்திய வான்வழி தாக்குதலில் மூன்று IRGCQF ஜெனரல்கள் மற்றும் நான்கு ஈரானிய இராணுவ அதிகாரிகள் கொல்லப்பட்டனர். ஈரான் பதிலடி கொடுக்கும் என எதிர்பார்க்கப்பட்டு, பாரிய ஏவுகணை தாக்குதல்களை மேற்கொண்டுள்ளது.

**சமரசம் ஏற்படுத்தும் சக்தியாக ரஷ்யா தலையெடுக்குமா?**

அத்துடன் இஸ்ரேல் தண்டிக்கப்படும் என்று உச்ச தலைவர் ஆயதுல்லா கமேனி சபதம் செய்துள்ளார். அதே நேரத்தில் ஜனாதிபதி இப்ராஹிம் ரைசி இஸ்ரேலின் தாக்குதலுக்கு பதில் இல்லாமல் போகாது என்றும் கூறியுள்ளார்.

சோவியத் சிதைவின் பின்னர், ரஷ்யா கடந்த தசாப்தத்தில் மத்திய கிழக்கு பிராந்தியத்தில் தனது செல்வாக்கை சிறிது



சிறிதாக உயர்த்திக் கொண்டது. பெரும்பாலும் உள்ளூர் மோதல்களைப் பயன்படுத்திக் கொண்டது. இது சிரியாவில் மிகத் தெளிவாகத் தெரிந்தது. அங்கு நிகழ்ந்த உள்நாட்டுப் போரை ரஷ்யா பயன்படுத்திக் கொண்டது.

அத்துடன் சிரியாவில், ரஷ்ய தலையீடு 2015 இல் அசாத் ஆட்சியை உடனடி அழிவில் இருந்து காப்பாற்றியது.

பின்னர் ரஷ்யா தனது கால்தடத்தை சிரியாவில் விரிவுபடுத்தியதும் உண்மையே. அத்துடன் அதனது இராணுவத்தின் நிரந்தர இருப்பை நிறுவியது. 2019 இல் சிரியாவில் இருந்து அமெரிக்கா வெளியேறிய பிறகு, ரஷ்யா அந்த வெற்றிடத்திற்குள் நுழைந்தது.

சிரிய அரசாங்கப் படைகள் நாட்டின் வடகிழக்கு பகுதியின் கட்டுப்பாட்டை மீண்டும் பெற ரஷ்யா பாரியளவில் உதவியது. அதே ஆண்டு, ரஷ்யா எகிப்துடன் கூட்டு கடற்படை பயிற்சிகளை நடத்தியது. அந்த ஆண்டின் தொடக்கத்தில் எகிப்தில் ரஷ்யாவால் கட்டப்பட்ட அணுமின் நிலைய கட்டுமானம் இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளின் தொடர்ச்சியான வளர்ச்சியை நிரூபித்தது. சிரியா மற்றும் லிபியாவில் உறுதியற்ற தன்மையை பயன்படுத்தி ரஷ்யா தன்னை ஒரு பிராந்திய பாதுகாப்பு உத்தரவாதமாக நிலைநிறுத்திக் கொண்டாலும், இஸ்ரேல் ஈரான் போர் தீவிரமடைந்தால் அது போன்ற பலன்களைப் பெற முடியாது என்பதும் வெளிப்படை.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு உக்ரைன் படையெடுப்பு தொடங்கியதில் இருந்து, ரஷ்யா ஈரானுடனான தனது கூட்டாண்மையை மேலும் ஆழப்படுத்தியுள்ளது. உக்ரைன் மீது படையெடுத்ததில் இருந்து அதிக பாதுகாப்பு மற்றும் பொருளாதார ஒத்துழைப்பை ஈரானிடமிருந்து ரஷ்யா பெறுகிறது.

மொஸ்கோவிற்கு ஆளில்லா வான்வழி அமைப்புகள், பாலிஸ்டிக் ஏவுகணைகள் மற்றும் போர் விமானங்களை ஈரான் வழங்கியது. ஈரான் ஒரு முக்கியமான இராணுவ விநியோகத்தை ரஷ்யாவுடன் செய்துள்ளது. இந்த ஈரானுடனான நெருக்கமான உறவு, சர்வதேச தடைகளைத் தாங்கும் ரஷ்யாவின் திறனையும் மேம்படுத்தியுள்ளது.

தெஹ்ரானுடன் மொஸ்கோவின் வளர்ந்து வரும் நட்பு, மத்திய கிழக்கில் ரஷ்ய செல்வாக்கு மேலும் வலுவாக வளர்ச்சி அடைவதைக் குறிக்கிறது. ஆனால் இப்பிராந்தியத்தில் அதன் எதிர்கால பங்கு பாரியளவில் ஈரானுக்கு ஆதரவாக இருக்கும் என்பதை ரஷ்யா உணர்த்துகிறது.

மத்திய கிழக்கில் மொஸ்கோ அதன் நீண்டகால மூலோபாய நோக்கங்களை அடைய, அது தெஹ்ரானுடன் நெருங்கிய இராணுவ பணி உறவை வளர்த்துக் கொள்ள முயற்சிக்கிறது .

ஏப்ரல் 1, 2024 அன்று சிரியாவின் டமாஸ்கஸில் உள்ள ஈரானிய தூதரகத்திற்கு அருகிலுள்ள கட்டடத்தின் மீது இஸ்ரேலிய தாக்குதலை ரஷ்யா கடுமையாக கண்டித்துள்ளது. தற்போது ரஷ்யாஈரான் உறவின் பரிணாமம் இப்பகுதியில் ரஷ்யாவின் எதிர்கால நிரந்தர நிலைக்கான வெளிப்பாடாகும்.

2015 ஆம் ஆண்டில் சிரியாவில் மொஸ்கோவின் இராணுவ நடவடிக்கைகள் தொடங்கியபோது, சர்வதேச பயங்கரவாதத்தைத் தோற்கடிப்பதுதான் தங்கள் நோக்கம் என்று கிரெம்ளின் அரசு கூறியது. ஆனால் மத்திய கிழக்கில் ரஷ்யாவின் ஆதிக்கத்தை மீண்டும் உருவாக்குவதுதான் முக்கியமான கருத்தாக இருந்தது என்பதே உண்மையாகும்.

கடந்த 2023 ஒக்டோபரில், போரில் அஜர்பைஜான் இராணுவப் படைகள் நாகோர்னோகராபக் என்ற இனரீதியிலான ஆர்மேனியப் பகுதியைக் கைப்பற்றியதால், முன்னாள் நட்பு நாடான ஆர்மீனியாவின் சார்பாக ரஷ்யா தலையிடத் தவறியது.

ஆயினும் ரஷ்யா தந்திரோபோயமாகவே ஆர்மேனியாவை கழற்றி விட்டதாகவும் கருதப்படுகிறது. சோவியத்திற்குப் பிந்திய கால கட்டத்தில் அரபு நாடுகளில் ஒரு ஸ்திரப்படுத்தும் சக்தியாக செயல்பட ரஷ்யா முயல்கிறது.



ஐங்கரன் விக்கினேஸ்வரா...✍
அவுஸ்திரேலியா

## இந்திய மக்களவை தேர்தல் நேற்று ஆரம்பம்;
# தமிழ்நாட்டில் காலையிலேயே சுறுசுறுப்பான வாக்களிப்பு!

இந்திய நாடாளுமன்றத் தேர்தல் நேற்று ஆரம்பமாகியது. தமிழ்நாடு, புதுச்சேரி உட்பட 21 மாநிலங்கள், யூனியன் பிரதேசங்களில் மக்களவை தேர்தலுக்கான முதல்கட்ட வாக்குப்பதிவு நேற்றுக்காலை தொடங்கியது. தமிழகத்தில் மட்டும் பதிவு செய்யப்பட்டுள்ள வாக்காளர்களின் தொகை 6.23 கோடி ஆகும்.

தமிழகத்தில் நாடாளுமன்ற மக்களவைத் தேர்தலுக்கான வாக்குப்பதிவு நேற்று நடைபெற்ற போது வாக்காளர்கள் சுறுசுறுப்பாக வாக்களித்தனர். நேற்று அதிகாலையில் வாக்குப்பதிவு தொடங்கிய நிலையில் பொதுமக்கள், அரசியல்வாதிகள், பிரபலங்கள் என



அனைவரும் மிகவும் ஆர்வமாக வாக்கு செலுத்தினர்.

சென்னை போயஸ் கார்டன் பகுதியில் உள்ள ஸ்டெல்லா மேரீஸ் கல்லூரியில் நடிகர் ரஜினிகாந்த் வருகை தந்து விரைவாக வாக்களித்துவிட்டு, அடையாளமை தடவிய விரலை காட்டிவிட்டு உடனடியாக அங்கிருந்து புறப்பட்டார். அப்போது ரசிகர்கள் கோஷம் எழுப்பி ஆரவாரம் செய்தனர்.

அதற்கு முன்னதாக தென் சென்னை தொகுதிக்கு உட்பட்ட திருவான்மியூர் வாக்குச்சாவடியில் நடிகர் அஜித் முதல் நபராக வந்து வாக்களித்துச் சென்றார். சென்னை விருகம்பாக்கத்தில் மனைவியுடன் வாக்களித்தார் நடிகர் சிவகார்த்திகேயன்.

மாலை 6 மணி வரை வாக்களிக்கலாம் என்று அறிவிக்கப்பட்டிருந்தது.

தமிழகத்தில் உள்ள மொத்த வாக்காளர்கள் 6.23 கோடி பேரில் முதல் முறை வாக்களிப்பவர்கள் 10.92 லட்சம் பேர் உள்ளனர்

தமிழகத்தில் நேற்று நடைபெற்ற மக்களவை தேர்தல் வாக்குப் பதிவு பாதுகாப்பு பணியில் 1.3 இலட்சம் பொலிசார் ஈடுபட்டிருந்தனர். தமிழகத்தில் 68,321 வாக்குச் சாவடிகள் இயங்கின. இவற்றில் பதற்றமான வாக்குச் சாவடிகளாக 8050, மிகவும் பதற்றமான வாக்குச் சாவடிகளாக 183 கண்டறியப்பட்டிருந்தன.

இந்த தேர்தலுக்கு மொத்தம் 1.58 லட்சம் வாக்குப் பதிவு இயந்திரங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

நடிகர் அஜித் வெள்ளை நிற சட்டை அணிந்து கொண்டு நீல நிற காற்சட்டையுடன் வந்து வாக்களித்தார். நடிகர் சிவகார்த்திகேயன் தனது மனைவி ஆர்த்தியுடன் வந்து வாக்களித்தார். அது போல் நடிகர் சரத்குமார், நடிகை ராதிகா ஆகியோர் கொட்டிவாக்கத்தில் உள்ள வாக்குச் சாவடியில் வாக்களித்தனர். மேலும் நடிகர் கார்த்திக், அவருடைய மகன் கவுதம் கார்த்திக் ஆகியோர் ஸ்டெல்லா மேரீஸ் கல்லூரியில் உள்ள வாக்குச் சாவடியில் வாக்களித்தனர்.

இந்தியா முழுவதும் 102 தொகுதிகளில் வாக்குப்பதிவு நடந்து வருகிறது. இந்த நிலையில், பிரதமர் நரேந்திர மோடி தனது எக்ஸ் தளத்தில் தமிழில் ஒரு ட்வீட் பதிவிட்டுள்ளார்.

“ஒவ்வொரு வாக்கும், ஒவ்வொரு குரலும் முக்கியமானது. இந்த முறை சாதனை எண்ணிக்கையில் வாக்களிக்க வேண்டும்” என்று பிரதமர் மோடி தமிழில் பதிவிட்டுள்ளார்.

தமிழ்நாட்டில் உள்ள 39 லோக்சபா தொகுதிகள் உட்பட மொத்தம் 102 லோக்சபா தொகுதிகளில் வாக்குப்பதிவு நேற்று நடைபெற்றது. தமிழகத்தில் காலை 6. 30 மணியில் இருந்தே வாக்காளர்கள் காத்திருந்து வாக்களித்தனர். தமிழக எதிர்க்கட்சி தலைவர் எடப்பாடி



பழனிசாமி, நடிகர் அஜித், அமைச்சர் கே. என். நேரு, சவுமியா அன்புமணி, ப சிதம்பரம், தமிழிசை சவுந்தரராஜன் என பலரும் காலை 7 மணிக்கு வாக்குப்பதிவு தொடங்கியதும் வாக்களித்து விட்டனர்.

காலை 7 மணிக்கு வாக்குப்பதிவு தொடங்கிய நிலையில் அதற்கு முன்பாகவே பலரும் வாக்குச் சாவடிக்கு வந்து காத்திருந்து தங்களது ஜனநாயக



கடமையை நிறைவேற்றினர். இந்த நிலையில் பிரதமர் மோடி, அனைத்து வாக்காளர்களும் வாக்களிக்க வேண்டும் என்று தமிழில் ட்வீட் போட்டுள்ளார்.

தனது எக்ஸ் தளத்தில் பிரதமர் மோடி கூறியிருப்பதாவது:

"2024 மக்களவைத் தேர்தல் தொடங்குகிறது. 21 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் உள்ள 102 இடங்களுக்கு வாக்குப்பதிவு நடைபெறவுள்ள நிலையில், இந்தத் தொகுதிகளில் வாக்களிக்கும் அனைவரும் சாதனை அளவை எட்டும் வகையில் தங்களது வாக்குரிமையை பயன்படுத்துமாறு கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக இளைஞர்கள் மற்றும் முதல்முறை வாக்காளர்கள் அதிக எண்ணிக்கையில் வாக்களிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால், ஒவ்வொரு வாக்கும் ஒவ்வொரு குரலும் முக்கியமானது!"

இவ்வாறு பிரதமர் மோடி பதிவிட்டுள்ளார்.

வழக்கமாக பிரதமர் மோடி தமிழ்நாடு வருகையின் போதோ இல்லை தமிழ் பற்றிய அறிவிப்புக்கோதான் தமிழில் ட்வீட் பதிவில் பதிவிடுவார். ஆனால் நேற்று 102 லோக்சபா தொகுதிகளில் தேர்தல் நடக்கும் நிலையில், பிரதமர் மோடி தமிழில் ட்வீட் பதிவிட்டுள்ளது கவனிக்கும் வகையில் உள்ளது.

நேற்று வாக்குப்பதிவு நடைபெற்ற 102 லோக்சபா தொகுதிகளில் கடந்த ஒரு மாதமாக கொளுத்தும் வெயிலுக்கு மத்தியிலும் தேர்தல் பிரசாரம் அனல் பறந்தது. தேசிய மற்றும் மாநில கட்சி தலைவர்கள் சூறாவளியாக சுழன்று வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டனர். இதனால் கடந்த ஒரு மாத காலம் தேர்தல் களம் அனல் பறந்தது.

அருணாசல பிரதேசம் உள்ளிட்ட சில மாநிலங்களில் 5 மணிக்கு வாக்குப்பதிவு முடிக்கப்படும் என்று தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது. 102 தொகுதிகளுக்கான லோக்சபா தேர்தல் மற்றும் சிக்கிம், அருணாசலபிரதேசம் ஆகிய 2 மாநில சட்டசபை தேர்தலுக்காக பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

கடந்த 2019 ஆம் ஆண்டைப் போலவே இந்த முறையும் நாடு முழுவதும் 7 கட்டங்களாக தேர்தல் நடைபெறுகிறது. முதற்கட்டமாக 21 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் நேற்று வாக்குப்பதிவு நடத்தப்பட்டது.



தமிழ்நாடு (39 தொகுதிகள்), அருணாச்சல பிரதேசம் (2 லோக்சபா தொகுதிகள்), அசாம் (5), பீகார் (4), சத்தீஸ்கர் (1), மத்திய பிரதேசம் (6), மகாராஷ்டிரா (5), மணிப்பூர் (2), மேகலா (2), மிசோரம் (1), நாகாலாந்து (1), ராஜஸ்தான் (12), சிக்கிம் (1), திரிபுரா (1), உத்தரப் பிரதேசம் (8), உத்தரகாண்ட் (5), மேற்கு வங்கம் (3), அந்தமான் நிக்கோபார் தீவுகள் (1), ஜம்மு மற்றும் காஷ்மீர் (1), லட்சத்தீவு (1), புதுச்சேரி (1) ஆகியவற்றில் நேற்று வாக்குப்பதிவு நடைபெற்றது.





கடந்த 2019 ஆம் ஆண்டு நடைபெற்ற முதற்கட்ட தேர்தலில் பா.ஜ.க 56 தொகுதிகளில் போட்டியிட்டது. அதில் 70% தொகுதிகளில் வெற்றி பெற்றிருந்தது. இந்த ஆண்டு முதற்கட்ட தேர்தலில் 77 தொகுதிகளில் பா.ஜ.க போட்டியிடுகிறது. காங்கிரஸ் 56 தொகுதிகளில் களமிறங்கியுள்ளது. அதிகபட்சமாக மாயாவதியின் பகுஜன் சமாஜ் கட்சி 86 தொகுதிகளிலும், அதிமுக 32+2, திமுக 22 தொகுதியிலும் போட்டியிடுகின்றன. தமிழகத்தை பொறுத்த அளவில் கடந்த 2019 இல் தி.மு.க முதற்கட்ட தேர்தலின்போது 20 இடங்களில் போட்டியிட்டிருந்தது.

அதேபோல பா.ஜ.க 2019 இல் 56 இடங்களில் போட்டியிட்டு 39 தொகுதிகளிலும், காங்கிரஸ் 63 தொகுதிகளில் போட்டியிட்டு 15 தொகுதிகளிலும் வெற்றி பெற்றிருந்தன.

# சி.வி. வேலுப்பிள்ளை எழுதிய 'எல்லைப்புறம்' நாவல் 62 ஆண்டுகளுக்குப் பின்னர் தமிழகத்தில் வெளியீடு

இலங்கையின் முன்னணி எழுத்தாளரான சி.வி. வேலுப்பிள்ளை அவர்கள் 1962இல் எழுதி தினகரனில் வெளிவந்த ‘எல்லைப்புறம்’ என்ற நாவலை, அவர் மறைந்து 40 ஆண்டுகளுக்குப் பின்னர் கலைஒளி முத்தையாபிள்ளை நினைவுக்குழு சார்பில் பேராசான் மு.நித்தியானந்தன், எச்.எச்.விக்கிரமசிங்க ஆகிய இருவரும் இணைந்து தமிழகத்தில் வெளியிட்டுள்ளனர்.

சி.வி.வேலுப்பிள்ளை (1914 1984) மலையகத்தில் தோன்றிய ஆங்கிலக் கவிஞராவார். கவிதை, நாவல், நடைச் சித்திரங்கள், அரசியல் கட்டுரைகள் என்று ஆங்கிலத்திலும் தமிழிலும் எழுதியவர்.

சமூக கலை இலக்கிய அரசியல் செயற்பாட்டாளர் என்று பன்முக ஆளுமை மிக்கவராக விளங்கினார். 1947இல் முதலாவது பாராளுமன்றத் தேர்தலில் இலங்கை இந்தியன் காங்கிரஸ் சார்பில் தலவாக்கொல்லை தொகுதியில் போட்டியிட்டு பாராளுமன்ற அங்கத்தவர் ஆனார். இறுதிவரை, தேசிய தொழிலாளர் சங்கத்தினை வழிநடத்தும் ஆத்மசுத்தி மிக்க தொழிற்சங்கவாதியாகவே வாழ்த்து மறைந்தார்.

ஆட்டுத் தலையும் மனித உடலும் கொண்ட கொடூர இராட்சதனைக் கொன்ற திசீயஸ்மீது காதல் கொண்டு, அவனை மீட்டெடுத்துத் தப்பிக்க உதவிய இளவரசி அரியாட்னியை, சாகும்வரை நக்லொஸ் தீவில் கைவிட்டுச் சென்ற திசீயஸ் பற்றிய கிரேக்கத் தொன்மத்தைக் கொண்டு அஞ்ஜெலிக்கா கவுஃப்மன் என்ற ஆங்கிலேயப் பெண் ஓவியர் 1774இல் வரைந்த வண்ணத்தைல ஓவியத்தை அட்டைப் பட



சி.வி.வேலுப்பிள்ளை



பேராசிரியர் மு.நித்தியானந்தன்



எச்.எச்.விக்ரமசிங்க

மாகக் கொண்டும், தமிழகத்தின் புகழ்பெற்ற எழுத்தாளரான ஆகிலனின் முன்னுரையோடும் இந்த நாவல் வெளிவந்திருக்கிறது.

சி.வி. வேலுப்பிள்ளை 195859 களில் தினகரனில் எழுதிய கட்டுரைகளைத் தொகுத்து ‘மலையக அரசியல் தலைவர்களும் தளபதிகளும்’ என்ற வரலாற்று ஆவணத்தை கலைஒளி முத்தையாபிள்ளை நினைவுக்குழு லண்டனில் வெளியிட்டது. 1960களின் பிற்பகுதியிலிருந்து அவர் மரணமாகும்வரை மு.நித்தியானந்தன், எச்.எச்.விக்கிரமசிங்க இருவரும் சி.வி. வேலுப்பிள்ளையுடன் இதயசுத்தியான அன்பு கொண்டவர்கள்.

'சி.வி.வேலுப்பிள்ளை 100ஆவது ஜனன தின நினைவு மலர்' ஒன்றினை வெளிக்கொண்டுவரும் பெரும் முயற்சியில் சு.முரளிதரன், இரா.சந்திரமோகன், மு. நேசமணி, சி. மகாலிங்கம் ஆகியோர் ஈடுபட்டனர். அனைத்து வேலைகளும் முடிந்து, இறுதித் தருணத்தில் பிரச்சினை வந்தபோது, விக்ரமசிங்க உடனடியாகவே உதவி வழங்க முன்வந்தார். மலர்க் குழுவினர் மனம் நெகிழ்ந்து எச்.எச்.விக்ரமசிங்க அவர்களுக்கு நன்றி தெரிவித்திருக்கிறார்கள்.


'மாத்தளை செல்வா' என இலக்கிய வட்டத்தில் பரவலாக அறியப்படும் எச்.எச்.விக்கிரமசிங்க அவர்கள் சி.வி.வேலுப்பிள்ளை மீது கொண்ட பேரபிமானம் காரணமாக, இம்மலரின் தயாரிப்புச் செலவுக்கு அப்பாலான அச்சுச் செலவுக்குப் பூரண அனுசரணை வழங்கியுள்ளனர்' என்று மலர்க்குழுவினர் நன்றி தெரிவித்திருப்பதை இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவரும் முன்னாள் தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சருமான பழனி திகாம்பரம் அவர்கள் சி.வி.யின் நூற்றாண்டினை முன்னிட்டு தபால் முத்திரை வெளியிட்டு கௌரவம் செய்தமை வரலாற்றில் அவரை என்றும் நினைவுகூரும்.

மு.நித்தியானந்தன் கொழும்புப் பல்கலைக்கழகத்தில் படித்துக்கொண்டிருந்த காலத்திலிருந்தே சி.வி.யுடன் நெருக்கமான உறவு கொண்டிருந்தார். சி.வி.யின் வீட்டிற்குச் சென்று சந்திக்கும் அளவுக்கு நித்தியானந்தன் அவர்மீது அன்பு கொண்டிருந்தார். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் மு.நித்தியானந்தன் விரிவுரையாளராக இருந்தபோது, கொழும்பிற்கு வந்து சி.வி.யைச் சந்தித்து, அவருடைய சம்மதத்துடன் 'வீடற்றவன்' என்ற நாவலை வெளியிட்டார். சென்னையில் இருந்த காலத்திலும் சி.வி. எழுதித் தட்டச்சில் வைத்திருந்த பிரதியை அவரே அச்சிட்டு, இர.சிவலிங்கத்தின் முன்னுரையோடு வெளியிட்டார். அழகிய அட்டைப் படத்துடன் அந்நூல் வெளியாகி இருந்தது.

லண்டன் சென்ற பின்னரும், மலையக இலக்கியத்தின்மீது தனக்கிருந்த பேராவலை அவர் வெளிப்படுத்திய வண்ணமேயிருந்தார். கலைஒளி முத்தையாபிள்ளை நினவுக்குழுவின் வெளியீடாக சி.வி.யின் 'மலையக அரசியல் தலைவர்களும் தளபதிகளும்' என்ற நூலை மு.நித்தியானந்தன் எச்.எச். விக்ரமசிங்கவுடன் இணைந்து 2022 ஆம் ஆண்டு வெளியிட்டார்.

தற்போது தமிழகத்தில் வெளி வந்திருக்கும் 'எல்லைப்புறம்' என்ற சி.வியின் நூல் அவரின் இன்னுமொரு பக்கத்தை வாசகர்களுக்குத் திறந்து காட்டும். எல்லைப்புறம் என்ற நாவலின் வெளியீட்டு விழா




மே மாதம் லண்டனிலும் அட்டனிலும் கொழும்பு தமிழ்ச் சங்கத்திலும் நடைபெற இருக்கிறது. லண்டனில் வாழும் எச்.எச். விக்கிரமசிங்கவின் புதல்வர் சங்கர விக்கிரமசிங்க இந்நூலுக்கான அனுசரணை வழங்கியிருக்கிறார்.

மரதன் கிருஷ்ணன்...✍

# திருச்சி கொட்டப்பட்டு பகுதியில் இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாமிலிருந்து வாக்களித்த முதல் பெண்



**திருச்சி எம். கே. ஷாகுல் ஹமீது**

திருச்சி கொட்டப்பட்டு பகுதியில் இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ள நளினி என்ற பெண்ணுக்கு வாக்குரிமை வழங்கப்பட்டுள்ளதைத் தொடர்ந்து, அன்னை ஆசிரமம் எம்எம் நடுநிலைப்பள்ளியில் வெள்ளிக்கிழமை அவர் தனது முதல் வாக்கினைச் செலுத்தினார். திருச்சி கொட்டப்பட்டு பகுதியில் இலங்கை தமிழர் மறுவாழ்வு முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ள நளினி என்ற பெண்ணுக்கு, திருச்சி நாடாளுமன்றத் தொகுதியில் வாக்களிக்க வாக்குரிமை வழங்கப்பட்டுள்ளது. அது பற்றி நளினி கூறியதாவது, "மாவட்ட நிர்வாகத்தால் அதிகாரிகள் நியமிக்கப்பட்டு, ஒரு குறிப்பிட்ட வரையறைக்குள் இலங்கைத் தமிழர்களுக்கான முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளவர்களை கண்காணிப்புடன் வைத்திருப்பார்கள்.

எங்களை இலங்கைத் தமிழர் என்று தெரிவிப்பதை விட, இந்திய வம்சாவளியினர் என்று அதிகாரிகள் அடையாளப்படுத்த வேண்டும் என்று தான் நாங்கள் எதிர்பார்க்கிறோம். எங்களுக்கான பிறப்புச் சான்றிதழில் இந்தியத் தமிழர் என்று குறிப்பிடப்பட்டிருக்கும். இலங்கையில் வழங்கப்படும் அடையாள அட்டையில், இந்தியர் என்பதற்காக எக்ஸ் என்றும் குறிப்பிட்டிருப்பார்கள். அதனால் அங்கு வாக்குரிமை இல்லாத நிலையில், இங்கு வந்து 40 ஆண்டுகள் ஆகியும் அந்த உரிமை இல்லாமல் முடங்கி கிடந்தோம். அதில் எனக்கு மட்டும் வாக்குரிமை கிடைத்துள்ளது. முகாமில் உள்ள அனைவருக்கும் இந்திய குடியுரிமை கிடைக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்பில் தான் இருக்கிறோம். மத்திய அரசும், மாநில அரசும் எங்கள் எதிர்பார்ப்பை கவனத்தில் கொண்டு குடியுரிமை வழங்க வேண்டும்.

தற்போது அரசு அதிகாரிகள் மேற்கொண்ட முயற்சியால், முதல் முறையாக முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ளவர்களில் எனக்கு வாக்குரிமை கிடைத்துள்ளது. இதை என்னைச் சார்ந்த மக்களுக்கான உரிமையாக கருதுகிறேன். எனது தாத்தா, பாட்டி இந்தியாவில் பிறந்தவர்கள். எனது அப்பா, அம்மா இந்திய வம்சாவளியினர். நான் ராமநாதபுரத்தில் தான் பிறந்தேன்.

இதன் அடிப்படையில், நான் இந்திய பிரஜை என்பதற்கான ஆவணங்கள் வேண்டும் என நீதிமன்றத்தை நாடி சென்னை உயர் நீதிமன்ற மதுரைக்கிளையில் விண்ணப்பித்து போராடினேன். இறுதியாக, எனக்கு இந்திய குடியுரிமைக்காக கடவுச்சீட்டு வழங்கப்பட்டது. அதன் அடிப்படையில், நாடாளுமன்றத் தேர்தலில் வாக்களிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் போராடி வாக்குரிமையைப் பெற்றேன்" என்றார்.

## பாடசாலைகளுக்கு உணவு பொருட்கள்...

அரிசி வழங்கப்படுவதுடன், ஜனாதிபதி செயலகத்தின் கீழுள்ள உலக உணவுத் திட்டத்துக்கான கூட்டுச் செயலகத்தின் பணிப்பாளர் நாயகம் எம்.எச்.ஏ.எம்.ரிப்லானின் மேற்பார்வையில் இவ்விநியோக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

முதற்கட்டமாக மாகாண மட்டத்திலுள்ள பாடசாலைகளுக்கு 735 மெற்றிக்தொன் அரிசி வழங்கும் நடவடிக்கை நேற்று ஆரம்பமானதுடன், இன்றும் (20) இப்பணி தொடரவுள்ளது. சம்பந்தப்பட்ட மாகாண கல்வித் திணைக்கள அதிகாரிகள் மற்றும் பொது சுகாதாரப் பரிசோதகர்களின் கண்காணிப்பின் கீழ் பாடசாலைகளுக்கு அரிசி விநியோகிக்கப்படுகிறது.

இதேவேளை மே 19ஆம் திகதி பாடசாலை புதிய தவணை ஆரம்பிக்கப்பட்ட பின்னர் 378.835 மெற்றிக்தொன் பருப்பு, 412.08 மெற்றிக்தொன் சூரியகாந்தி சமையல் எண்ணெய், 300 மெற்றிக்தொன் பேரீச்சம்பழம் பாடசாலைகளுக்கு விநியோகிக்கப்படுமென உலக உணவு திட்டத்துக்கான கூட்டுச் செயலகத்தின் பணிப்பாளர் நாயகம் எம்.எச்.ஏ.எம்.ரிப்லான் தெரிவித்தார். நாட்டிலுள்ள தரம் 15வரையுள்ள அனைத்து பாடசாலை மாணவர்களுக்கும் பாடசாலையில் ஒருவேளை உணவு வழங்க கல்வி அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது. போசாக்கு நிபுணர்களின் பரிந்துரைகளை கருத்திற்கொண்டு மாணவர்கள் கல்வி நடவடிக்கைகளில் ஈடுபடும் முன்னர் தினமும் காலை 7.30 மணி முதல் 8.30 மணிவரை காலை உணவு வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தினூடாக 'ஆரோக்கியமான சுறுசுறுப்பான மாணவர் தலைமுறை' என்ற கருப்பொருளின் கீழ் 2024ஆம் ஆண்டுக்கான பாடசாலை உணவுத் திட்டம், பாடசாலை மாணவர்களிடையே போசாக்கு பிரச்சினைகளை குறைத்தல், மாணவர்களின் தினசரி பாடசாலை வருகையை அதிகரித்தல், நல்ல உணவுப் பழக்கம் மற்றும் சுகாதாரப் பழக்கங்களை மேம்படுத்துதல், கல்வி மேம்பாட்டு மட்டத்தை உயர்த்த பங்களித்தல், உள்நாட்டு உணவு கலாசாரத்தை கட்டியெழுப்புதல் ஆகிய அடிப்படை நோக்கங்களை நிறைவேற்ற எதிர்பார்க்கப்படுகிறது. 9,134 அரச பாடசாலைகளிலும் 100க்கும் குறைவான மாணவர்களை கொண்ட அனைத்து பாடசாலைகளிலுமுள்ள அனைத்து ஆரம்ப வகுப்பு மாணவர்களையும் உள்ளடக்கிய இந்தாண்டு பாடசாலை உணவுத் திட்டத்தின் மூலம் 1.6 மில்லியன் மாணவர்கள் பயனடைந்துள்ளனர்.

இதற்காக ஒன்பது மாகாண சபைகளுக்கு அரசாங்கம் நேரடியாக 16,600 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கியுள்ளதுடன், உலக உணவுத் திட்டம் மற்றும் அமெரிக்க விவசாயத் திணைக்களம் (USDA) உட்பட பல அமைப்புகளும் அனுசரணை வழங்குகின்றன.

## இந்திய தேர்தலின் முதற்கட்டம்...

தமிழ்நாட்டிலுள்ள 39 தொகுதிகளிலும் புதுச்சேரியிலுள்ள ஒரு தொகுதியிலும் நேற்று தேர்தல் நடைபெற்றது.

தமிழ்நாடு பா.ஜ.க. தலைவர் அண்ணாமலை, கோவை மக்களவை தொகுதியில் இம்முறை போட்டியிடுகிறார்.

அவரை எதிர்த்து தி.மு.க. தரப்பில் கணபதி ராஜ்குமார் போட்டியிடும் நிலையில், அ.தி.மு.க. சார்பாக சிங்கை ராமச்சந்திரன் களம் காண்கிறார். அண்ணாமலை போட்டியிடுவதால், கோவை தொகுதி நட்சத்திர தொகுதியாக மாறியுள்ளது. இந்நிலையில் கரூர் மாவட்டம் அரவக்குறிச்சியில் தனது வாக்கைச் செலுத்தினார்.

சென்னை தேனாம்பேட்டை எஸ்.ஐ.இ.டி. கல்லூரியில் முதலமைச்சர் ஸ்டாலின் தனது வாக்கை பதிவு செய்தார். தனது வாகனத்தை வாக்குச்சாவடியிலிருந்து 100 மீற்றர் தொலைவில் நிறுத்திவிட்டு தனது மனைவி துர்காவுடன் நடந்துசென்று வாக்களித்தார்.

மேலும் தனக்கு முன்னதாக காத்திருந்த வாக்காளர்களோடு வாக்காளர்களாக வரிசையில் நின்று வாக்களித்தார்.

அதேபோன்று நடிகர் ரஜினிகாந்த், நடிகர் விஜய், நடிகை குஷ்பு, சுந்தர் சீ, உள்ளிட்டோரும் நேற்று வாக்குகளை பதிவு செய்தனர்

தற்போது ஆட்சியிலுள்ள பா.ஜ.க. தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி அரசாங்கத்தின் பதவிக்காலம் இந்தாண்டு ஜூன் 16ஆம் திகதியுடன் நிறைவடையவுள்ளது.

இந்நிலையில் புதிய பாராளுமன்றத்தை தெரிவுசெய்வதற்கான அறிவிப்பை கடந்த மார்ச் 16ஆம் திகதி இந்திய தேர்தல்கள் ஆணைக்குழு வெளியிட்டது.

நேற்று 102 தொகுதிகளுக்கு தேர்தல் நடைபெற்றதுடன், இம்மாதம் 26ஆம் திகதி 89 தொகுதிகளுக்கும் மே 07ஆம் திகதி 94 தொகுதிகளுக்கும் மே 13ஆம் திகதி 96 தொகுதிகளுக்கும் மே 20ஆம் திகதி 49 தொகுதிகளுக்கும் மே 25ஆம் திகதி 57 தொகுதிகளுக்கும் ஜூன் 01ஆம் திகதி 57 தொகுதிகளுக்கும் தேர்தல் நடைபெறவுள்ளன.

தமிழ்நாட்டின் 39 தொகுதிகளில் 950 வேட்பாளர்களும் புதுச்சேரி தொகுதியில் 26 வேட்பாளர்களும் போட்டியிடுகின்றனர்.

இந்நிலையில் தேர்தல் வாக்குகள் எண்ணும் நடவடிக்கை ஜூன் 4ஆம் திகதி ஆரம்பிக்கப்படுமெனவும், இந்திய செய்திகள் மேலும் தெரிவிக்கின்றன.

உலகின் மிகப்பெரிய ஜனநாயக நாடான இந்தியாவில் 5 ஆண்டுகளுக்கு ஒருமுறை பாராளுமன்ற தேர்தல் நடத்தப்பட்டு, புதிய அரசாங்கம் தெரிவு செய்யப்படுவதுடன், உலகின் மிகப்பெரிய தேர்தல்களில் ஒன்றாக இந்திய பாராளுமன்ற தேர்தல் கருதப்படுகிறது.

## கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு...

128Slice CT Scan மூலம் பொது மக்களுக்கான வைத்திய சேவைகள் அமைச்சின் செயலாளர், வைத்தியர் பாலித மஹிபால தலைமையில் ஆரம்பமானது.

220 மில்லியன் ரூபா பெறுமதியான இந்த அதிநவீன CT ஸ்கேன் இயந்திரமானது சுகாதார அமைச்சால் முன்னெடுக்கப்படும் சுகாதாரத்துறை அபிவிருத்தி திட்டத்துக்கு ஆசிய அபிவிருத்தி வங்கியால் வழங்கப்பட்டுள்ளது.

விரைவான, பாதுகாப்பான மற்றும் துல்லியமான நோயறிதலுக்கு 128Slice CT Scan இயந்திரம் உதவுவதுடன், நோயை தீர்மானிப்பதற்கும் தேவையான கண்டறியும் தரவையும் வழங்குகிறது.

வாகன விபத்துகள், தாக்குதல்கள், விழுதல் போன்றவற்றால் மூளை மற்றும் முதுகுத்தண்டு பாதிப்புக்குள்ளான நோயாளர்கள், மூளைக்கட்டிகள், மூளைப்புற்றுநோய், மூளையில் இரத்தக்கசிவு போன்றவற்றுக்கு சத்திரசிகிச்சை செய்ய வேண்டிய நோயாளர்கள், உயர் இரத்த அழுத்தமுள்ள நோயாளர்களுக்கு மூளைக்குள் இரத்தக்கசிவை நிறுத்த சத்திரசிகிச்சை செய்ய வேண்டிய நோயாளர்கள், சத்திரசிகிச்சைக்கு முன்னரும் பின்னரும் இந்த CT ஸ்கேன் இயந்திரம் நோயின் நிலையை கண்டறிய, தேவையான அறிக்கைகளை பெறவும் பயன்படுகிறது.

தேசிய வைத்தியசாலையின் நரம்பியல் சத்திரசிகிச்சை பிரிவில் 10 சத்திரசிகிச்சை அலகுகள், 02 தீவிர சிகிச்சை பிரிவுகள், அதிநவீன மருத்துவ உபகரணங்களுடன் 200 படுக்கைகள் திறன் கொண்ட தீவிர சிகிச்சை பிரிவுகளை கொண்டுள்ளது. இப்பிரிவில் விசேட பயிற்சி பெற்ற மருத்துவர்கள், தாதியர்கள் உள்ளிட்ட பலர் கடமையாற்றுகின்றனர்.

அரசாங்க வைத்தியசாலையொன்றில் நிறுவப்பட்ட மிகப்பெரிய மற்றும் முக்கியமான நரம்பியல் சத்திரசிகிச்சை பிரிவாகும். மேலும் இந்த நரம்பியல் சத்திரசிகிச்சை பிரிவில் ஹெலிகொப்டர் தரையிறங்கும் வசதிக்கான (ஹெலிபேட்) கருவிகளும் பொருத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## யாழ். பல்கலைக்கழக பொன்விழா;...

அங்கமாக ஆரம்பிக்கப்பட்டு, இந்த வருடத்துடன் 50ஆவது ஆண்டை பூர்த்தி செய்து பொன்விழா காண்கிறது.

யாழ். பல்கலைக்கழகத்தின் உயர் பட்டப்படிப்புகள் பீடமும் கலைப் பீடத்தின் கல்வியியல் துறையும் இணைந்து ஏற்பாடு செய்துள்ள இம்மாநாடனது 'நாளையை வலுப்படுத்தல், கல்வியின் போக்குகளும், அவற்றை புரிந்துகொள்ளவும் உள்வாங்கவும் வடக்கு மாகாணத்தின் இயலுமைகள்' எனும் கருப்பொருளில் நடைபெறவுள்ளது.

இம்மாநாட்டின் காலை அமர்வு கைலாசபதி கலையரங்கிலும், மாலை அமர்வு உயர் பட்டப்படிப்புகள் பீடத்திலும் நடைபெறவுள்ளன.

யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராசா தலைமையிலும் உயர் பட்டப்படிப்புகள் பீட பீடாதிபதி பேராசிரியர் செ.கண்ணதாசன் மற்றும் கலைப் பீடாதிபதி பேராசிரியர் சி.ரகுராமின் இணைத் தலைமையிலும் இம்மாநாடு நடைபெறவுள்ளது. கல்வியியல் துறைத் தலைவர் கலாநிதி ஆ.நித்திலவர்ணண் மாநாட்டின் இணைப்பாளராக செயற்படவுள்ளார். வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் ம.பற்றிக் டிரஞ்சன், வடமாகாண கல்விப் பணிப்பாளர் தி.ஜோன்குயின்ரஸ் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்துகொள்ளவுள்ளனர்.

சனிக்கிழமை நடைபெறவுள்ள அங்குரார்ப்பண நிகழ்வில் திறவுகோல் உரையை கொழும்பு பல்கலைக்கழக கல்வியியல் பீட கல்வி உளவியல் இருக்கை பேராசிரியர் மஞ்சுளா விதாணபத்திரண நிகழ்த்தவுள்ளார். 'வாண்மைத்துவ விருத்திக்கான ஆய்வு மைய புத்தாக்கங்கள்: வடக்கு இலங்கையின் ஆசிரியர் கல்விக்கான தந்திரோபாய அணுகுமுறை' எனும் தலைப்பில் இந்த உரை நிகழ்த்தப்படவுள்ளது.

## அமரர்களான தெவரப்பெரும,...

அதனையடுத்து சிறந்த சமூக செயற்பாட்டாளராக இருந்த சர்வோதய இயக்கத்தின் ஸ்தாபகர் ஏ.டி.ஆரியரத்னவின் பூதவுடலுக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று (19) இறுதி அஞ்சலி செலுத்தினார்.

பூதவுடல் வைக்கப்பட்டுள்ள மொரட்டுவை சர்வோதய தலைமையகத்துக்கு நேற்று முற்பகல் சென்ற ஜனாதிபதி, பூதவுடலுக்கு இறுதி அஞ்சலி செலுத்தியதுடன், அங்கு வைக்கப்பட்டிருந்த இரங்கல் குறிப்பேட்டில் குறிப்பொன்றையும் பதிவிட்டார்.

பின்னர் உறவினர்களுடன் சிறிது நேரம் உரையாடி அவர்களுக்கு தனது அனுதாபத்தை தெரிவித்தார். ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான வஜிர அபேவர்தன உள்ளிட்ட பலரும் இதன்போது உடன் இருந்தனர்.

## கலந்துரையாடல்களை நடத்த IMF...

தேவைகளின் ஒப்பீட்டுத்தன்மை திட்டத்தின் கீழ் இரண்டாவது மதிப்பாய்வை முடிக்க முன்னர் இதனை விரைவில் அடையக்கூடியதாக இருக்குமென்றார்.

இவ்வார தொடக்கத்தில் சுமார் 12 பில்லியன் அமெரிக்க டொலர் கடனை மறுசீரமைக்க சர்வதேச கடனீட்டு பத்திரதாரர்களுடன் உடன்பாட்டை எட்டத் தவறியதாக இலங்கை தெரிவித்திருந்தது. ஜூன் மாதத்தில் இலங்கை தனது 2.9 பில்லியன் அமெரிக்க டொலர் சர்வதேச நாணய நிதியத்தின் திட்டத்தில் மூன்றாவது தவணையை பெறுவதில் தாமதம் ஏற்படக்கூடுமென்ற கவலையையும் வெளிப்படுத்தியிருந்தது.

சர்வதேச கடனீட்டு பத்திரதாரர், திட்டத்தின் 'அடிப்படை அளவுருக்கள்', அதன் நாணய நிதியத் திட்டத்தின் உள்ளடகத்துடன் பொருந்தவில்லையென்பது முக்கிய முட்டுக்கட்டைகளில் ஒன்றாகுமென அரசாங்கம் தெரிவித்திருந்தது.

"இரு தரப்பினரும் தமது கலந்துரையாடல்களை விரைவாக தொடர நாம் ஊக்குவிக்கிறோம்" என சர்வதேச நாணய நிதியம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

## Specified Skilled Worker திட்டத்தில்...

கொள்ளுமாறு, வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் அழைப்பு விடுத்துள்ளது.

ஜப்பானில் அதிக சம்பளம் பெறும் வாய்ப்பை வழங்கும் (SSW) Specified Skilled Worker விசா திட்டம், உங்கள் ஜப்பானிய கனவை நிறைவேற்றுவதற்கான பல சட்டப் பொறிமுறைகளினூடாக சிறந்த வாய்ப்பை வழங்கியுள்ளதாகவும், அப்பணியகம் தெரிவித்தது.

## மெய்வல்லுநர் ஜாம்பவான்...

நடைபெற்ற ஆசிய விளையாட்டு போட்டியில் உயரம் பாய்தலில் 1.95 உயரத்துக்கு பாய்ந்து தனது ஆற்றலை வெளிப்படுத்தி புதிய சாதனையுடன் தங்கப்பதக்கம் வென்றிருந்தார்.

இதன் மூலம் சர்வதேச மெய்வல்லுநர் அரங்கில் இலங்கைக்கு தங்கப் பதக்கம் ஈட்டிக்கொடுத்த முதல் வீரர் என்ற வரலாற்று சிறப்பும் நாகலிங்கம் எதிர்வீரசிங்கத்துக்கு உள்ளது.

பின்னர் 1962ஆம் ஆண்டு ஜகார்த்தாவில் நடைபெற்ற ஆசிய விளையாட்டு விழாவில் உயரம் பாய்தலில் வெள்ளிப்பதக்கத்தை வென்றிருந்தார்.

பாடசாலை பருவத்திலேயே உயரம் பாய்தலில் அகில இலங்கை சாதனையை முறியடித்த பெருமையும் அவருக்கு உள்ளது.

இலங்கை, சியேரா லியோன், பப்புவா நியூகினியா, நைஜீரியா ஆகிய நாடுகளில் பல்கலைக்கழக விரிவுரையாளராக பணியாற்றிய இவர், யுனெஸ்கோவிலும் 5 ஆண்டுகள் கடமையாற்றியிருந்தார்.

## நீரிழிவு நோயால் பாடசாலை...

பாலசிங்கம் தெரிவித்தார். பாடசாலை மாணவர்களை மையப்படுத்தி அண்மையில் நடத்தப்பட்ட மருத்துவ பரிசோதனையில் உடற்பருமன், உயரத்துக்கேற்ற எடை இல்லாமையாகிய 02 காரணிகள் கண்டறியப்பட்டதுடன், நகர்ப்புறங்களிலுள்ள பெரும்பாலான பிள்ளைகள் இந்தக் காரணிகளால் உயிரிழந்தமையும் தெரியவந்துள்ளதாகவும், அவர் கூறினார்.

ஆகையால் நீரிழிவு நோயால் பாடசாலை மாணவர்கள் பாதிக்கப்பட்டுள்ளதை கண்டறிய விசேட கணக்கெடுப்பை நடத்த தாம் தீர்மானித்துள்ளதாகவும், அவர் மேலும் தெரிவித்தார்.


இவ்வாறிருக்க பாடசாலை சிற்றுண்டிச்சாலைகளில் விற்பனை செய்யப்படும் உணவுகள் தொடர்பாக சுகாதார அமைச்சால் ஏற்கெனவே தயாரிக்கப்பட்ட ஆலோசனை தற்போது செயலிழந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## இன்றைய பலன்கள் (20.04.2024)



கலாநிதி சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபு சர்மா
(ஸ்ரீ வித்யா ஜோதிட நிலையம் கொழும்பு)

**மேஷம் :**
புது முயற்சிகள் அனைத்திலும் வெற்றி கிடைக்க கூடும். பொருளாதார நிலை திருப்தி தரும். புதிய பாதை புலப்படும்.




**ரிஷபம் :**
மன அமைதி குறையும். உடன்பிறப்புகள் உங்களை விட்டு விலகாமல் பார்த்துக் கொள்ளுங்கள். பூமி விற்பனையில் கவனம் தேவை.




**மிதுனம் :**
ஏமாற்றங்களை அதிகம் சந்திக்கும் நேரமிது. யாரையும் நம்பி செயல்பட இயலாது. இடம் பூமி வாங்கினாலும் விற்றாலும் கூடுதல் கவனம் தேவை.



**கடகம் :**
உடல் நிலையில் அதிக கவனம் தேவைப்படும். ரண சிகிச்சைகளும் மருத்துவ செலவுகளும் உண்டு. தொழிலில் குறுக்கடிகள் அதிகரிக்கும்.



**சிம்மம்:**
மற்றவர்களை நம்பி எந்த பொறுப்பையும் ஒப்படைக்க இயலாது. அளவுக்கு மீறிய விரயங்களால் மன அழுத்தம் உண்டாகும்.




**கன்னி :**
வெளிநாட்டு வணிகம் ஆதாயம் தரும். என்றைக்கோ குறைந்த விலையில் வாங்கி போட்ட இடம் அல்லது பூர்விக சொத்துக்கள் அதிக விலைக்கு விற்று மகிழ்ச்சி தரும்.



**துலாம் :**
பிள்ளைகள் வழியில் சில பிரச்சினைகள் மீண்டும் தலை தூக்கும். வந்த வரன் கைநழுவை செல்லலாம்.உடன் இருப்பவர்களால் நன்மை கிடைக்கும்.




**விருச்சிகம் :**
தைரியமும் தன்னம்பிக்கையும் கூடும். தொழிலில் புதிய பங்குதாரர்கள் வந்தினைய வாய்ப்பு உண்டு. ஆகாரத்தில் கட்டுப்பாடு செலுத்தி ஆரோக்கியத்தை சீராக வைத்துக் கொள்ளுங்கள்.



**தனுசு :**
யாரையும் நம்பி எதையும் செயற்டுத்த முடியாது. உத்தியோகத்தில் உங்களுக்கு உழைப்புக்கு ஏற்ற பலன் கிடைப்பது அரிதாக இருக்கும்.



**மகரம் :**
மீன் முறையீடுகள் செய்ய கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்காமல் தாமதப் படலாம். வாக்குவாதங்களை தவிர்க்க வேண்டிய நேரம் இது.



**கும்பம் :**
எதிரிகளால் சில தொல்லைகள் வந்து சேரும். தொழில் உத்தியோகம் போன்றவற்றில் உங்கள் முன்னேற்றத்தை யாரிடமும் பகிர்ந்து கொள்ள வேண்டாம்.



**மீனம் :**
நீண்ட தூர பயணங்கள் அதிகரிக்கும். அலைச்சலின் காரணமாக ஆரோக்கிய சீர்கேடுகளும் மருத்துவ செலவுகளும் உண்டு.



## தோட்ட தொழிலாளரின் சம்பள உயர்வு...

தொழிலாளர்களும் மகளிர் அணியினரும் பதாதைகள் ஏந்தியவண்ணம் பங்குபற்றினர். இதன்போது இ.தொ.கா. தேசிய அமைப்பாளர் பழனி சக்திவேல், ஆர்ப்பாட்டக்காரர்கள் மத்தியில் உரையாற்றினார்.

## வேலைத்திட்டத்தை ஏற்பதுடன்...

சந்தித்த போதே, ஐ.ம.ச. பாராளுமன்ற வேட்பாளர் அசோக ஹேரத் இவ்வாறு குறிப்பிட்டார்.

ரணில் விக்கிரமசிங்க பிரதமராக இருந்த போது 2001ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு 2025ஆம் ஆண்டு நிறைவடையவிருக்கும் 'யலி புபுதமு ஸ்ரீலங்கா' வேலைத்திட்டம் வெற்றியடைய அனைவரும் ஆதரித்திருந்தால், இன்று இலங்கை அபிவிருத்தியடைந்த நாடாக மாறியிருக்குமென்பதை சுட்டிக்காட்டிய அவர், அன்று அதனை எதிர்த்த தரப்பினர் தற்போது ஜனாதிபதியால் முன்னெடுக்கப்பட்டு வரும் 2048 அபிவிருத்தியடைந்த நாடு வேலைத் திட்டத்துக்கு குழி பறிப்பதாகவும் தெரிவித்தார். அடுத்த 02 வருடங்களில் நாட்டில் புரட்சிகரமான மாற்றத்தை மேற்கொண்டு, 10 வருடங்களுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை நாட்டின் தலைமை பதவிக்கு நியமிக்க தேவையான ஆதரவை வழங்குவதாகவும், பாராளுமன்ற வேட்பாளர் அசோக ஹேரத் மேலும் குறிப்பிட்டார்.

## இறைச்சிக்காக 17 ஆமைகளை...

வீடொன்றில் சட்டவிரோதமாக கடத்தப்பட்டு இறைச்சிக்காக அறுக்கப்பட்டதும் உயிருடனும் 17 ஆமைகளை மீட்டதுடன், இருவரை கைது செய்துள்ளதாகவும், பொலிஸார் தெரிவித்தனர். திருகோணமலையைச் சேர்ந்த இரு சந்தேக நபர்கள், மட்டக்களப்புக்கு சென்று அங்கு ஆமைகளை சட்டவிரோதமாக பிடித்து இறைச்சிக்கு 10 ஆமைகளை அறுத்ததுடன், 07 ஆமைகளை உயிருடன் வைத்திருந்தமை கண்டுபிடிக்கப்பட்டதாகவும், பொலிஸார் கூறினர்.

சந்தேகநபர்களிடம் விசாரணை மேற்கொண்டு வரும் காத்தான்குடி பொலிஸார், இவர்களை மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர்.

## அருட்தந்தை சிறில் காமினி...

"உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான சூழ்நிலைகள் உங்களுக்கு தெரியுமென்று எமக்கு தகவல் கிடைத்துள்ளதால், அது தொடர்பாக உங்களிடம் விசாரிக்க உத்தேசித்துள்ளோம்" என அவருக்கு குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தால் அனுப்பப்பட்ட கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்ததாக, அருட்தந்தை சிறில் காமினி தெரிவித்தார்.

## 'அனைவருக்கும் புகலிடம்' திட்டத்தின்...

ஒதுக்கீட்டில் 2,000 வீடுகள் அமைத்தல் மற்றும் அனைவருக்கும் புகலிடம் திட்டத்தின் கீழ் 2,000 மில்லியன் ரூபா ஒதுக்கீட்டில் வீடமைப்புத் திட்டம், 1,680 மில்லியன் ரூபா ஒதுக்கீட்டில் கிளிநொச்சி பொதுச் சந்தை கட்டடம் அமைத்தல், பஸ் நிலைய அபிவிருத்தி தொடர்பாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நேற்று கலந்துரையாடப்பட்டது.

நகர அபிவிருத்தி அதிகார சபை மற்றும் நிழல் அமைச்சுகளினூடாக நாடளாவிய ரீதியில் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியில் கிளிநொச்சிக்கான ஒதுக்கீட்டில் மேற்கொள்ள வேண்டிய அபிவிருத்தி தொடர்பாக ஆராயும் நோக்குடன் கிளிநொச்சி சுற்றுலா விடுதியில் இக்கலந்துரையாடல் நடைபெற்றது.

இதன்போது உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் விதமாக விவசாய நடவடிக்கை, குளங்கள் புனரமைப்பு, குடிநீர் விநியோகம், சந்தைக் கட்டடம் அமைப்பது தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது .

மேலும் சமகாலத்தில் செயற்படுத்தும் நிலையிலுள்ள 500 மில்லியன் ஒதுக்கீட்டிலான பூநகரி நகராக்க திட்டம், 10 ஆயிரம் மில்லியன் ரூபா ஒதுக்கீட்டில் கிராமங்களுக்கு அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கான முன்மொழிவுகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

# கிழக்கின் குரல்



## ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் தமிழ் கட்சிகளுக்குள்ளேயே மாறுபட்ட கருத்துக்கள்





(பெரியபோரதீவு தினகரன் நிருபர்)

ஜனாதிபதித் தேர்தலே முதலில் நடைபெற போகின்றது. எனினும் இதுவரையில் உத்தியோகபூர்வமாக அறிவிக்கவில்லை. தமிழ் கட்சிகளுக்குள்ளும் மாறுபட்ட கருத்துக்கள் உள்ளதாக இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு மண்முனை தென்எருவில் பற்று பிரதேசத்துக்குட்பட்ட எருவில் கிராமத்தில் புனரமைக்கப்பட்ட 8.4 கிலோமீற்றர் உள்ளக வீதிகள் இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரனால் நேற்று மக்கள் பாவனைக்காக திறந்துவைக்கப்பட்டன.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ரூ.347 மில்லியன் செலவில் காபட் மற்றும் கொங்கீறிட் வீதிகளாக புனரமைக்கப்பட்டுள்ள வீதிகளே இராஜாங்க அமைச்சரினால் மக்கள் பாவனைக்காக உத்தியோகபூர்வமாக திறந்துவைக்கப்பட்டன.

இந்நிகழ்வில் விசேட அதிதிகளாக வீதி அபிவிருத்தி அதிகார சபையின் கிழக்கு மாகாண பிரதம நிறைவேற்று பொறியியலாளர் வரதன், கிழக்கு மாகாண பாலர் பாடசாலை பணியகத்தின் தவிசாளர் வை.சந்திரமோகன், வீதி அபிவிருத்தி அதிகார சபையின் மட்டக்களப்பு மாவட்ட பிரதம நிறைவேற்று பொறியியலாளர்.

லிங்கேஸ்வரன் உள்ளிட்ட கிராமிய பொதுஅமைப்புக்களின் தலைவர்கள் பிரதிநிதிகள் என பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

தமது கிராமத்தில் நீண்டகாலமாக பாரிய பிரச்சினையாகவிருந்த கொங்கீறிட் வீதிகளை செப்பனிட்டு கொடுத்தமைக்காக அப்பகுதி மக்கள் இராஜாங்க அமைச்சருக்கு தமது நன்றிகளை தெரிவித்தனர்.

## அம்பாறை மாவட்ட பூப்பந்தாட்ட போட்டியில் காரைதீவு பிரதேச செயலக அணி முதலிடம்



(காரைதீவு குறூப் நிருபர்)

அம்பாறை மாவட்ட விளையாட்டு விழாவின் பூப்பந்தாட்ட பெண்கள் போட்டிகளில் காரைதீவு பிரதேச செயலக அணி முதலிடத்தைப் பெற்று சாதனை படைத்தது. இப் போட்டி அம்பாறையில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. சிறப்பாக நடைபெற்ற இறுதிப் போட்டியில் பெண்கள் பிரிவில் காரைதீவு பிரதேச செயலகம் வெற்றிப்பெற்று முதலிடத்தை பெற்றுக்கொண்டது. இரண்டாமிடத்தை அம்பாறை பிரதேச செயலக அணி பெற்றுக்கொண்டது.

## பல்கலைக்கழக மாணவிக்கு பாலியல் தொல்லை இராணுவ சிப்பாய் பொலிஸாரால் கைது

(மாளிகைக்காடு குறூப் நிருபர்)

பாணந்துறையிலிருந்து அம்பாறை நோக்கி பயணித்த தனியார் பஸ்ஸில் பயணம் செய்த ஒலுவில் தென்கிழக்கு பல்கலைக்கழக மாணவியொருவரிடம் பாலியல் சேட்டை புரிந்த இராணுவ சிப்பாய் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார். காலி பிரதேசத்திலுள்ள இராணுவ முகாமில் கடமையாற்றும் சியம்பலாண்டுவ புத்தகம பிரதேசத்தைச் சேர்ந்த 25 வயதுடைய இராணுவ சிப்பாயொருவர் சியம்பலாண்டுவ பொலிஸாரால் கைது செய்யப்பட்டு சியம்பலாண்டுவ நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டுள்ளார். பொலிஸாருக்கு கிடைத்த தகவலையடுத்து சியம்பலாண்டுவ பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ரவீந்திர ஹேரத் அவர்களின் பணிப்புரையின் பேரில் பெண் பொலிஸ் அதிகாரி சமன்மாலி தலைமையிலான பொலிஸ் குழுவினர் பஸ்ஸை இடையில் நிறுத்தி சந்தேகநபரான இராணுவ சிப்பாயை கைது செய்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

## புனானை தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தில் களைகட்டிய புத்தாண்டு நிகழ்வு

( மாளிகைக்காடு குறூப் நிருபர்)



மட்டக்களப்பு, புணானை ICST பல்கலைக்கழக பூங்காவில் மூவின மக்களும் ஒன்றிணைந்த மகிழ்ச்சியான புதுவருட கொண்டாட்டம் நடைபெற்றது.

தமிழ் சிங்கள புத்தாண்டு மற்றும் புனித நோன்பு பெருநாள் விடுமுறைக்குப் பிறகு புதிய கல்வி ஆண்டை ஆரம்பித்து வைத்ததுடன் ,விரிவுரையாளர்கள்,உத்தியோத்தர்கள் , ஊழியர்கள் மற்றும் நிர்வாகிகள் மீண்டும் இணைந்து கொண்டனர்.

இந்நிகழ்ச்சியில் பல்கலைக்கழக தலைவர் , துணைவேந்தர், உதவி துணை வேந்தர், பதிவாளர் என அனைவரும் பங்கேற்றனர்.

புதுப்பிக்கப்பட்ட ஆற்றல் மற்றும் உற்சாகத்துடன், கற்றல் மற்றும் வளர்ச்சியின் புதிய அத்தியாயத்தைத் தொடங்குவதில் அனைவரும் மகிழ்வுற்றனர்.

## பாதுகாப்பற்ற ஊஞ்சல் கயிறு இறுகி 8 வயது சிறுவன் உயிரிழப்பு

தோப்பூர் குறூப் நிருபர்

மூதூர் பொலிஸ்பிரிவுக்குட்பட்ட பாலத்தோப்பூரைச் சேர்ந்த எட்டு வயது மதிக்கத்தக்க எம். இஷ்பாக் என்ற பாடசாலை மாணவன் பாதுகாப்பற்ற ஊஞ்சலில் விளையாடிக் கொண்டிருந்த போது கயிறு இறுகி பரிதாபகரமாக உயிரிழந்துள்ளதாக மூதூர் பொலிஸார் தெரிவித்தனர்.

மாணவன் பாடசாலை சென்று வீட்டுக்கு வந்து மாலை வேளையில் பக்கத்து வீட்டுக்கு விளையாடச் சென்றபோதே இச்சம்பவம் பதிவாகியுள்ளது.

சம்பவ இடத்திற்கு வருகை தந்த மூதூர் நீதவான் நீதிமன்ற நீதிபதி சடலத்தை பார்வையிட்டதுடன் பிரேத பரிசோதனைக்காக திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு சடலத்தை அனுப்பிவைத்தார். பிரேதபரிசோதனையின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. இச்சம்பவம் தொடர்பாக மூதூர் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## அரச சேவையிலிருந்து ஓய்வு

(அட்டாளைச்சேனை மத்திய நிருபர்)



கல்வி அமைச்சின் கீழியங்கும், கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் இஸற். தாஜூடீன் 40 வருட அரச சேவையிலிருந்து அண்மையில்

ஓய்வு பெற்றார்.

அம்பாறை மாவட்டம், அக்கரைப் பற்றைச் சேர்ந்த இஸற்.தாஜூடீன், யாழ்.பல்கலைக்கழகப் வணிகப் பட்டதாரியாவார். 1984.12.27ம் திகதி அனுராதபுரம்

பத்தேவ முஸ்லிம் வித்தியாலயத்தில் உதவி ஆசிரியராக அவர் முதல் நியமனம் பெற்று அரச சேவையை ஆரம்பித்தார்.

அதனைத் தொடர்ந்து, இலங்கை கல்வி நிர்வாக சேவைக்கு 1988.09.01ம் திகதி

நியமனம் பெற்றார். கல்முனை ஸாஹிறாக் கல்லூரி (தேசிய பாடசாலை) பிரதி

அதிபராகவும், கல்முனை மற்றும் அக்கரைப்பற்று வலயக் கல்வி அலுவலகங்களில்

உதவிக் கல்விப் பணிப்பாளராகவும் அவர் கடமையாற்றினார்.

1996ம் ஆண்டு கொழும்பு கல்வி அமைச்சுக்கு இடமாற்றம் பெற்றுச் சென்ற அவர்,

பிரதிக் கல்விப் பணிப்பாளர், கல்விப் பணிப்பாளர், மேலதிக கல்வி

வெளியீட்டு ஆணையாளர் நாயகம், கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகம் போன்ற

பதவிகளை வகித்து, அண்மையில் 40 வருட அரச சேவையிலிருந்து ஓய்வுபெற்றார்.

மும்மொழிப் பண்டித்தியம் பெற்ற தாஜூதீன்; பல்வேறு புலமைப் பரிசில்

பெற்று, பல வெளிநாட்டுப் பயணங்களை மேற்கொண்டுள்ளார். தனது

வினைத்திறன்மிக்க கல்விப் பணியினால் கல்வி அமைச்சர்கள், கல்வி இராஜாங்க

அமைச்சர்கள், கல்வி பிரதி அமைச்சர்கள் ஆகியோரின் பாராட்டைப்

பெற்றுள்ளார்.

இஸற்.தாஜூடீன் அக்கரைப்பற்றைச் சேர்நத ஓய்வுநிலை தபாலதிபர்

செய்னுலாப்தீன், லத்தீபா உம்மா தம்பதியினரின் சிரேஷ்ட புதல்வரும்,

டொக்டர் எம்.ஏ.ஏ.ஹிதாயாவின் கணவருமாவார்.

## கல்முனை வடக்கு சுகாதார பிரிவில் டெங்கு விழிப்புணர்வு

(பாண்டிருப்பு தினகரன் நிருபர்)

கல்முனை வடக்கு பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட கிராமங்களில் டெங்கு நுளம்பு பெருக்கம் தொடர்பான விழிப்புணர்வு செயற்றிட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

சுகாதார வைத்திய அதிகாரி வழிகாட்டலில் பிரதேச பொதுச்சுகாதாரப் பரிசோதகர்கள், டெங்கு ஒழிப்பு செயலணிக் குழுவினர் இணைந்து டெங்கு நுளம்பு பெருகும் இடங்கள் தொடர்பில் வீடு வீடாகச் சென்று பரிசோதனை செய்து மக்களை விழிப்பூட்டும் மற்றும் டெங்கு நுளம்பு பெருகும் வகையில் சுற்றுப்புறத்தை அசுத்தமாக வைத்திருந்தோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுத்துள்ளனர்.

கல்முனை பிரதேசத்தில் சில நாட்களாக இடையிடையே மழை பெய்துவருகின்றது. இதனையடுத்து டெங்கு நுளம்பு பெருகும் அபாயம் இருப்பதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## திருகோணமலை மாவட்ட செயலகத்தில் பல்லின கலை இலக்கிய விழா







(கிண்ணியா மத்திய நிருபர்)

திருகோணமலை மாவட்ட செயலகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட மாவட்ட பல்லின கலை இலக்கிய விழா நேற்றுமுன்தினம் (18) திருகோணமலை மாவட்ட செயலக வளாகத்தில் அரசாங்க அதிபர் சாமிந்த ஹெட்டியாரச்சி தலைமையில் நடைபெற்றது.

இதன்போது, தமிழ் சிங்கள புத்தாண்டு மற்றும் நோன்பு பெருநாள் ஆகியவற்றையொட்டி, மாவட்ட செயலக உத்தியோகத்தர்களின் சிறப்பான பங்குபற்றுதலுடன் சிங்கள, தமிழ், இஸ்லாம் மற்றும் கிறிஸ்தவ சமயங்களின் கலை கலாசார நிகழ்வுகள் அரங்கேற்றப்பட்டன.

மேலும் கயிறு இழுத்தல், முட்டி உடைத்தல், தலையணை அடி, கரண்டியில் தேசிக்காய் வைத்து நடத்தல், யானைக்கு கண் வைத்தல், தொப்பிகளை மாற்றுதல், பலூன் நடனம், பப்பாளி விதைகளை எண்ணுதல் உள்ளிட்ட பல போட்டிகள் நடாத்தப்பட்டதுடன் வெற்றியீட்டியவர்களுக்கு பரிசில்களும் இதன்போது வழங்கி வைக்கப்பட்டன.

இந்நிகழ்வில் மேலதிக அரசாங்க அதிபர்கள், மாவட்ட செயலக பதவிநிலை உத்தியோகத்தர்கள் மற்றும் மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.





நிலைபேறான வீட்டுத்தோட்ட திட்டத்தின் கீழ் நேற்று (18) திருகோணமலை நிலாவெளி கமநல சேவை நிலையத்திற்குட்பட்ட வீட்டுத் தோட்ட பயனாளிகளுக்கு கத்தரி கன்றுகள் வழங்கப்பட்டன.
(படங்கள் தம்பலகாமம் குறூப் நிருபர் )

## மாளிகைக்காடு அல் ஹுஸைன் வித்தியாலயத்தில் பண்டிகைக்கால நிகழ்வு



(மாளிகைக்காடு குறூப் நிருபர்)

காரைதீவு கோட்டத்துக்குட்பட்ட மாளிகைக்காடு அல் ஹுஸைன் வித்தியாலயத்தில் தமிழ் சிங்கள மற்றும் நோன்புப் பெருநாள் பண்டிகளையொட்டி மூவின ஆசிரிய ஆசிரியைகள் மற்றும் கல்விசாரா உத்தியோகத்தர்கள் பங்கேற்கும் நிகழ்வு பாடசாலை அதிபர் ஏ.ஸி. எம்.நழீம் தலைமையில் நடைபெற்றது.

## சடலம் மீட்பு

(புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்)

காத்தான்குடி பொலிஸ் பிரிவிலுள்ள ஆரையம்பதி பாலமுனை கடற்கரையில் நேற்றுமுன்தினம் மதியம் மீட்கப்பட்ட. பெண்ணின் சடலம் அடையாளம் காணப்பட்டுள்ளதாக காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர். ஆரையம்பதி பாலமுனை. கடற்கரையில் பெண் ஒருவரின் சடலம் கரை ஒதுங்கியதையடுத்து சடலம் மீட்கப்பட்டு மட்டக்களப்பு போதனை வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டது சடலம் அடையாளம் காணப்படாத நிலையில் விசாரணைகள் இடம்பெற்ற இந்நிலையில் காலை



சடலம் காத்தான்குடியை பிறப்பிடமாகவும் ஆரையம்பதி சிகரம் கிராமத்தை வசிப்பிடமாகவும் கொண்ட முஹம்மத் சாலி நிகாரா (வயது 59 ) என்பவரின் சடலம் என அடையாளம் காணப்பட்டுள்ளதாக காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர்

ஐந்து பிள்ளைகளின் தாய் எனவும் தெரியவருகின்றது.

# தினகரன் வர்த்தக உலா

## ஹேமாஸ் ஏற்பாட்டில் மலையேறும் நிகழ்வு



உலக மனநலிவு நோய் மாதத்தை குறிக்கும் வகையில், ஹேமாஸ் அவுட்ரீச் மையம், Ayati Sports Club உடன் கைகோர்த்து பிரத்தியேகமான மற்றும் உள்ளடக்கமான மலையேறும் நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தது. இந்தத் நிகழ்வினூடாக, மனநலிவுடைய இளம் பராயத்தினர் மற்றும் இதர விருத்தியாகும் நிலைகளைக் கொண்டவர்களுக்கு விளையாட்டு செயற்பாட்டில் பாதுகாக ஈடுபடும் சூழல் ஏற்படுத்தப்பட்டிருந்ததுடன், வலுவான சூழலும் வழங்கப்பட்டிருந்தது.

Ayati இலிருந்து அர்ப்பணிப்பான அணியினர் இந்நிகழ்வில் கலந்து கொண்டதுடன், மலையேறும் செயற்பாட்டில் பங்குபற்றுநர்கள் ஆர்வத்துடன் ஈடுபட்டதை அவதானிக்க முடிந்தது. உடல் ரீதியான சவால்களுக்கு மத்தியில், மலையேறுதல் என்பது பல்வேறு அனுகூலங்களை வழங்குகின்றது. பிரச்சினைகளை தீர்க்கும் திறன்கள் மற்றும் மொழி, பேச்சாற்றல் விருத்தியை வழங்குவதாக அமைந்துள்ளது. அத்துடன், உள, உடல்சார் மற்றும் ஒழுங்கிணைப்பு திறன்களை பெற்றுக் கொடுப்பதாகவும் அமைந்துள்ளது.

எவரெஸ்ட் சிகரத்தை அடைந்த இலங்கையின் முதலாவது நபரான ஜயந்தி குருஉதும்பலா இந்நிகழ்வில் கலந்து கொண்டார். அவருடன், Climblanka பிரதிநிதிகளும் பங்கேற்று, பங்குபற்றுநர்களுக்கு பாதுகாப்பான மற்றும் இனிய அனுபவம் கிடைப்பதை உறுதி செய்திருந்தனர்.

ஹேமாஸ் அவுட்ரீச் மையத்துக்கு, ஒரே மாதிரியான சிந்தனைகளை சவால்களுக்கு உட்படுத்தல், தடைகளை தகர்த்தல் மற்றும் சகல நபர்களுக்கும் அவர்களின் ஆற்றல்கள் சார் பாகுபாடின்றி விளையாட்டில் ஈடுபடும் ஆர்வத்தை தூண்டி, தமது கனவுகளை நோக்கி பயணிப்பதற்கு உகந்த சூழலை ஏற்படுத்திக் கொடுப்பது நோக்காக அமைந்துள்ளது.

ஹேமாஸ் அவுட்ரீச் மையத்தினால் முன்னெடுக்கப்படும் பல்வேறு பிரதான செயற்பாடுகளில் ஒரு அங்கமாக, இலங்கையின் முதலாவது "மாற்றுத்திறன் படைத்த சிறுவர்களுக்கான தேசிய நிலையம்" ஆன Ayati Centre இன் ஒரு அங்கமாக AYATI Sports Club அமைந்துள்ளது.

## மூன்று புதிய ரேடியல் டயர் வகைகளை அறிமுகம் செய்துள்ள சியெட் களனி



இலங்கையின் முன்னணி வாயு மூல டயர் உற்பத்தியாளர்களான சியெட் களனி நிறுவனம் அதி உச்ச செயற்பாடு கொண்ட மூன்று வகையான ரேடியல் டயர்களை சந்தையில் அறிமுகம் செய்துள்ளது. இது குறிப்பிட்ட வகை சார்ந்த வாகன உரிமையாளர்களுக்கு விரிவான டயர் தெரிவுகளை வழங்கி உள்ளது.

சியெட்டின் 'ஓரியன் பிராவோ' வகைப்படுத்தலில் இணைந்துள்ள புதிய ரேடியல் டயர்கள் 155/65 R14, 165/70 R14, மற்றும் 165 சு13 அளவுகளைக் கொண்டவை. முதல் இரண்டு அளவுகளும் பிரபலமான வகைகளைச் சார்ந்த கட்டடக்கமான மற்றும் சிறிய கார் வகைகளுக்கு உகந்தவை, மூன்றாவது வகை நடுத்தர அளவிலான வேன்களுக்கு உரியவை என கம்பனி அறிவித்துள்ளது.

சியெட் ஓரியன் பிராவோ 155/65 R14 மற்றும் 165/70 R14 டயர்கள் இரண்டும் மைய வடிவிலான மிகக் கவனமான அடிப்படை வடிவமைப்பைக் கொண்டவை. மேலும் மூன்று சுற்றளவு பள்ளங்கள் மற்றும் உயரமான மட்டம் கொண்டவை. இது பக்க விளைவுகளை உயர் மட்டத்தில் எதிர்த்து நின்று பாவனை காலத்தை நீடிக்கும். இதனால் ஏனைய வெளி பாதிப்புக்களும் குறைவடையும்.

155/65 R14 வகையானது சுசுகி வெகன் ஆர் வகை வாகனங்களுக்காக வடிவமைக்கப்பட்டுள்ளது. டைஹாட்சு மிரா ஈஎஸ், டைஹாட்சு ஹைஜெட், நிஸான் டேய்ஸ் மற்றும் ஹொண்டா NWGN ஆகிய வாகனங்களுக்கும் இது பொருத்தமானது. அதேவேளை 165/70 R14 டொயாடோ விட்ஸ், டொயாடோ அக்குவா, றெனோல்ட் கிவிட் மற்றும் டொயாடோ பெஹோ ஆகிய வாகனங்களுக்கு பொருத்தமானவை. இவை இலங்கை வீதிகளில் அதிகளவில் காணக் கூடிய வாகனங்களாக உள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை சியெட் ஓரியன் பிராவோ 165 R13 வேன் ரேடியல் விளையாட்டு ரகமானது 4 றிப் அதி கூடிய மட்டத்தன்மை கொண்ட வடிவமைப்பாகும். கோண வடிவிலான விலாக் குறி வடிவமைப்பு கொண்டது. நீடித்த ஆயுள் அதி கூடிய மின்கலத்தன்மை மற்றும் பாரங்களை தாங்கி எதிர்த்து நிற்கும் ஆற்றல் கொண்டது. டோயாட்டா டவுன் ஹேஸ், டொயாட்டா லைட் ஹேஸ் என்பன உட்பட இன்னும் பல வகையான வேன்களுக்கு பொருந்தக் கூடிய விதத்தில் வடிவமைக்கப் பட்டுள்ளது.

இந்த மேலதிக டயர் வகைகளின் அறிமுகம் மூலம் இலங்கையில் சியெட் டயர்களின் வகைகள் 58 ஆக அதிகரித்துள்ளதாக கம்பனி அறிவித்துள்ளது.

## கொமர்ஷல் வங்கி புதிய தலைவர் மற்றும் பிரதி தலைவர் நியமனம்





கொமர்ஷல் வங்கியின் புதிய தலைவராக உயர்தர சர்வதேச முதலீட்டு வங்கியாளர் சர்ஹான் முஹ்ஸீன் நியமிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. அத்தோடு நிதிச் சேவைகள் தொழில்சார் நிபுணரான ராஜா சேனநாயக்க பிரதித் தலைவராகவும் நியமிக்கப்பட்டுள்ளார். இந்த நியமனங்கள் 2024 ஏப்பிரல் 22 திங்கட்கிழமை முதல் அமுலுக்கு வருகின்றன.

வங்கியின் பிரதி தலைவராக இருந்த முஹ்ஸீன், தலைவராக பதவி வகித்த பேராசிரியர் ஆனந்த ஜயவர்தன ஓய்வு பெற்றதை அடுத்து அந்த இடத்துக்கு நியமிக்கப்பட்டுள்ளார்.

முஹ்ஸீன் பதவி உயர்வு பெற்றதை அடுத்து இதுவரை நிறைவேற்று அதிகாரமில்லாத பணிப்பாளராக இருந்த ராஜா சேனநாயக்க அந்த இடத்துக்கு நியமிக்கப்பட்டுள்ளார்.

சிரேஷ்ட முதலீட்டு வங்கியாளரான சர்ஹான் முஹ்ஸீன் வர்த்தக ரீதியான ஒன்றிணைப்புக்கள் மற்றும் கையகப்படுத்தல் ஆகிய பிரிவுகளிலும், கூட்டாண்மை நிதி மற்றும் மூலதன சந்தையிலும் விரிவான அனுபவம் கொண்டவர். ஆசியப் பிராந்தியம் முழுவதும் பல நிதி நிறுவனங்களில் அவற்றின் மூலோபாய கூட்டாண்மை நிகழ்ச்சி நிரல் மற்றும் திட்டமிடல்களை வகுப்பதில், பணிப்பாளர் சபைகளுடனும், சிரேஷ்ட தலைமைத்துவங்களுடனும் உயர் நிலைப் பதவிகளில் இணைந்து பணியாற்றி உள்ளார்.

இதற்கு முன் அவர் பெஸ்ட் இன் கிளாஸ் குளோபல் முதலீட்டு வங்கியிலும், கிரடிட் சுயிஸ், பேங்க் ஒப் அமெரிக்கா மெரில் லின்ச் அன்ட் ஜேபி மோர்கன் நிறுவனங்களிலும் பிராந்திய ரீதியான தலைமைத்துவ பதவிகளை வகித்துள்ளார். டீலொயிட்டின் இணை பணிப்பாளராகவும் அவர் பதவி வகித்தார்.

செப்டம்பர் 2020 முதல் கொமர்ஷல் வங்கியின் சுயாதீன நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளராக கடமையாற்றிய ராஜா சேனநாயக்க இலங்கை CA நிறுவனத்தின் முழு நேர உறுப்பினராவார். கல்வித்தகமைக்குப் பிந்திய 39 வருட அனுபவத்தை அவர் கொண்டுள்ளார்.

ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் பி.கொம் விஷேட பட்டத்தைப் பெற்றுள்ள அவர், அதே பல்கலைக்கழகத்தின் PIM பிரிவில் வர்த்தக முகாமைத்துவத்தில் பட்டப்பின் டிப்ளோமாவையும் பெற்றுள்ளார். யூரோமணியில் வங்கியியல் மற்றும் நிதி பயிற்சியையும் அவர் பெற்றுள்ளார். சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகத்தில் பொது முகாமைத்துவ பயிற்சியையும் அவர் பூர்த்தி செய்துள்ளார்.

## LankaPay விருது நிகழ்வில் மக்கள் வங்கிக்கு மகத்தான வெற்றி




இலங்கையிலுள்ள அனுமதி பெற்ற முன்னணி வர்த்தக வங்கியான மக்கள் வங்கி, அண்மையில் கொழும்பிலுள்ள ஷங்ரிலா ஹோட்டலில் இடம்பெற்ற LankaPay Technnovation Awards விருதுகள் நிகழ்வில், மதிப்புமிக்க பல விருதுகளை வென்று மகத்துவத்தின் பாரம்பரியத்தை தொடர்ந்தும் சிறப்பாக வெளிக்காண்பித்துள்ளது. வங்கித் துறையில் புத்தாக்கம் மற்றும் தொழில்நுட்ப முன்னேற்றங்களைக் கொண்டாடிய இந்நிகழ்வில், தலைநிமிர்ந்து நின்ற மக்கள் வங்கி, தனது வாடிக்கையாளர்களுக்கு அதிநவீன டிஜிட்டல் வங்கிச் சேவை தீர்வுகளை வழங்கும் தனது அர்ப்பணிப்பை சிறப்பாகக் காண்பித்துள்ளது.

இணையம் மற்றும் மொபைல் வங்கிச் சேவைகளுக்கு அரச வங்கிகள் பிரிவில் மிகவும் பிரபலமான டிஜிட்டல் கொடுப்பனவுத் தீர்வுக்கான தங்க விருது, வாடிக்கையாளர் சௌகரியத்தில் மகத்துவம், 'A' பிரிவில் நிதியியல் உள்ளடக்கம் மற்றும் 'A' பிரிவில் வருடத்தின் மிகச் சிறந்த Common ATM Enabler ஆகியவற்றுக்கான சிறப்பு விருதுகள் ஆகியன மக்கள் வங்கி வென்றுள்ள விருதுகளில் அடங்கியுள்ளன.

புத்தாக்கமான தொழில்நுட்பங்கள் மற்றும் வாடிக்கையாளர்களை மையப்படுத்திய முயற்சிகள் மூலமாக வங்கிச் சேவை கட்டமைப்பில் புரட்சிகரமான மாற்றங்களை ஏற்படுத்துவதில் மக்கள் வங்கியின் ஓயாத அர்ப்பணிப்பை இவ்விருதுகள் காண்பிக்கின்றன.

மக்கள் வங்கியின் புதுமையான மொபைல் வங்கிச்சேவைத் தீர்வான People's Wave Mobile App என்பது சிறப்பம்சங்களில் ஒன்றாகும். 2017 ஆம் ஆண்டில் இது அறிமுகப்படுத்தப்பட்டதிலிருந்து 2.3 மில்லியனுக்கும் மேற்பட்டவர்கள் இதனை டவுண்லோட் செய்துள்ளதுடன், இலங்கையில் மிகவும் நாடப்படுகின்ற தனிநபர் மொபைல் வங்கிச்சேவை செயலிகளில் ஒன்றாக மாறியுள்ளது. வங்கியின் மத்திய தொழில்நுட்ப கட்டமைப்புடன் தங்குதடையின்றி ஒருங்கிணைக்கப்பட்டுள்ள People's Wave Mobile App ஆனது கணக்கு மீதி விசாரணைகள், கடன்கள், கடனட்டைகள், பயன்பாட்டுக் கட்டணப் பட்டியல் கொடுப்பனவுகள், நிதிப் பரிமாற்றங்கள், மேற்கொள்ளப்பட்ட பரிமாற்றங்கள் தொடர்பான விபரங்கள், அடகு வைத்தல் தொடர்பான விசாரணைகள் மற்றும் பல சேவைகளை தொலைவியக்க முறையில் அடைந்து கொள்ளக் கூடிய வகையில் விரிவான வங்கிச்சேவைகளை வாடிக்கையாளர்களுக்கு வழங்குகின்றது.

## இலங்கையின் தொழில்நுட்ப சூழலை புரட்சிகரமாக்கும் Hatch மற்றும் Orion City




பெருமைக்குரிய தொழில் தொடக்க விரைவுபடுத்துனரும்/ அடைகாப்பாளருமான Hatch மற்றும் முன்னணி IT பூங்காவான Orion City ஆகியன இணைந்து, இலங்கையின் தொழில்நுட்ப சூழல்தொகுதியிலும் வணிக நடவடிக்கைகளிலும் மாற்றத்தை ஏற்படுத்தும் வகையில் ஒரு புத்தாக்கமான டிஜிட்டல் தளத்தை வெளியிட்டுள்ளன. இந்த புத்தாக்கமான செயலியானது, கொழும்பு 01 Hatch Works, கொழும்பு 09 Orion City யில் உள்ள Orion Nest, கொழும்பு 03 புதிதாக வரவுள்ள Orion City Colombo ஆகிய மூன்று முக்கிய இடங்களில் இருந்து, அத்தியாவசிய சேவைகள் மற்றும் வசதிகளுக்கான அணுகலை ஒழுங்குபடுத்தும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது. இந்த கூட்டிணைவின் மூலம், இலங்கையின் வளர்ந்து வரும் தொழில்நுட்ப சூழல் தொகுதியில், தொழில்முனைவோர் மற்றும் வணிகங்கள் போன்றவற்றிற்கு வளர்ச்சி மற்றும் ஒத்துழைப்புக்கான சிறந்த வாய்ப்புகளையும், சிறந்த அனுபவத்தை பெறுவதற்கான வாய்ப்பு வழங்கப்படும்.

இதேவேளை, கொழும்பில் 1910 ஆம் ஆண்டுக்கு முந்தைய காலப் பகுதிக்குரிய, புதுப்பிக்கப்பட்ட கட்டடத்தில் அமைந்துள்ள Hatch ஆனது, தொழில்முனைவோருக்கான மையமாக செயற்படுகிறது. அதன் வலையமைப்பில் 1,000 இற்கும் மேற்பட்ட பணியாளர்கள் மற்றும் 700 தொழில் தொடக்கங்கள் உள்ளன. கொழும்பு 09 இல் அமைந்துள்ள Orion City ஆனது, பல்வேறு சந்திப்புகள், ஓய்வு மற்றும் உணவகம் போன்ற வசதிகளை வழங்குகின்ற, 40 இற்கும் மேற்பட்ட நிறுவனங்களின் தேவைகளை பூர்த்தி செய்கின்ற உயர் மட்ட பணியிடங்களைக் கொண்டுள்ள மையம் என புகழ் பெற்று விளங்குகின்றது. கொழும்பு 03 இல் அமையவுள்ள Orion City Colombo இன் விரிவாக்கமானது, தொழில்முனைவோருக்கான வளங்கள் மற்றும் வாய்ப்புகளுக்கான அணுகலை மேலும் மேம்படுத்தும் என்பதோடு, பரபரப்பு மிக்க வணிக மாவட்டமான கொழும்பில் புத்தாக்கங்களின் மையமாக அதன் நிலையை உறுதிப்படுத்தும்.

Hatch மற்றும் Orion Nest ஆகியன, தமது கட்டடங்களில் உள்ளநிறுவனங்களுக்கு ஏற்ற வகையில், தனித்துவமான தள்ளுபடிகளின் மூலம், கொழும்பிலுள்ள அதன் முக்கிய இடங்களில் சந்திப்பிற்கான இடங்களை சிரமமின்றி பெறுவதற்கான முன்பதிவுகளை மேற்கொள்ள வாய்ப்பளிக்கிறது.

## "Great Place To Work" சான்றிதழ் பெற்ற நிறுவனங்கள் பட்டியலில் HNB FINANCE PLC

இலங்கையின் முன்னணி நிதி நிறுவனமான HNB FINANCE PLC, அதன் சிறப்பை நிரூபித்து, பணியாற்றுவதற்கு சிறந்த நிறுவனங்களின் வரிசையில் மீண்டும் இணைந்துள்ளது. பெருநிறுவன துறையில் உகந்த பணிச்சூழலைக் கொண்ட வணிகங்களை அங்கீகரித்து, அவ் நிறுவனங்களை ஆண்டுதோறும் Great Place to Work தரப்படுத்தலின் மூலம் மதிப்பீடு செய்வதன் ஊடாக 2024 ஆம் ஆண்டிற்கான இந்த கௌரவமான அங்கீகாரத்தை HNB FINANCE நிறுவனமும் பெற்றுள்ளது.

சர்வதேச அங்கீகாரத்துடன் Great Place To Workஇல், வணிக சூழல், பணியாளர் அனுபவம் மற்றும் பெருநிறுவன தலைமையின் கண்ணோட்டம் போன்ற காரணிகள் தொடர்பாக நிறுவனத்திற்கும் ஊழியர்களுக்கும் இடையிலான பரஸ்பர ஒப்பந்தம் மற்றும் நம்பிக்கையின் மூலம் அந்த வணிகங்கள் அடைந்த முன்னேற்றம், அந்த வணிகங்களில் தங்கியிருக்கும் பணியாளர்கள் மற்றும் புத்தாக்க திறன்களின் வளர்ச்சி எப்படி நடந்தது என்பது குறித்து தணிக்கை நடத்தப்படும்.

HNB FINANCE PLC இன் இந்த சாதனை குறித்து அதன் முகாமைத்துவப் பணிப்பாளரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான திரு சமிந்த பிரபாத் கருத்துத் தெரிவிக்கையில், "நிதி நிறுவனமாக எங்களின் வெற்றி HNB FINANCE குடும்பத்தின் திறமையான மற்றும் அர்ப்பணிப்புள்ள உறுப்பினர்களின் மீது தங்கியுள்ளது. எனவே, சேவை அனுபவத்தை மிகச் சிறந்த மற்றும் உகந்த நிலைக்குக் கொண்டு வருவதன் மூலம், ஊழியர்களின் நம்பிக்கையையும் விசுவாசத்தையும் நாங்கள் தொடர்ந்து பராமரிக்க முடிந்தது. பல ஆண்டுகளாக Great Place To Work ஆக அங்கீகரிக்கப்பட்டதை இதற்குச் சுட்டிக்காட்டக்கூடிய சிறந்த உதாரணம் என்று கூறலாம்." என தெரிவித்தார்.

## இலங்கையில் விவசாயத்தை மேம்படுத்தும் சர்வோதய அபிவிருத்தி நிதியின் உறுதிமொழி



சர்வோதய அபிவிருத்தி நிதி நிறுவனம் (Sarvodaya Development Finance SDF) என்பது, ஒரு நிதி நிறுவனம் என்பதற்கும் அப்பாற்பட்டது. இது இலங்கையில் விவசாயத் துறையில் மாற்றத்தின் உந்துசக்தியாகத் திகழ்கின்றது. தேசத்தின் விவசாயிகள் சமூகத்திற்கான நிலையான அர்ப்பணிப்புடன், ஆதரவு, நிலைபேண்தகமை மற்றும் வளர்ச்சி ஆகியவற்றில் அனைத்து எதிர்பார்ப்புக்களையும் மிஞ்சும் வகையில் விவசாயத் துறையை மேம்படுத்துகின்ற, மாற்றத்தை நோக்கிய பயணத்தில், SDF காலடியெடுத்து வைத்துள்ளது.

SDF இன் விவசாயத் துறை நிதியானது ரூபா 4 பில்லியன் தொகையைக் கடந்துள்ளதுடன், நாடெங்கிலும் விவசாயிகள் இந்த நிறுவனத்தின் மீது வைத்துள்ள நம்பிக்கையை இது எடுத்துக்காட்டுகின்றது. விவசாய உபரணங்களுக்காக வழங்கப்பட்ட உத்தரவாதத்தில் அரைவாசிக்கும் மேற்பட்டவை குறிப்பிட்ட காலத்திற்கு முன்பதாகவே தீர்க்கப்பட்டுள்ளமை, SDF மற்றும் விவசாய சமூகம் ஆகியவற்றுக்கிடையிலான வலுவான பிணைப்பைக் காண்பிக்கின்றது.

Diesel & Motor Engineering Plc (DIMO), Hayleys Agriculture Holdings Limited, மற்றும் Brown & Company Plc போன்ற முன்னணி வகிக்கும் தொழில்துறை நிறுவனங்களுடன் மூலோபாய கூட்டாண்மைகளை ஏற்படுத்தி, அம்பாறை, பொலன்னறுவை அனுராதபுரம் மற்றும் குருணாகல் மாவட்டங்களிலுள்ள விவசாயிகளுடன் SDF தொடர்பினை ஏற்படுத்தியுள்ளது. நெகிழ்வுத்தன்மை கொண்ட மீள்கொடுப்பனவு விதிமுறைகளுடன் இணைந்த அறுவடை இயந்திரங்கள் போன்ற அதிநவீன உபகரணங்களை வழங்கி விவசாயிகளின் நடைமுறைகளை நவீனமயப்படுத்தி சேதாரங்களை குறைக்க உதவியுள்ளது மட்டுமல்லாது தோட்டத் தொழிலாளர் பற்றாக்குறைக்கும் தீர்வளித்து, விவசாயத்தில் அறுவடை மற்றும் வினைதிறனை மேம்படுத்த SDF உதவி வருகின்றது.

Araliya Agro Holdings (Pvt) Ltd மற்றும் Araliya Seeds (Pvt) Ltd ஆகிய நிறுவனங்களுடன் ஒன்றிணைந்து, உயர்ரக தரத்திலான விதை நெல் கிடைப்பதை SDF உறுதி செய்வதுடன், புத்தாக்கமான தொழில்நுட்பங்களை உபயோகித்து, உரத்தின் உயர்ந்தபட்ச பாவனையையும் ஊக்குவிக்கின்றது. SDF நிறுவனத்திலுள்ள விவசாய விஞ்ஞானிகள், பயிற்சியாளர்கள் மற்றும் முன்மாதிரி விவசாயிகள் அறிவைப் பரப்பி, மீள்உற்பத்தித் திறன் கொண்ட விவசாய நடைமுறைகள் தொடர்பான ஆலோசனைகளை வழங்கி, எதிர்காலத் தலைமுறைகளுக்காக நிலத்தையும் மண்ணையும் ஆரோக்கியமாகப் பேணிப் பாதுகாப்பதற்கு உதவி வருகின்றனர்.

சர்வோதய அபிவிருத்தி நிதி நிறுவனம் இலங்கை விவசாயிகளுடன் ஒன்றிணைந்து, சுபீட்சத்துக்கான விதையை விதைத்து, தலைசிறந்த விவசாயத்திற்கான புதிய சகாப்தத்தை வரவேற்கின்றது.

## Manu Mehewara திட்டத்தின் கீழ் கிராமப்புற சமூகங்களுக்கு P&Sஇன் சுத்தமான நீர்



இலங்கையின் மிகப் பெரிய மற்றும் மிகவும் புகழ்பெற்ற விரைவு சேவை உணவகச் சங்கிலியான Perera & Sons Bakers (Private) Limited (P&S), கிராமப்புற சமூகங்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கான மற்றொரு ஊக்கமளிக்கும் திட்டத்தை நிறைவு செய்துள்ளது.

இலங்கையர்களை மகிழ்விக்கும் அதன் 120 வருட பாரம்பரியத்தையும், பெருநிறுவன சமூகப் பொறுப்புக்கான உறுதியான அர்ப்பணிப்பையும் பிரதிபலிக்கும் வகையில், இம்முறை P&S ஆனது குருணாகல் மாவட்டத்தில் உள்ள பஹல கொங்கடவல, வீரபொகுண கிராமத்தின் கிராமப்புற சமூகத்திற்கு உதவிக் கரம் நீட்டியுள்ளது.

இதன் விளைவாக, கிராம மக்களுக்கு சுத்தமான மற்றும் பாதுகாப்பான குடிநீர் கிடைப்பதை உறுதிசெய்யும் வகையில், இலங்கை கடற்படையுடன் இணைந்து, அதிநவீன ரிவர்ஸ் ஒஸ்மோசிஸ் (RO) ஆலையை நிறுவியுள்ளது.

தினமும் சுமார் 1,000 கிராம மக்களுக்கு சேவை செய்து வரும் இந்த RO ஆலை தற்போது சமூகத்தின் அன்றாட நல்வாழ்வை மேம்படுத்தும் ஒரு சிறிய நம்பிக்கையாக உள்ளது.

P&S ஆல் வழிநடத்தப்படும் இந்தத் திட்டமானது இலங்கையின் கிராமப்புறங்களில் சுத்தமான தண்ணீருக்கான அடிப்படைத் தேவையை நிவர்த்தி செய்வதில் குறிப்பிடத்தக்க மைல்கல்லை எட்டியுள்ளது.

## Huawei ICT 2023–2024 இறுதிப் போட்டிக்கு முன்னேறிய மொரட்டுவை பல்கலை அணி




Huawei ICT போட்டி 2023 2024 இன் Huawei ICT போட்டி 20232024 உலகளாவிய இறுதிப் போட்டிகள் மற்றும் பிராந்திய விருது வழங்கும் விழாவிற்கு மொரட்டுவை பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த குழுவினர் வெற்றிகரமாக முன்னேறியுள்ளனர் என்பதை Huawei Sri Lanka மகிழ்ச்சியுடன் அறிவித்துள்ளது. இது ஒரு வரலாற்றுத் தருணமாகும் என்பதுடன், Huawei ஆசிய பசுபிக் இறுதிப் போட்டியில் இலங்கையிலிருந்து ஒரு அணி நாட்டைப் பிரதிநிதித்துவப்படுத்துவது இதுவே முதன் முறையாகும்.

மொரட்டுவை பல்கலைக்கழக அணி, பிராந்திய Huawei ICT போட்டி 2024 இன் Cloud Track இல் ஒப்பிட முடியாத திறன்களையும் நிபுணத்துவத்தையும் வெளிப்படுத்தியிருந்தது. அந்த வகையில், இந்தோனேசியாவில் நடைபெறவுள்ள ஆசிய பசிபிக் இறுதிப் போட்டிகள் மற்றும் விருது வழங்கும் விழாவில் ஒரு இடத்தைப் பெறுவதற்கு அவர்களுக்கு வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. இந்த விருது வழங்கும் விழாவில், அணியின் இறுதித் தரவரிசை அறிவிக்கப்படும்.

மொரட்டுவை பல்கலைக்கழக அணி ஆசிய பசிபிக் இறுதிப் போட்டிக்கு முன்னேறியது குறித்து மகிழ்ச்சி தெரிவித்த, Huawei Enterprise Business Group இன் பிரதித் தலைவர் Ni Xiaopeng, இந்த சாதனையானது மாணவர்கள், கல்வியாளர்கள், பரந்த கல்விச் சூழல் தொகுதி ஆகியவற்றின் கூட்டு முயற்சிகளுக்கு ஒரு சான்றாகும் என வலியுறுத்தினார்.

அது மாத்திரமன்றி, மாணவர்களால் வெளிப்படுத்தப்பட்ட ஒப்பற்ற திறமை மற்றும் அர்ப்பணிப்பு, அத்துடன் மொரட்டுவை பல்கலைக்கழகம் மற்றும் ஒட்டுமொத்த இலங்கையும் வழங்கிய ஆதரவான கல்விச் சூழலையும் அவர் இதன்போது பாராட்டினார்.

# நகர்வலம்



## கீழ் மல்வத்து ஓயா நீர்த்தேக்கத்தின் நிர்மாணப் பணிகளை மீள ஆரம்பிக்க நடவடிக்கை

( திறப்பனை தினகரன் நிருபர் )





கீழ் மல்வத்து ஓயா நீர்த்தேக்கத்தின் நிர்மாணப் பணிகளை மீள ஆரம்பிப்பது சம்பந்தமாக கீழ் மல்வத்து ஓயா பல் நோக்கு அபிவிருத்தி திட்டத்தின் செயற் குழு கூட்டம் அண்மையில் அநுராதபுரம் மாவட்ட செயலகத்தில் மேலதிக மாவட்ட செயலாளர் திருமதி சந்தியா என். ஜி.அபேசேகர ( காணி ) தலைமையில் நடை பெற்றது.

நான்கு பிரதேச செயலகப் பிரிவுகளை உள்ளடக்கிய வகையில் இந்த செயற்திட்டம் முன்னெடுக்கப்படுகின்றது. அவற்றில் மூன்று திட்டம் அநுராதபுர மாவட்டத்தையும், அவற்றுள் ஒன்று மன்னார் மாவட்டத்தையும் உள்ளடக்கி இத்திட்டம் முன் கொண்டு செல்லப்படுகிறது.

அநுராதபுர மாவட்டத்தின் மத்திய நுவரகம் பளாத்த, மஹா விலச்சிய மற்றும் மதவச்சி பிரதேச செயலக பிரிவு அத்துடன் மன்னார் மாவட்டத்தின் செட்டிகுளம் பிரதேச செயலகப் பிரிவு இதனுள் அடங்குகின்றன.

கடந்த 2021 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்த திட்டத்தின் கீழ் மல்வத்து ஓயா பல் நோக்கு அபிவிருத்தித் திட்டம் அண்மைய பொருளாதார அனர்த்தங்கள் போன்ற முக்கிய காரணிகளால் தற்காலிகமாக இடை நிறுத்தப்பட்டிருந்தது. இவ் அபிவிருத்தி திட்டத்தை மீண்டும் ஆரம்பித்து வைக்கும் நோக்கில் இவ்வருடம் 27 ஆயிரம் மில்லியன் ரூபா பணம் இதற்காக ஒதுக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் அநுராதபுர மாவட்டத்தின் மூன்று பிரதேச செயலக பிரிவுகள் உட்பட மன்னார் மாவட்டமும் அதிகளவு பயன் பெறும் எனவும் எதிர்பார்க்கப் படுகிறது.

## அநுராதபுரம், நொச்சியாகம, கிராநேகமையில் 3 மோட்டார் சைக்கிள்கள் திருட்டு

அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்

அநுராதபுரம், நொச்சியாகம மற்றும் கிராநேகம ஆகிய பொலிஸ் பகுதிகளில் 15 இலட்சத்துக்கும் அதிகமான பெறுமதிமிக்க மூன்று மோட்டார் சைக்கிள்களை திருடிச் சென்ற சந்தேக நபர்களை கைது செய்வதற்கு குறித்த பொலிஸ் நிலையங்கள் விசாரணைகளை மேற்கொண்டுள்ளன.

வடமத்திய மாகாண போக்குவரத்து அதிகார சபையின் அநுராதபுரம் பிரதான பஸ் நிலையத்தில் பொறுப்பதிகாரியாக கடமையாற்றும் நபரின் 8 இலட்சம் ரூபா பெறுமதியான மோட்டார் சைக்கிள் விஜேபுர பண்டாரநாயக்க மாவத்தையில் அமைந்துள்ள அவரின் வீட்டில் வைத்து திருடப்பட்டுள்ளதாக அநுராதபுரம் பொலிஸார் தெரிவித்தனர்.

நொச்சியாகம பொலிஸ் பகுதியில் பனன்காத்திய பிரதேசத்தில் நடைபெற்ற இசை நிகழ்ச்சியில் கலந்து கொள்ளச் சென்ற 17 வயது பாடசாலை மாணவனின் 430.000 ரூபா பெறுமதிமிக்க மோட்டார் சைக்கிள் மைதானத்திற்கு அருகிலுள்ள வீடொன்றில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த நிலையில் திருடப்பட்டுள்ளதாக நொச்சியாகம பொலிஸார் தெரிவித்தனர்.

அதேவேளை கிராநேகம பொலிஸ் பகுதியில் தெஹிபாவ சந்தியில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த 280,000 ரூபா பெறுமதிமிக்க மோட்டார் சைக்கிள் திருடப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த பொலிஸ் பகுதிகளில் மோட்டார் சைக்கிள்களை திருடிச் சென்ற சந்தேக நபர்களை கைது செய்வதற்கு விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

## புத்தளம் தாருஸ்ஸலாம் மஸ்ஜிதில் "சுய கற்றல் பகுதி"

புத்தளம் தினகரன் நிருபர்

புத்தளம் தாருஸ்ஸலாம் மஸ்ஜிதில் காலத்தின் தேவையை பூர்த்தி செய்யும் வகையில் "தாருஸ்ஸலாம் சுய கற்றல் பகுதி" புதிதாக (17) உருவாக்கப்பட்டுள்ளது.

புத்தளம் தாருஸ்ஸலாம் மஸ்ஜிதில் பல்வேறு முன்மாதிரியான செயல்பாடுகள் தொடராக நடைபெற்று வருவது வழக்கம்.

அதில் இம்முறை மாணவர்களின் சுய கற்றலை மேம்படுத்தும் வகையில் "தாருஸ்ஸலாம் சுய கற்றல் பகுதி" என்ற பெயரில் மாணவர்களுக்கான கற்றல் வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

இதன் மூலம் தாருஸ்ஸலாம் மஸ்ஜிதின் சுய கற்றல் பகுதி செயற்பாட்டுக்கு வந்துள்ளது.

தற்போதைய காலப்பகுதியில் வீட்டில் அமைதியான சூழலில் மாணவர்கள் கற்பது பாரிய சவாலாக உருவெடுத்துள்ள நிலையில் ஒவ்வொரு மஸ்ஜிதும் மாணவர்களுக்கென சுய கற்றலுக்கு ஒரு பகுதி ஒதுக்க வேண்டும் என்ற காலத்தின் தேவையை கருதி முன்மாதிரியாக தாருஸ்ஸலாம் மஸ்ஜிதில் இந்த முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தாருஸ்ஸலாம் சுய கற்றல் பகுதியிலே விரும்பிய மாணவர்கள் வருகை தந்து சுய கற்றலில் ஈடுபடலாம்.

இதற்கு மேலதிகமாக பாடப்பகுதிகளில் விளக்கம் தேவைப்படும் பொழுது பிரதேச வாசிகளின் துறை சார்ந்தவர்கள் மூலம் விளக்கமளிக்கப்படும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் ஆண்டிமுனை வளர்மதி அணி வெற்றி

உடப்பு குறூப் நிருபர்





உடப்பு கிரிக்கெட்(யு.சி.சி) சம்மேளனத்தினால் நடாத்தப்பட்ட 2024க்கான மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டியொன்று கடந்த பத்து நாட்களாக ஆண்டிமுனை பொது விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது.

இதில் அணிக்கு எட்டு ஓவர் கொண்ட சுற்றுப் போட்டியில் 11அணிகள் பங்குபற்றியது. இறுதிச் சுற்றுப் போட்டியில் செல்வபுரம் நாகதம்பிரான் விளையாட்டுக் கழகமும், ஆண்டிமுனை வளர்மதி விளையாட்டுக் கழகமும் போட்டியிட்டன. வியாழக்கிழமை(18) இடம்பெற்ற இறுதிச் சுற்றுப் போட்டியில் முதலில் துடுப்பாடிய வளர்மதி அணியினர் 123 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்கு துடுப்பாடிய நாகதம்பிரான் அணியினர் சகல விக்கட்டுக்களையும் இழந்து 93 ஓட்டங்களைப் பெற்றது.இதன் போது 30 மேலதிக ஓட்டங்களால் வளர்மதி அணியினர் வெற்றி பெற்று 2024 வருடத்துக்கான வெற்றிக் கேடயத்தைச் சுவீகரித்துக் கொண்டது.

இந்த நிகழ்வுக்கு உடப்பு 6ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த கந்தையா நல்லநாயகி அனுசரணை வழங்கியதுடன், உடப்பு இந்து ஆலய பரிபாலன சபையின் புதிய தலைவர் க.சின்னராசா மற்றும் ஓய்வு பெற்ற ஆசிரியர் க.பகீரதன் ஆகியோர் கலந்து கொண்டு வெற்றி பெற்ற வீரர்களுக்கு கேடயங்களையும் பணப்பரிசுகளையும் வழங்கி வைத்தார்கள். இதில் வெற்றி பெற்ற வளர்மதி கழகத்தினருக்கு 60ஆயிரம் ரூபா பணப் பரிசும், இரண்டாம் இடத்தைப் பெற்ற நாகதம்பிரான் கழகத்தினருக்கு 30ஆயிரம் ரூபா பணப்பரிசும் வழங்கி வைக்கப்பட்டது.

## பேருவளையில் ஓய்வுபெற்ற அதிபர்கள், ஆசிரியர்கள் கௌரவிப்பு விழா



ஆசிரியர்கள் கௌரவிப்பு விழா தினகரனின் 92 ஆவது ஆண்டு நிறைவையொட்டி களுத்துறை மாவட்டத்தில் உள்ள தமிழ் மொழி மூ ல பாடசாலைகளின் ஓய்வுபெற்ற அதிபர்கள் மற்றும் பே ரு வளை தேர்தல் தொகுதியில் உ ள்ள தமிழ் மொழிமூல பாடசாலைகளின் ஓய்வுபெற்ற ஆசிரியர்கள் கௌரவிக்கப்படவுள்ளனர்.

இந்த கௌரவிப்பு விழா பேருவளை ஸேம் ரிபாய் ஹாஜியார் வித்தியாலய அஷ்செய்க் முஸ்தபா வலியுல்லாஹ் கேட்போர்கூடத்தில் எதி ர்வரும் 19.05.2024 ஆம் திகதி காலை 9 மணிக்கு தினகரன் மற்றும் தி னகரன் வாரமஞ்சரி பிரதம ஆசிரியர் தே. செந்தில்வேலவர் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதற்கான ஏற்பாடுகளை தொழிலதிபரும் சமூக சேவையாளருமான எம். பாஸி ஸுபைர் மேற்கொண்டு வருகிறார். பேருவளைத் தேர்தல் தொகுதியில் உள்ள பாடசாலைகளான மக்கொன அல்ஹஸனியா மகா வித்தியாலயம், சீனன்கோட்டை அ ல் ஹ ு மை ம ஸ ர ா தேசிய பாடசாலை, சீ னன் கோ ட் டை நளீம் ஹாஜியார் மகளிர் கல்லூரி, மாளிகாஹேன ஸேம் ரிபாய் ஹாஜியார் தேசிய பாடசாலை, மருதானை அல்பாஸியதுல் நஸ்ரியா பெண்கள் பாடசாலை, மஹகொட ஐ.எல்.எம். ஸம்ஸுதீன் வித்தியாலயம், தர்காநகர் ஸாஹிராக் கல்லூரி, தர்காநகர் அல்ஹம்றா மகா வித்தியாலயம், தர்காநகர் முஸ்லிம் பெண்கள் தேசிய பாடசாலை ஆகியவற்றில் கடமை புரிந்து ஓய்வு பெற்ற அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் களுத்துறை மாவட்டத்தில் உள்ள தமிழ் மொழிமூல தமிழ், முஸ்லிம் பாடசாலைகளில் கடமையாற்றி ஓய்வு பெற்ற அதிபர்கள் கௌரவிக்கப்படவுள்ளனர்.

பேருவளை மாளிகாஹேன ஸேம் ரிபாய் ஹாஜியார் வித்தியாலய அதிபர் எஸ்.ஆர். குமாரை கௌரவிக்கும் நிகழ்வும் இங்கு நடைபெறவுள்ளது. மேலதிக விபரங்களை 077 0812420 என்ற தொலைபேசி இலக்கத்தில் தொழிலதிபரும் சமூக சேவையாளருமான எம். பாஸி ஸுபைரை தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம்.

## மார்ச் 12 இயக்கத்தின் ஏற்பாட்டில் புத்தளத்தில் மக்கள் மேடை

புத்தளம் தினகரன் நிருபர்





பு த் த ள ம் மாவட்ட மார்ச் 12 இயக்கத்தின் ஏற்பாட்டில் அரசியல் தலைவர்களுக்கும் மக்களுக்கும் இடையே முக்கியமான கருத்துப் பரிமாற்றத்துக்கான "மக்கள் மேடை" வியாழக்கிழமை (18) காலை புத்தளம் மர்ஹூம் கே.ஏ.பாயிஸ் ஞாபகார்த்த கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

"தூய்மையான அரசியலுக்காக ஒன்றிணைவோம்" என்பது இந்நிகழ்வின் தொனிப்பொருளாகும்.

மார்ச் 12 இயக்கத்தின் புத்தளம் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் முஹம்மது ருமைஸ் தலைமையில், தேர்தல் வன்முறைகளை கண்காணிக்கும் நிலையத்தின் (IRES) நிறைவேற்றுப் பணிப்பாளர் மஞ்சுள கஜனாயக்கவின் நெறிப்படுத்தலில் நடைபெற்ற இந்நிகழ்வில் புத்தளம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிந்தக அமல் மாயாதுன்ன, பாராளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீமின் செயலாளர் முஹம்மது நௌபல், தேசிய மக்கள் சக்தியின் நிறைவேற்று குழு உறுப்பினர், பாராளுமன்ற உறுப்பினர் ஜகத் பிரியங்கரவின் புத்தளம் தொகுதி இணைப்பாளர், சமய தலைவர்கள், சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகள், சமூக ஆர்வலர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

அரசியல் பிரமுகர்களின் எதிர்கால திட்டங்கள் தொடர்பான உரைகளை தொடர்ந்து பொதுமக்களின் கருத்துக்களும் முன்வைக்கப்பட்டன.

## அட்டன் ஸ்ரீ மாணிக்கப் பிள்ளையார் ஆலயத்தில் மாம்பழத்திருவிழா







(அட்டன் விசேட நிருபர் )





அட்டன் ஸ்ரீ மாணிக்கப்பிள்ளையார் ஆலயத்தின் மகா கும்பாபிசேக பெருவிழா கடந்த மாதம் 25ம் திகதி ஆயிரக்கணக்கான பக்தர்கள் புடைசூழ மிகச்சிறப்பாக நடைபெற்றது. இந்த கும்பாபிசேகத்தினை தொடர்ந்து 48 நாள் மண்டல அபிசேகம் நடைபெற்று வரும் நிலையில் அண்மையில் மண்டல அபிசேகத்துடன் மாம்பழத்திருவிழா மேளதாள வாத்தியங்கள் முழங்க மிகச்சிறப்பாக நடைபெற்றது.

கணபதி வழிபாடு, வசந்த மண்டப பூஜை, புஸ்பாஞ்சலி, ஆசிர்வாத பூஜை, அலங்கார அபிசேக பூஜைகள் ஆகியன இடம்பெற்று சுவாமி உள்வீதிவலம் இடம்பெற்றது. அதனைத்தொடர்ந்து மேள தாள வாத்திய இசைகள் இசைக்கப்பட்டு மாணவர்களின் பரதநாட்டிய நிகழ்வும் இடம்பெற்றது.

ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ சந்திரானந்த சர்மா தலைமையில் நடைபெற்ற பூஜை வழிபாடுகளில் சிவாச்சாரியார்கள் பலரும் குருமார்களும் பெரும் எண்ணிக்கையிலான பக்த அடியார்களும் கலந்து கொண்டனர். உபயத்தினை தொழிலதிபர் ஆர்.கிருஸ்ணமூர்த்தி வழங்கியிருந்தார். அதனைத்தொடர்ந்து அன்னதானத்துடன் விழா இனிதே நிறைவுபெற்றது.

## இஸ்லாமிய கலை கலாசார நிகழ்ச்சியின் இறுதி மேடை நிகழ்வுகள்

புத்தளம் தினகரன் நிருபர்

புத்தளம் ஸாலிஹீன் மஸ்ஜிதால் நடத்தப்பட்ட இஸ்லாமிய கலை கலாசார நிகழ்ச்சியின் இறுதி மேடை நிகழ்வுகள் வெள்ளிக்கிழமை (26) மாலை 04 மணி முதல் மஸ்ஜிதுக்கு முன்பாக அமைந்துள்ள திறந்த வெளி அரங்கில் நடைபெற உள்ளது.

அவர்களில் சுமார் 400 பிள்ளைகளுக்கான சான்றிதழ்கள், பதக்கங்கள் மற்றும் நினைவுச் சின்னங்கள் ஏற்கனவே வழங்கி வைக்கப்பட்டுள்ளன. இங்கு விவாத அரங்கு, இஸ்லாமிய கீதங்கள், பாரம்பரிய கோலாட்டம், வில்லுப்பாட்டு, ரபான் அடித்தல் போன்ற பல்வேறு நிகழ்வுகள் அரங்கேற உள்ளன.

# விரைவில் ஓய்வு பெற சமரி திட்டம்



இலங்கை மகளிர் அணித் தலைவி சமரி அத்தபத்து விரைவில் ஓய்வு பெறுவது குறித்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்துள்ளார்.

தென்னாபிரிக்காவுக்கு எதிரான மூன்றாவது ஒருநாள் போட்டியில் உலக சாதனை வெற்றியை பெற்று தொடரை 1–1 என சமன் செய்த பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட சமரி, ஓய்வு குறித்து குறிப்பிட்டார்.

'எனது ஓய்வு மிக விரைவில் இடம்பெறும். எனக்கு திகதியை குறிப்பிட முடியாது, ஆனால் மிக விரைவில் இடம்பெறும். இப்போது இளம் வீராங்கனைகள் மீது நான் அவதானம் செலுத்துகிறேன். இளம் அணி ஒன்றை கட்டி எழுப்பியுள்ளேன். இந்த இளம் வீராங்கனைகளை ஒருநாள் உலகக் கிண்ணத்துடன் பார்க்க நான் விரும்புகிறேன்' என்று அவர் கூறினார்.

34 வயதான சமரி அத்தபத்து கடந்த 15 ஆண்டுகளாக இலங்கை அணியில் ஆடி வருவதோடு அவரது தலைமையில் இலங்கை மகளிர் அணி முதல் முறை நியூசிலாந்து, இங்கிலாந்து மற்றும் தென்னாபிரிக்க அணிகளுக்கு இடையிலான தொடர் வெற்றிகளை பெற்றது.

இந்நிலையில் இலங்கை மகளிர் அணி அடுத்து ஐக்கிய அரபு இராச்சியத்தில் நடைபெறும் டி20 உலகக் கிண்ண தகுதிகாண் போட்டியில் ஆடவுள்ளது.

'கடந்த 15 ஆண்டுகளாக நான் கடுமையாக உழைத்து வருவதோடு ஒரு வீராங்கனையாக சில அடைவுகளையும் பெற்றுள்ளேன். ஆனால் அணித் தலைவியாக இன்னும் சாதிக்க விரும்புகிறேன். எனது அணி இந்த உலகக் கிண்ண அரையிறுதிக்கு முன்னேறுவதை பார்க்க நான் விரும்புகிறேன்' என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# வளர்மதி அணி வெற்றி

உடப்பு குறூப் நிருபர்



உடப்பு கிரிக்கெட் சம்மேளனத்தினால் நடாத்தப்பட்ட கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் ஆண்டிமுனை வளர்மதி விளையாட்டுக் கழகம் சம்பியன் கிண்ணத்தை வென்றது.

ஆண்டிமுனை பொது விளையாட்டு மைதானத்தில் நேற்று முன்தினம் (18) நடைபெற்ற இறுதிப் போட்டியில் செல்வபுரம் நாகதம்பிரான் அணியை வளர்மதி அணி வீழ்த்தியது. இந்த சுற்றுப்போட்டியில் 11 அணிகள் பங்கேற்றிருந்தமை குறிப்பிடத்தக்க.



அம்பாறையில் நேற்றுமுன்தினம் (18) நடைபெற்ற அம்பாறை மாவட்ட விளையாட்டு விழாவின் பூப்பந்தாட்ட பெண்கள் போட்டியில் வெற்றியீட்டிய காரைதீவு பிரதேச செயலக அணியை படத்தில் காணலாம். இதன் இரண்டாம் இடத்தை அம்பாறை பிரதேச செயலக அணி பெற்றது.
(படம்: காரைதீவு குறூப் நிருபர்)

# ஐ.நாவில் பலஸ்தீனத்தை நிராகரித்தது அமெரிக்கா



ஐக்கிய நாடுகள் சபையில் பலஸ்தீனம் முழு அங்கத்துவம் பெறுவதை தடுக்கும் வகையில் அமெரிக்கா பாதுகாப்புச் சபையில் தனது வீட்டோ அதிகாரத்தை பயன்படுத்தியுள்ளது.


பலஸ்தீனத்திற்கு முழு அங்கத்துவத்தை பெறுவதற்கு ஐ.நா பொதுச் சபைக்கு பரிந்துரைப்பதற்காகவே பாதுகாப்புச் சபையில் நேற்று முன்தினம் (18) வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. இதில் 15 அங்கத்துவ நாடுகளைக் கொண்ட பொதுச் சபையில் 12 நாடுகள் ஆதரவு வழங்கியபோதும் பிரிட்டன் மற்றும் சுவிட்சர்லாந்து வாக்களிப்பதை தவிர்த்தன.

'இரு நாட்டுத் தீர்வை அமெரிக்கா தொடர்ந்தும் வலுவாக ஆதரிக்கிறது. இந்த வாக்கு பலஸ்தீன நாட்டுக்கு எதிரானது இல்லை என்றபோதும், தரப்புகளுக்கு இடையிலான நேரடி பேச்சுவார்த்தை மூலம் மாத்திரமே அது செயற்படுத்தப்பட வேண்டும்' என்று ஐ.நாவுக்கான அமெரிக்க பிரதித் தூதுவர் ரொபட் வூட் பாதுகாப்புச் சபையில் தெரிவித்தார்.

அமெரிக்கா வீட்டோவை பயன்படுத்தியதற்கு கண்டனத்தை வெளியிட்ட பலஸ்தீன ஜனாதிபதி மஹ்மூத் அப்பாஸ், இந்த செயல் 'நியாயமற்றது, தார்மீகமற்றது மற்றும் நியாயப்படுத்த முடியாதது' என்று சாடினார்.

ஐ.நாவில் தற்போது கண்காணிப்பு நாடாக இருக்கும் பலஸ்தீனம் அதில் முழு அங்கத்துவம் பெறுவதற்கு பாதுகாப்பு சபையின் பரிந்துரையை பெற்று பின்னர் 193 அங்கத்துவ நாடுகளைக் கொண்ட பொதுச் சபையில் குறைந்தது மூன்றில் இரண்டு வாக்குகளை பெற வேண்டும்.

# சீன விமானங்களை குறைக்க கோரிக்கை



சீனாவுக்கு மேலதிக விமானங்களை சேவையில் ஈடுபடுத்துவதற்கு அனுமதி வழங்க வேண்டாமென அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

அமெரிக்க விமானங்களையும் விமானத்துறை ஊழியர்களையும் பாதிக்கும் வகையிலான கொள்கைகளை சீனா முன்னெடுப்பதாகக் குறிப்பிட்டு அந்நாட்டின் விமான சேவைகள் துறையைச் சேர்ந்த நான்கு அமைப்புகள் இக்கோரிக்கையை முன்வைத்திருப்பதோடு அமெரிக்க விமானத்துறையினதும் அதன் ஊழியர்களதும் நலன்கள் உத்தரவாதப்படுத்தப்படும் வரை இரு நாடுகளுக்கும் இடையில் மேலதிக விமானங்களை சேவையில் ஈடுபடுத்துவதை நிறுத்துமாறும் கோரியுள்ளது.

கொவிட் பெருந்தொற்றுக்கு பின்னர் விமான சேவைகளைப் படிப்படியாக மீட்டெடுக்கவென அமெரிக்காவுக்கான நேரடி பயணிகள் விமானங்களை மேலும் அதிகரிக்க சீன விமான நிறுவனங்களுக்கு அனுமதிப்பதாக அமெரிக்கா அறிவித்த விரைவில் இக்கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

## கிழக்கின் குரல்



# இஸ்ரேலின் தாக்குதலை ஈரான் குறைமதிப்பீடு: விரைந்து பதில் நடவடிக்கையை தவிர்த்தது



ஈரான் மீது இஸ்ரேல் நேற்று பதில் தாக்குதல்களை நடத்திய நிலையில், இஸ்ரேல் மீது ஈரான் நடத்திய ஏவுகணை மற்றும் ஆளில்லா விமானத் தாக்குதல்களுக்கான மட்டுப்படுத்தப்பட்ட பதில் நடவடிக்கையாக இது அமைந்தது என்று இஸ்ரேல் மற்றும் மேற்கத்திய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

தாக்க வரும் இலக்குகளை ஈரான் வான் பாதுகாப்பு அமைப்பு சுட்டு வீழ்த்தியதோடு மத்திய ஈரானின் அஸ்பாஹான் மற்றும் வட மேற்கு ஈரானின் தப்ரிஸ் நகரங்களில் வெடிப்புகள் இடம்பெற்றுள்ளன.

எனினும் ஈரான் அரச ஊடகம் இந்தத் தாக்குதல்களை குறைத்துக் கூறியதோடு, தாக்குதலையடுத்து கொண்டுவரப்பட்ட வான் கட்டுப்பாடுகளையும் தளர்த்தியது.

ஈரான் மீது தாக்குதல் நடத்தும் திட்டத்தை இஸ்ரேல் கடந்த வியாழக்கிழமை மாலை தனது நெருங்கிய கூட்டாளியான அமெரிக்காவுக்கு அறிவித்தது.

எனினும் இந்த எச்சரிக்கையில் தாக்குதல் தொடர்பில் விபரம் வெளியிடப்படவில்லை. ஆனால், ஈரான் மற்றும் அதனை சூழவுள்ள பகுதிகளை தவிர்ப்பதற்கு அறிவுறுத்தி இருப்பதோடு குறிப்பிட்ட இராணுவ திட்டங்கள் அல்லது ஈரானிய புரட்சிக் காவல் படையுடன் தொடர்புபட்ட இடங்கள் மீது அவதானம் செலுத்தப்பட்டதாக அந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மறுபுறம், சிரியாவின் தெற்கு பிராந்தியத்தில் உள்ள வான் பாதுகாப்பு நிலைகளை இலக்கு வைத்து இஸ்ரேலிய ஏவுகணைகள் தாக்குதல் நடத்தியதாக அந்நாட்டு இராணுவத்தை மேற்கோள்காட்டி சிரிய அரச ஊடகமான சனா செய்தி வெளியிட்டது.

ஈரான் மீதான தாக்குதல்கள் இஸ்ரேலில் இருந்து நடத்தப்பட்டதையும் அது மட்டுப்படுத்தப்பட்டதாக இருந்தது என்பதையும் மூன்று மேற்கத்திய அதிகாரிகள் உறுதி செய்துள்ளனர். இந்தத் தாக்குதலுக்கு இஸ்ரேல் ஏவுகணைகளை பயன்படுத்தி இருப்பதாக அமெரிக்க ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

எனினும் ஈரானுக்கு எதிரான நடவடிக்கைகள் தொடர்பில் கருத்து வெளியிடுவதை இஸ்ரேலிய அரசு மற்றும் இராணுவம் மறுத்து வரும் கொள்கையை கடைப்பிடித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

மறுபுறம் ஈரானிய வான் பாதுகாப்பு அமைப்பு அஸ்பஹான் நகருக்கு மேலால் பறந்த மூன்று ஆளில்லா விமானங்கள் மீது நடத்திய தாக்குதலால் சிறு எண்ணிக்கையிலான வெடிப்புகள் இடம்பெற்றதாக இந்தத் தாக்குதலை ஈரானிய ஊடகம் மற்றும் அதிகாரிகள் விபரித்துள்ளனர். பதில் தாக்குதல் ஒன்றை தவிர்க்கும் வகையில் இந்த சம்பவத்தை இஸ்ரேலின் தாக்குதல் என்பதற்கு பதில் 'ஊடுருவிகளால்' நடத்தப்பட்ட தாக்குதல் என்றே அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இந்த சம்பவத்திற்காக இஸ்ரேலுக்கு எதிரான பதில் நடவடிக்கை எடுக்க எந்தத் திட்டமும் இல்லை என்று ஈரானிய அதிகாரி ஒருவர் ரோய்ட்டர்ஸ் செய்தி நிறுவனத்திற்கு தெரிவித்துள்ளார்.

'சம்பவத்தின் வெளி மூலம் உறுதி செய்யப்படவில்லை. நாம் எந்த வெளித் தாக்குதலையும் சந்திக்கவில்லை என்பதோடு இது தாக்குதலை விட ஊடுருவலாகவே விவாதிக்கப்படுகிறது' என்று அந்த அதிகாரி குறிப்பிட்டுள்ளார்.

இஸ்பஹான் நகரில் ஈரானின் இராணுவ விமானத் தளம் மற்றும் முக்கியமான அணு திட்ட தளம் ஒன்று அமைந்துள்ளது. எனினும் அவை பாதுகாப்பாக இருப்பதாக ஈரானின் தஸ்மின் செய்தி நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

இஸ்பஹானில் வான் பாதுகாப்பு அமைப்பு சில வான் பொருட்களை சுட்டு வீழ்த்தியதாகவும் எந்த சேதமும் ஏற்படவில்லை என்றும் ஈரானின் உயர் இராணுவத் தளபதியான அப்துல்ரஹ்மான் மூசாவி அரச ஊடகத்திற்கு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் விசாரணைகள் நடத்தப்படுவதாகவும் அந்த முடிவுகள் அறிவிக்கப்படும் என்றும் தெரிவித்துள்ளார்.

நேற்று தேசிய தொலைக்காட்சியில் பேசிய ஈரான் ஜனாதிபதி இப்ராஹிம் ரைசி இந்தத் தாக்குதல்கள் தொடர்பில் எதுவும் கூறவில்லை என்பதோடு, கடந்த வாரம் நடத்தப்பட்ட இஸ்ரேலுக்கு எதிரான தாக்குதலை பாராட்டிப் பேசினார்.

கடந்த ஏப்ரல் 1 ஆம் திகதி சிரிய தலைநகர் டமஸ்கஸில் ஈரானிய துணைத் தூதரகத்தின் மீது நடத்தப்பட்ட தாக்குதலுக்கு பதிலடியாகவே ஈரான் கடந்த வாரம் இஸ்ரேல் மீது 300க்கும் அதிகமான ஏவுகணைகள் மற்றும் ஆளில்லா விமானங்கள் மூலம் தாக்குதல் நடத்தியது. இது இஸ்ரேல் மீது ஈரான் நடத்தி முதல் நேரடித் தாக்குதலாகவும் இருந்தது.

இஸ்ரேலின் எந்த ஒரு பதில் தாக்குதலுக்கும் கடுமையாக பதிலடி கொடுக்கப்படும் என்று ஈரான் ஜனாதிபதி முன்னதாக எச்சரித்திருந்தார்.

நேற்றைய தாக்குதல்கள் தொடர்பில் ஈரானிய செய்திகளில் இஸ்ரேல் பற்றி எதுவும் குறிப்பிடவில்லை. எனினும் இஸ்ரேலில் பாதுகாப்பு தொடர்ந்து உசார் நிலையில் வைக்கப்பட்டிருப்பதோடு ஜெருசலத்தில் உள்ள அமெரிக்க தூதரக உழியர்களுக்கு அந்த நாடு பயணக் கட்டுப்பாடுகளை விதித்திருப்பதோடு அமெரிக்க பிரஜைகளுக்கு அவதானத்துடன் இருக்கும்படியும் அறிவுறுத்தியுள்ளது.

# பலஸ்தீனர்களின் கடைசி அடைக்கலமான ரபாவையொட்டி இஸ்ரேலிய படை குவிப்பு

## படையெடுப்பு அச்சம் அதிகரிப்பு: தாக்குதல்களும் தீவிரம்



காசா மக்களின் கடைசி அடைக்கலமாக உள்ள ரபா நகரை ஒட்டிய பகுதிகளில் இஸ்ரேலிய துருப்புகள் குவிக்கப்பட்டு வரும் நிலையில், அந்த நகர் மீதான படையெடுப்பு ஒன்று பற்றி அச்சம் அதிகரித்துள்ளது.

காசாவின் தென் முனையில் எகிப்துடனான எல்லையில் அமைந்திருக்கும் ரபாவில் காசா மக்கள் தொகையில் பாதிக்கும் அதிகமானோர் அடைக்கலம் பெற்றுள்ளனர். இங்கு பெரும் நெரிசல் மற்றும் உணவுப் பொருட்களுக்கு நிலவும் பற்றாக்குறைக்கு மத்தியில் கூடாரங்கள் மற்றும் வெட்ட வெளிகளில் தங்கியுள்ள பலஸ்தீனர்கள் மீதான இஸ்ரேலின் தாக்குதல்கள் அண்மைய நாட்களில் தீவிரம் அடைந்துள்ளன.

காசாவில் இஸ்ரேலிய தரைப் படை இன்னும் நுழையாத ஒரே இடமாக இருக்கும் ரபா மீது படை நடவடிக்கை ஒன்றை மேற்கொள்ள இஸ்ரேல் நீண்ட காலமாக திட்டமிட்டு வருகிறது.

எனினும் இந்த இராணுவ நடவடிக்கை குறித்து அமெரிக்கா மீண்டும் ஒருமுறை இஸ்ரேலிடம் கவலையை வெளியிட்டுள்ளது. இந்நிலையில் தமது அக்கறை தொடர்பில் கவனம் செலுத்தப்படுவதாக இஸ்ரேலிய பிரதமரின் பிரதிநிதிகள் இணங்கியதாக வெள்ளை மாளிகை தெரிவித்துள்ளது.

பெரும் உயிர்ச்சேதங்களை ஏற்படுத்தும் அபாயம் உள்ள ரபா நகர் மீதான படையெடுப்பை மேற்கொள்வது தொடர்பில் அமெரிக்கா, இஸ்ரேலை தொடர்ந்து எச்சரித்து வருகிறது.

எனினும் ஹமாஸை ஒழிக்கும் படை நடவடிக்கையின் அங்கமாக ரபா மீதான படையெடுப்பு ஒன்றை முன்னெடுப்பது பற்றி இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு தொடர்ந்து வலியுறுத்தி வருகிறார்.



இந்நிலையில் ரபா மீதான இஸ்ரேலின் தாக்குதல்கள் அண்மைய நாட்களில் தீவிரம் அடைந்துள்ளன. தெற்கு ரபாவில் உள்ள இடம்பெயர்ந்த பலஸ்தீனர்கள் வசித்த வீட்டின் மீது இஸ்ரேல் நடத்திய புதிய தாக்குதல் ஒன்றில் அங்கிருந்தவர்கள் உடல் சிதறுண்டு உயிரிழந்திருப்பதாக அயலவர்கள் மற்றும் உறவினர்கள் ஏ.எப்.பி. செய்தி நிறுவனத்திடம் தெரிவித்துள்ளனர்.

இந்த வெடிப்பில் குறைந்தது 10 பேர் கொல்லப்பட்டதாக அல் அர்ஜா என்பவர் குறிப்பிட்டுள்ளார். 'சிறுவர்கள் மற்றும் பெண்களின் கைகள், கால்கள் என உடல் பாகங்களை மீட்டோம். அவை துண்டு துண்டாக சிதறிக் கிடந்தன. இது சாதாரணமானதல்ல, பயங்கரமாக இருந்தது' என்று அவர் குறிப்பிட்டார்.

கடந்த ஒக்டோபர் 7 ஆம் திகதி போர் வெடித்த விரைவில் வடக்கு காசாவில் வசிக்கும் பலஸ்தீனர்கள் ரபா போன்ற தெற்கு காசா நகரங்களின் பாதுகாப்பு வலயங்களுக்கு வெளியேறும்படி இஸ்ரேல் உத்தரவிட்டது.

ஆனால், தற்போது 1.5 மில்லியன் மக்கள் வசிக்கும் இந்த நகரை தாக்கப்போவதாக இஸ்ரேல் இராணுவம் எச்சரித்து வருகிறது.

'ரபா எப்படி பாதுகாப்பான இடமாக இருக்க முடியும்?' என்று கொல்லப்பட்டவர்களின் உறவினர் ஒருவரான சியாத் அய்யாத் கேள்வி எழுப்பினார். 'கடந்த இரவில் நான் குண்டு சத்தங்களை கேட்டேன், பின்னர் படுக்கச் சென்று விட்டேன். எனது அத்தை வீடு தாக்கப்பட்டிருப்பது எனக்குத் தெரியாது' என்றும் அவர் கூறினார்.

இந்தத் தாக்குதல் இடம்பெற்ற பகுதியில் பரிய பள்ளம் ஏற்பட்டிருக்கும் நிலையில் தேடுதல் நடவடிக்கையும் பெரும் வேதனை தருவதாக உள்ளது என்று உறவினர்கள் மற்றும் அயலவர்கள் தெரிவிக்கின்றனர்.

'அவர்களை இடிபாடுகளுக்கு கீழ் எம்மால் பார்க்க முடிகிறது. எம்மால் அவர்களை மீட்க முடியவில்லை' என்று அல் அர்ஜா குறிப்பிட்டார். 'இவர்கள் தெற்கு பாதுகாப்பானது என்று கூறியதால் வடக்கில் இருந்து வந்தவர்கள். எந்த முன் எச்சரிக்கையும் இல்லாமல் இவர்கள் தாக்கப்பட்டார்கள்' என்றும் அவர் கூறினார்.

கடந்த செவ்வாய்க்கிழமை ரபாவின் அல் சலாம் பகுதியில் வீடு ஒன்று தாக்கப்பட்டதை அடுத்து மீட்பாளர்கள் அங்கிருந்து ஐந்து சிறுவர்கள் உட்பட எட்டு குடும்ப உறுப்பினர்களின் உடல்களை மீட்டதாக காசா சிவில் பாதுகாப்பு சேவை குறிப்பிட்டது.

'இடம்பெயர்ந்த மக்களின் வீட்டின் மீது இஸ்ரேலிய ரொக்கெட் குண்டு ஒன்று விழுந்தது' என்று குடியிருப்பாளரான சமி நைராம் குறிப்பிட்டார். 'எனது சகோதரியின் மருமகன், அவளது மகள் மற்றும் குழந்தைகள் இரவு உணவை சாப்பிட்டுக் கொண்டிருக்கும்போதே அவர்களின் தலைகளுக்கு மேலால் ஏவுகணை விழுந்து வீட்டை தகர்த்துள்ளது' என்றும் அவர் கூறினார்.

ராபாவில் தாக்குதல்கள் அதிகரிக்கப்பட்டு அந்த நகரை ஒட்டிய பகுதிகளில் இஸ்ரேலிய துருப்புகள் குவிக்கப்பட்டிருக்கும் நிலையில் அந்த நகர் மீதான படையெடுப்புகான சமிக்ஞைகள் அதிகரித்திருப்பதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

ரபா மாவட்டத்தை ஒட்டிய அனைத்து பகுதிகளிலும் மேலதிக இஸ்ரேலிய துருப்புகள் குவிக்கப்பட்டுள்ளன. ரபாவின் கிழக்கு பகுதியில் உள்ள விவசாய நிலத்தின் பெரும் பகுதியை இஸ்ரேலிய துருப்புகள் நேற்றுக் கைப்பற்றி இருப்பதாக அங்கிருக்கும் செய்தியாளர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

ஏற்கனவே காசாவின் மற்றப் பகுதிகள் இஸ்ரேலின் தாக்குதலால் அழிக்கப்பட்டிருக்கும் சூழலில் ரபா தாக்கப்படும் பட்சத்தில் எங்கு செல்வது என்று அங்குள்ள மக்கள் அச்சத்தில் உள்ளனர். அங்குள்ள பலஸ்தீனர்களை வெளியேற்றுவது குறித்து இஸ்ரேல் கூறிவருகின்றபோதும் அது நடைமுறை சாத்தியம் இல்லை என்று அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

காசாவின் ஏனைய பகுதிகளிலும் இஸ்ரேலின் தாக்குதல்கள் நேற்றும் தொடர்ந்தன. வடக்கு காசாவின் காசா நகர் மற்றும் மத்திய காசாவின் நுசைரத் நகர் மீது இஸ்ரேலிய போர் விமானங்கள் நடத்திய தாக்குதல்களில் குறைந்தது ஒன்பது போர் கொல்லப்பட்டதாக பலஸ்தீன செய்தி நிறுவனமான வபா குறிப்பிட்டது.

கடந்த ஆறு மாதங்களுக்கு மேலாக இஸ்ரேல் நடத்தி வரும் இடைவிடாத தாக்குதல்களில் காசாவில் கொல்லப்பட்ட பலஸ்தீனர்கள் எண்ணிக்கை 34 ஆயிரத்தை நெருங்கியுள்ளது.